REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 5 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 211 | September 05,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil கேட்டு வாங்குங்கள்...
செப்டெம்பர் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!


## கிழக்கு கடலில் எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்க் கப்பல்;

# நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்த பிரதமர் பணிப்பு





### உரிய அதிகாரிகளுடன் தொலைபேசியில் கலந்துரையாடி நடவடிக்கை

கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி எரிந்துக்கொண்டிருக்கும் எம்.ரி. நிவ் டயமன்ட் கப்பலால் இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுக்குமாறு கடலோர பாதுகாப்பு, கடலோர வள முமைத்துவ திணைக்களத்துக்கும் ஏனைய பொறுப்புடைய அரச நிறுவனங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். பொறுப்புடைய அரச நிறுவனங்களின் உரிய அதிகாரிகளை நேற்றுமுன்தினம் இரவு தொலைபேசியில் அழைத்தே பிரதமர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளதாக பிரதமரின் செயலாளர் சிறிநிமால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் நேரடி அறிவுறுத்தலின் பேரில் அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் கடல்சார் பாதுகாப்பு அதிகார சபையால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பனாமா அரசிற்குச் சொந்தமான எம்.ரி நிவ் டயமன்ட் கப்பல் குவைத்திலிருந்து இந்தியாவுக்குச்

06

## மசகு எண்ணெய் கசிவுக்கான சாதகத் தன்மைகள் மிகவும் குறைவு

### கடற்படை தெரிவிப்பு

சுப்பிரமணியம் நிஷாந்தன்

தீப்பிடித்து எரியும் கப்பலிலிருந்து எண்ணெய்க் கசிவுக்கான சாதகத் தன்மைகள் மிகவும் குறைவானதாகவே இருக்கிறதென கடற்படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் வை.என்.ஜயரட்ண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகியுள்ள கப்பல் தற்போது 22 கடல் மைல்கள் தொலைவில் நிலைகொண்டுள்ளது. இந்த இடத்தின் ஆழம் 3.1 கிலோ மீற்றாக உள்ளது.

கப்பலில் ஏற்பட்டுள்ள தீயை கட்டுப்படுத்துவதே எமது முதலாவது இலக்காகவுள்ளது. மீண்டும் தீ பரவல் ஏற்படுவதை தடுப்பதற்காகவே தீயை கட்டுப்படுத்துவதற்கு முனைந்துள்ளோம். என்றாலும் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதும் இதிலிருந்து ஒரு வாரம் வரை

06

## கிழக்கு கடற்பரப்பில் தீவிபத்துக்குள்ளான கப்பல்;

# இலங்கை கடற்பரப்பை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுப்பு

### சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர



சுப்பிரமணியம் நிஷாந்தன்

கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான கப்பலில் மேலும் வெடிப்புகளோ அல்லது பாரிய எண்ணெய்க் கசிவுகளோ ஏற்பட்டால் அது இலங்கையின் கடற்சூழலுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதனை தடுக்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையால் இந்த விவகாரத்தை கையாள முடியாதுபோனால் தெற்காசிய நாடுகளின்

06

## தேர்தலுக்கு முன்னர் ஓய்வு பெற மாட்டேன்

### விமலுக்கு தேசப்பிரிய பதில்



மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் ஓய்வு பெற மாட்டேனென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஓய்வு பெற்றுச் சென்றால் நல்லதென அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்திருந்தமை தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்பே ஓய்வு பெற திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் முன்வைக்கப்படும்

06

## சமூகம்சார் விடயங்களில் புத்திஜீவிகள் ஒதுங்கியிருப்பு;

# கிழக்கு தொல்லியல் செயலணிக்கு தகுதியானவர்களை தேடும் அமைச்சர்

### டக்ளஸ் ஆதங்கம்; கடந்த கால தலைமைகள் மீது கண்டனம்



கிழக்கு தொல்லியல் சின்னங்களை பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணிக்கு பொருத்தமான தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வது மிகவும் சவாலான விடயமென ஆதங்கத்தை வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விரைவில் இச் செயலணிக்கு இருவர் நியமிக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த கால அரசியல் தலைமைகளின் செயற்பாடுகளும் இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு காரணமாக அமைந்துள்ளதென்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் மன உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் ஜனாதிபதி

06

## அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில்

# ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று ஐந்து மணிநேர வாக்குமூலம்



அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆஜராகியிருந்தார்.அவரிடம் சுமார் 05 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் டொக்டர் நிஹால் ஜயதிலக தாக்கல் செய்துள்ள மனுவொன்றின் பிரதிவாதியாக ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு முன்னாள் பிரதமருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

06

## கையூட்டல் வாங்கிய


# பாராளுமன்ற அலுவலர் பொலிஸாரால் கைது



உணவு விநியோகம் தொடர்பில் கையூட்டல் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற அலுவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்துக்குள் பழங்களை கொண்டு செல்வது தொடர்பிலான முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த கைது இடம்பெற்றுள்ளது. பழங்களை பாராளுமன்றத்துக்கு விநியோகிக்கும் வகையில் இந்த அலுவலர் விநியோகஸ்தர் ஒருவரிடமிருந்து சுமார் 60 ஆயிரம் ரூபாவை கையூட்டலாக பெற்றபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

## நவாஷ் ஷெரீப்புக்கு பிடியாணை உத்தரவு



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் பிணையில் வெளிவர முடியாத வகையிலான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் ஊழல் தடுப்பு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீதான நில ஒதுக்கீடு ஊழல் வழக்கு, ஊழல் தடுப்பு நீதிமன்ற நீதிபதி ஆசாத் அலி

06

# ஏற்றுமதி பொருளாதாரத்தை வெற்றி கொண்ட நாடாக மாறும் இலங்கை

### விரைவில் மாற்றியமைக்கப்படும் - விமல் வீரவங்ச



சுப்பிரமணியம் நிஷாந்தன்

எதிர்காலத்தில் இறக்குமதிகளால் நிறைந்த நாடு என்பதற்கு அப்பால் ஏற்றுமதி பொருளாதாரத்தை வெற்றிக் கொண்ட நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளையும் மனித வளத்தையும் விருத்தி செய்வது உட்பட ஏனைய காரணிகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவுள்ளதாக கைத்தொழில் துறை அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

06

# 10 புதிய பல்கலைக்கழகங்களை அமைக்க அரசு நடவடிக்கை

### கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



நாட்டில் புதிதாக 10 பல்கலைக்கழகங்களை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்திருப்பதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

சமூகத்தில் கௌரவமாக வாழ்வதற்குத் தேவையான சூழல் அனைத்து பட்டதாரிகளுக்கும் கிடைக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமான வகையில் பாடவிதானங்களில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்தும், இது குறித்து அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகளை நடத்து வதற்கு

06

# பேறிவாளனின் 90 நாள் பிணை மனு நிராகரிப்பு

### இம்மாதம் 08 ஆம் திகதியே உத்தரவு



பேரறிவாளனுக்கு 90 நாட்கள் பிணை கோரி, அற்புதம்மாள் தொடர்ந்த வழக்குக்கு எதிர்வரும் 08ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்படுமென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அற்புதம்மாள் தொடர்ந்த வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நிராகரிக்கப்பட்டு விட்டதாக தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வழக்கை

06




# 20ஐ அமுலாக்க முன் இன, மத, அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடுவது அவசியம்

### முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய



அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் அரசாங்கம் இன, மத மற்றும் அரசியல் தலைவர்களுடன் பரந்தளவிலான கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களில் நான்கைத் தவிர ஏனைய அனைத்தையும் நீக்கும் வகையில் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதையடுத்து, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டிருக்கிறது.

இதனூடாக 19 ஆவது திருத்தத்தில் குறைக்கப்பட்டிருந்த

06

### பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கவும்

# பிரேமலால் எம்.பி ரிட்மனு தாக்கல்



மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவை பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கோரி அவரது சட்டத்தரணி ரிட் மனுவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றத்தினால் மரணதண்டனை

06

# என்ஜின் செயலிழந்துள்ளதால் தெற்கு கடற்கரையை நோக்கி நகரும் கப்பல்

### கடற்படை, விமானப்படை களத்தில் என்கிறார் இராணுவத் தளபதி



சுப்பிரமணியம் நிஷாந்தன்

தீ விபத்துக்குள்ளாகிய கப்பலின் என்ஜின் செயலிழந்துள்ளதால் அது இலங்கையை நோக்கி வந்துக்கொண்டிருக்கிறது.

கப்பல் 38 கடல் மைல்கள் தொலைவில் இருந்தபோதும் தற்போது அது 22 கடல் மைல்கள் தொலைவில்தான் உள்ளது. இலங்கையின் தெற்கு கடற்கரையை நோக்கியே இந்தக் கப்பல் தற்போது நகர்ந்துக் கொண்டிருக்கிறது என பாதுகாப்பு படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு

06

# 2025 நிறைவடைவதற்கு முன் நாட்டில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வசதி

- திட்டம் முன்னெடுப்பு தொடர்பில் ஜனாதிபதி ஆராய்வு
- நீர்வழங்கல் அமைச்சுடன் இணைந்து வீதிகள் நிர்மாணம்






2025 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் 24 மணி நேரமும் அனைத்து வீடுகளுக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் வேலைத்திட்டத்தின் எதிர்கால முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கவனத்தை செலுத்தியுள்ளார்.

ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் நீரைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதேசங்களை சுத்தம் செய்து புனர்நிர்மாணம் செய்வதற்கு விசேட கவனத்தை செலுத்தி, இவ்வேலைத் திட்டத்தை துரிதப்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் நீர்வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக (03) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

"அனைவருக்கும் நீர்" சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் மக்களுக்கு முன்வைக்கப்பட்ட மிக முக்கிய வாக்குறுதியாகும்.

எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குள் 47 இலட்சம் குடும்பங்களுக்கு நீரை பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்படுவதோடு, அதற்காக 40,000 கிலோ மீற்றர்கள் நீர் குழாய்கள் புதிதாக பதிக்கப்படவுள்ளது. இதுவரை நீர் வழங்கலுக்கு செலவிடப்பட்ட செலவினங்களில் அரைவாசி நிதியை பயன்படுத்தி இத்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. நீரோடைகள், நீரூற்றுக்களை இனங்காணல் அவற்றை அபிவிருத்தி செய்தல் இவ்வேலைத்திட்டத்தின் படிமுறைகளாகும். நீரூற்றுக்களை பாதுகாப்பதற்காக மரங்களை நடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் முழு நீர் வழங்கலில் 45% வீதம் நீர்க் கசிவின் மூலம் வீணாக்கப்படுகின்றது. கடந்த ஒரு சில மாதங்களில் புதிதாக நீர்க்குழாய்களை பொருத்துவதன் மூலம் அதனை 15% வீதம் வரை குறைக்க முடிந்துள்ளது. நீரை பாதுகாப்பதற்காக நீர்க் கசிவுள்ள இடங்களை இனங்கண்டு புதிதாக நீர்க்குழாய்களை பொருத்தும் நடவடிக்கை தற்போது நடைபெற்று வருவதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் நீர் உயர் தரத்தில் சுத்திகரிக்கப்பட்டு வீடுகளுக்கு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாகவும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

நீர்க்குழாய்களை பொருத்தும் போது பாதைகளுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் அதன் மூலம் தேசிய சொத்து அழிவடைவதை தடுப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நீர்வழங்கல் சபை ஒன்றிணைந்து அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்கு அவசியமான செலவினத்தை 30% வீதம் வரை இதன் மூலம் குறைத்துக்கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

மழை நீரை சேகரித்தல் மற்றும் நாட்டிலுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்களின் கொள்ளளவை அதிகரித்தல், புதிதாக குளங்கள் மற்றும் நீரை தேக்கி வைக்கக்கூடிய கட்டமைப்புகளை நிர்மாணிப்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. நீர்ப்பற்றாக்குறையுள்ள பிரதேசங்களுக்கு நீரைக் கொண்டு செல்வதற்கு புதிய கால்வாய்கள் மற்றும் குழாய்களை கொண்டமைந்த திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் புதிய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பெசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோருடன் பொது மக்கள் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நாட்டை சிக்கலுக்குள்ளாக்கிய அரசியலமைப்பை நீக்கிவிட்டு புதிய அரசியலமைப்புக்கே மக்கள் ஆணை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நாட்டை சிக்கல்களுக்குள்ளாக்கிய அரசியலமைப்பை நீக்கி மக்களுக்கு பொருத்தமான புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவதற்கே மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் பலமான ஆணையை மக்கள் வழங்கியுள்ளாக இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஷா தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா (02) வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொவிட் 19 பரவல் காரணமாக உலகில் ஏனைய நாடுகள் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், மக்களின் அன்றாட செயற்பாடுகளும் சீர்குலைந்துள்ளன. ஆனால், எமது நாட்டில் கொவிட் 19 பரவலை அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளதுடன், மக்களை பாதுகாத்து பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்பும் இலக்கை அடைவதற்கான பொருளாதார முகாமைத்துவத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



கொரோனா பரவலின் இரண்டாம், மூன்றாம் அலை ஏற்பட்டு அதனை முகாமைத்துவம் செய்ய முடியாமல் அரசாங்கம் தோல்வியடையும் என்றே எதிர்க்கட்சியினர் எதிர்பார்த்திருந்தனர். ஜனாதிபதியின் தலைமைத்துவம் மற்றும் சுகாதாரத்துறை, பாதுகாப்புத் துறையின் ஆலோசனையின் பிரகாரம் கொரோனா பரவல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், மக்களையும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வழிசமைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளும் உரிய பாதுகாப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற வேலைத்திட்டத்திற்கமைய அடுத்த ஐந்து வருடங்களில் நாட்டையும் கட்டியெழுப்புவோம் என்பதுடன், மக்கள் வழங்கியுள்ள ஆணை மூலம் நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்படும் என்றும் கூறியுள்ளார்.

## யாழ்.மாவட்ட மீள்குடியேற்றம் தொடர்பான மீளாய்வு கூட்டம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ் மாவட்டத்தில் மீள்குடியேற்ற நிலைமை மற்றும் வீடமைப்பு தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் காலை யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், பிரதேச செயலர்கள், துறைசார் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்கள் என பல்வேறு தரப்பினரும் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



யாழ்.மாவட்டத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தற்போதும் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் காணி விடுவிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதோடு அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுதிட்டங்கள் தொடர்பிலும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மேலும், நீண்டகாலமாக இடம்பெயர்ந்து சொந்தக் காணியற்ற நிலையில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருபவர்களுக்கான மீள்குடியேற்றம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

## அமெரிக்கா, இஸ்ரேலுக்கு சவாலாக விளங்கும் ஈரான்



ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான ஒப்பந்தம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை தடுப்பதற்கான முயற்சி என்று கூறப்பட்ட போதிலும் அபுதாபியின் இந்நகர்வை துரோகமான செயற்பாடாகவே பலஸ்தீனியர்கள் கருதுகின்றனர்.

வளைகுடா நாடுகளின் சில அரபுத் தலைவர்களது உண்மையான நோக்கம் பலஸ்தீனுக்கு உதவுவதல்ல, பலஸ்தீன் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல. அவ்வாறு இருந்திருப்பின் பலஸ்தீன் உடன்பிறப்புகள் பல தசாப்தங்களாக அனுபவிக்கும் துயரைத் துடைக்க முயற்சித்திருப்பர். ஈரானுக்கு எதிராக ஒன்றிணைவதே அவர்களது முக்கிய குறிக்கோள் என்பதை பலஸ்தீனர்கள் நன்கு அறிவர்.

மத்திய கிழக்கில் வளர்ந்து வரும் ஈரானின் செல்வாக்கை முறியடிப்பதற்காக சவூதி தலைமையிலான அரபு நாடுகள் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்காக பல இயக்கங்களும் ஊடகங்களும் அவர்களால் இயக்கப்படுகின்றன.

ஈரானின் இஸ்லாமிய அரசு முறையும், பலஸ்தீன் தொடர்பான அதன் உறுதியான கொள்கையும், அமெரிக்க வல்லாதிக்கத்திற்கு முகம்கொடுக்கும் அதன் துணிச்சலும் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. அவர்கள் அதன்பால் ஈர்க்கப்படுவதைத் தடுக்க இவர்களுக்கு இன்றும் பயன்படுவது ஷீஆ சுன்னி என்ற பிரிவினையாகும்.

ஒரு சில ஆட்சியாளர்கள் இஸ்ரேலுடன் சுமுக உறவை ஏற்படுத்திக் கொள்ள எடுத்துவரும் நடவடிக்கையினை, சுன்னி உலகு இஸ்ரேலுடன் இணங்கிச்செல்ல தயாராய் உள்ளது போன்றும் அதனை எதிர்ப்பது ஷீஆக்கள் மட்டுமே என்பது போன்றும் ஒரு மாயையை உருவாக்க சியோனிச ஊடகங்கள் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஈரானை சுன்னி உலகுக்கு எதிரான நாடாக காட்டுவதற்கு அரபு அரச ஊடகங்களும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன. இவ்விடயத்தில் முஸ்லிம் உலகு ஒன்றுபட்டுவிடக்கூடாது என்பதில் அவை கண்ணும் கருத்துமாய் செயல்படுகின்றன.



பலம்வாய்ந்த நாடாக ஈரான் வளர்ந்து வருவதையும் மக்கள் படிப்படியாக அதன்பால் ஈர்க்கப்படுவதையும் தங்கள் பரம்பரை ஆட்சிக்கு இதனைப் பெரும் சவாலாகவே இவர்கள் பார்க்கின்றனர். அதனால் தான் எந்த சாத்தானுடன் கூட்டு சேர்ந்தாவது, ஈரானின் வளர்ச்சியைத் தடுப்பதில் குறியாய் இருக்கின்றனர். அதன் தொடர்ச்சிவே அவர்கள் தற்போது இஸ்ரேலுடன் கூட்டு சேர்ந்திருப்பதை நோக்க வேண்டியுள்ளது.

ஓய்வுபெற்ற யு.எஸ்.ஏ.எஃப் உளவுத்துறை அதிகாரி ரிக் ஃபிராங்கோனா கடந்த வாரம் ஒரு வலைப்பதிவில், சுன்னி அரேபியர்களுடன் இணைந்து பணியாற்ற இஸ்ரேலியர்கள் புத்திசாலிகள் என்று எழுதினார். ஏனெனில் அவர்கள் ஈரான் இஸ்லாமிய குடியரசு மற்றும் லெபனான், சிரியா, ஈராக் மற்றும் யெமனில் உள்ள அதன் ஷிஆ சிண்டிகேட்டை ஒரு பொது எதிரியாகக் கருதுகின்றனர் என்று விளக்கினார்.

அதேநேரம் கடந்த வாரத்தில் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்ட விஷயம் தான், இஸ்ரேலுடனான உறவை இயல்பாக்குவதில் அடுத்ததாக இருக்கும் அரபு நாடுகள் பஹ்ரைன், ஓமான் மற்றும் மொராக்கோ என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதாகும்.

இப்பிராந்தியத்தை நோக்குகையில் ஒருபுறம் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் சுன்னி அரபு நாடுகளின் பின்னிப்பிணைந்த நலன்கள் உள்ளன, அவற்றுக்கு பிராந்தியத்தில் சியோனிச பிரசன்னம் ஒரு பொருட்டல்ல. மறுபுறம் ஈரானுடன் கூட்டணி வைத்திருக்கும் அரபு நாடுகளும் அரச சார்பற்ற சில இஸ்லாமிய இயக்கங்களுமாகும். இவையே சியோனிச உறவை தீவிரமாக எதிர்ப்பனவாக உள்ளன.

எவ்வாறாயினும், சட்டவிரோத இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் சுன்னி அரபு நாடுகள் இன்னும் உள்ளன என்பதை சுட்டிக்காட்டியாக வேண்டும். உதாரணமாக, டியூனிசியா, அல்ஜீரியா ஆகியவை இஸ்ரேலுடன் இயல்பாக்கத்திற்கு எதிரானவை.

அதேவேளை ஈராக் அரசாங்கம் தனது நிலைப்பாடு மாறாது என்றும் இஸ்ரேலுடன் எந்த உறவும் இல்லை என்றும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பிராந்தியத்தில் ஈரானிய செல்வாக்கை எதிர்ப்பவர்களும், சில ஈரானிய அதிகாரிகளும் கூட, தெஹ்ரான், பாக்தாத், பெய்ரூட், டமாஸ்கஸ் மற்றும் சனா ஆகிய நான்கும் அரபு தலைநகரங்களை கட்டுப்படுத்துகிறது என்று கூறுகின்றனர். இக்கூற்றுக்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றாலும், ஈரான் அதன் அரபு நட்பு நாடுகளிடையே ஏற்படுத்தும் செல்வாக்கு கணிசமானது என்பது மறுப்பதற்கில்லை. சியோனிசம் மற்றும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பில் இந்த நாடுகள் அனைத்தும் மிக உறுதியாக உள்ளன.

ஈரானின் நெருங்கிய நட்பு நாடான சிரியா இன்னும் இஸ்ரேலுடன் போர் நிலையில் இருந்தபோதிலும், எகிப்து மற்றும் ஜோர்தான் செய்ததைப் போன்று ஆக்கிரமிப்பு அரசுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்கவில்லை. சிரியாவிற்கு எதிரான புதுப்பிக்கப்பட்ட அமெரிக்க பொருளாதாரத் தடைகள் குறித்து சிரிய வெளியுறவு அமைச்சர் வலீத் முஅல்லிம், டமாஸ்கஸ் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் ஊடாக எங்கள் கூட்டணிகளையும், எதிர்ப்பிற்கான எங்கள் ஆதரவையும் கைவிட்டு, இஸ்ரேலுடன் நாம் தொடர்புகளை இயல்பாக்குவோம் என்று எதிர்பார்ப்பவர்கள் நிச்சயம் ஏமாறுவர் என்று அண்மையில் கூறியிருந்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இஸ்ரேல் இடையேயான ஒப்பந்தம் தொடர்பில், லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கத்தின் பொதுச்செயலாளர் சையித் ஹசன் நஸ்ரல்லா, 'இது நவம்பர் மாதம் அமெரிக்காவில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதற்கான முன்னேற்பாடே தவிர வேறில்லை என்றுள்ளார்.

யெமனில் பலஸ்தீனியர்களுக்கு ஆதரவளிப்பதில் ஹௌதி தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது. சியோனிச ஆட்சியை ஆதரிக்கும் அரபு ஆட்சிகள் பலஸ்தீனியர்களுக்கு எதிரான குற்றங்களின் பங்காளர்கள் என்று ஹௌதி தலைவர் சையித் அப்துல் மாலிக் அல்ஹௌதி தெரிவித்திருக்கின்றார். எமிரேட்ஸின் ஆதரவில் இயங்கும் (எஸ்.டி.சி) குழுக்களின் செயல்பாடுகள் யெமனில் இஸ்ரேலுக்கு கால் பதிக்க ஏதுவாக உள்ளது. அவர்களது அபிலாஷைகள் தொடர்பாக மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இன்று லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொள்ள முடியாதளவுக்கு அரணாக ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லாஹ் செயற்பட்டு வருகின்றது. அதேபோன்று சிரியா தொடர்பாக ஈரான் கொண்டிருக்கும் நிலைப்பாடு இஸ்ரேலின் விஸ்தீகரிப்பு திட்டத்துக்கு பெரும் தடையாக உள்ளது. யெமனில் ஹௌதிகள் இல்லையெனில் அந்நாடும் இஸ்ரேலின் கோரப் பிடிக்குள் சிக்கியிருக்கும். ஆகவே, அமெரிக்காவும் இஸ்ரேலும் அவற்றின் மத்திய கிழக்கு தோழமை நாடுகளும் தம் தீய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள பிராந்தியத்தில் பெரும் தடையாய் இருப்பது ஈரான் இஸ்லாமிய குடியரசேயாகும். அதனால் தற்போது ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கான காரணம் ஈரான் எதிர்ப்பு என்பது வெளிப்படை.

**தாஹா முஸம்மில்...**

05ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரை

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.13 |
| மஃரிப் | 06.16 |
| இஷா | 07.27 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 20

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: மரணசித்த யோகம்
நட்சத்திரம்: ரேவதி ந.இ 2.34
திதி: திரிதியை


தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk


**கப்பலில் மீட்கப்பட்ட பொறியியலாளர்**

# 01 மணிநேர சத்திர சிகிச்சையின் பின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில்

*காரைதீவு குறூப் நிருபர்*







சங்குமண்கண்டி கடற்பரப்பில் எரிந்துகொண்டிருந்த பனாமாக்கப்பலிலிருந்து மீட்கப்பட்ட பிலிப்பைன்ஸ் மாலுமி பொறியியலாளர் எல்மோவிற்கு நேற்று முன்தினம் இரவு ஒரு மணிநேரம் சத்திர சிகிச்சை நடைபெற்றது. அதன் பின்னர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கை சுவாசக் கருவிகள் பொருத்தப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கொண்டுவரப்பட்ட 57வயதான பிலிப்பைன்ஸ் மாலுமிக்கு எவ்வித தீக்காயங்களும் இருக்கவில்லை.

மாறாக கப்பலின் பொயிலரில் ஏற்பட்டவெடிப்பு காரணமாக நெஞ்சிலும் வயிற்றுப்பகுதியிலும் பாரிய வெட்டுக்காயங்களிருந்தன. விலாஎலும்பு உள்ளிட்ட சில எலும்புகள் முறிவுக்குள்ளாகியிருந்தன. முதலில் அவரை கொரோனாவுக்கான பி.சீ.ர் பரிசோதனைக்கான மாதிரியை எடுத்த பின்னர் அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன்

06

## பிலிப்பைன்ஸ் மாலுமிக்கு கொரோனா தொற்று இல்லை

*காரைதீவு குறூப் நிருபர்*

எரிந்து கொண்டிருந்த பனாமாக் கப்பலிலிருந்து கடற்படையினரால் மீட்கப்பட்ட பிலிப்பைன்ஸ் மாலுமி பொறியியலாளர் எல்மோவிற்கு கொரோனாத் தொற்று இல்லையென மருத்துவ அறிக்கை கிடைத்துள்ளதாக கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் பிலிப்பைன்ஸ் மாலுமி அனுமதிக்கப்பட்டதும் வெளிநாட்டுப் பிரஜை என்பதால் கொரோனா பரிசோதனைக்காக இரத்த மாதிரி எடுக்கப்பட்டது.

அம்மாதிரியை சோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

அந்தப் பரிசோதனையின் அறிக்கை நேற்று மாலை 'நெகட்டிவ்' என கிடைக்கப்பெற்றுள்ளது.

மேற்கொண்டு அவரை அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் தனிமைப்படுத்தல் பிரிவிலிருந்து விடுவித்து சாதாரண பிரிவில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த கப்பல் கம்பனி சார்பில் நேற்று மாலை திருமலையிலிருந்து பிரதிநிதியொருவர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து மாலுமியின் உடல் நிலைபற்றி அறிக்கை எடுத்ததுடன் அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அனுமதி கேட்டார்.

உள்நாட்டு வைத்திய நடைமுறையின்படி வெளிநாட்டுப் பிரஜை அதுவும் இவ்விதம் பாதிக்கப்பட்ட ஒருவரை உடனடியாக தற்போதைய உடல்நிலையில் கொண்டுசெல்ல அனுமதிக்க முடியாது என்றும் அவ்வாறெனின் இலங்கையிலுள்ள பிலிப்பைன்ஸ் தூதுவராலயத்தில் முறைப்படி அனுமதிபெற்று வந்தால் பின்னர் அனுமதி வழங்கலாமென வைத்திய அத்தியட்சகர் முரளீஸ்வரன் கூறியுள்ளார்.

அதனையடுத்து மேலதிக நடவடிக்கைக்காக அவர் கொழும்பு சென்றுள்ளதாகத் தெரிகிறது.

## நாணயமாற்று

| | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

## மேலும் 229 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 229 இலங்கையர் நாடு திரும்பியுள்ளனர். நேபாளம் மற்றும் இஸ்ரேலில் பணிபுரிந்து வந்த இலங்கையரே இவ்வாறு (03) இரவு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேபாளத்தின் காத்மண்டுவிலிருந்து 26 பேரும் , இஸ்ரேலில் பணிபுரிந்த 203 இலங்கையரும் ஜோர்தானிலிருந்து சிறப்பு விமானம் மூலம் இவ்வாறு நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.



சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 13 கோடி ரூபா பெறுமதியான சுமார் 23 இலட்சம் வெளிநாட்டு சிகரட்டுகள் நேற்று அழிக்கப்பட்டன. இலங்கை புகையிலை கூட்டுத்தாபனத்தின் வளவுக்குள் சுங்க திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் இவை அழிக்கப்பட்டன. படம்: ரஞ்ஜித் அசங்க

# வடக்கில் 200 ஹெக்டயரில் உருளைக் கிழங்கு பயிர் செய்கை

**அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை!**



சுமார் 200 ஹெக்டயரில் உருளைக் கிழங்கு பயிர் செய்கை மேற்கொள்வதற்கு வடக்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், அவர்களுக்கு தேவையான உருளைக் கிழங்கு விதைகளை இலகுவாக பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இவ் விடயம் தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

வடக்கில் சுமார் 200 ஹெக்டயரில் உருளைக்கிழங்கு பயிர்செய்கைக்கு விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உருளைக்கிழங்கு விதைகளை இலகுவாக பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இத் திட்டம் வடக்கில் வெற்றியளிக்குமாயின், உருளைக் கிழங்கு இறக்குமதியை கணிசமான அளவு குறைத்து அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியும் எனவும் தெரிவித்ததுடன், எதிர்காலத்தில் உருளைக்கிழங்கின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகளை உற்பத்தி செய்யும் சர்வதேச தரத்திலான தொழிற்சாலைகளை நிறுவி வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியுமெனவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை வரவேற்ற ஜனாதிபதி, விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கங்களில் ஒன்று என்ற அடிப்படையில் வடக்கு விவசாயிகளின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் தேவையான உருளைக்கிழங்கு விதைகள் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமென்று உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தகக்கது.

# பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு பேச்சை குறைத்து செயலில் காட்டுவோம்

**அதுவே சிறந்த வழி என்கிறார் ஜீவன் தொண்டமான்**

*ஹற்றன் சுழற்சி நிருபர்*



பிரச்சினைகளைப் பேசி காலத்தை ஓட்டுவதைவிடவும், தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டதே எனது அரசியல் பயணம். அவ்வாறு தற்போது செயற்பட்டும் வருகின்றேன் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட ஹற்றன் புனிதஜோன் பொஸ்கோ கல்லூரியில் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் இரண்டு மாடிக் கட்டடம் நேற்று தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இடைக்கால கணக்கறிக்கை மூலம் எனது அமைச்சுக்கு ஆயிரத்து 56 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கடந்த நான்கரை வருடங்களில் கடன் அடிப்படையிலேயே மலையகத்தில் வேலைகள் நடந்துள்ளன. அவற்றை மீள செலுத்த வேண்டியுள்ளது.

முதலில் அடிக்கல் நாட்டவேண்டும், கட்டடத்தை நாமே திறந்து வைக்க வேண்டும் என்ற குறுகிய அரசியல் நோக்கில் திட்டங்களை உரிய வகையில் செய்யவில்லை. எங்களுக்கு அடிக்கல் நாட்டுவது பிரச்சினை அல்ல. செய்யும் திட்டம்

06

# தென்கிழக்குப் பல்கலை பகுதியில் பாரிய கடலரிப்பு; மக்கள் விசனம்

*ஒலுவில் விசேட நிருபர்*



தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக கடற்கரைப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக கிழக்கு பக்கமாகவுள்ள பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான நிலம் மற்றும் துறைமுக சுற்றுலா விடுதி பிரதேசம் என்பன கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

பல்கலைக்கழகத்தின் சுற்று மதில் நீரினால் அடித்துச் செல்லக்கூடிய நிலமை ஏற்பட்டுள்ளதோடு கடல் நீர் கரையை நோக்கி சுமார் 150 மீற்றர் தூரத்திற்கு வந்துள்ளதால் அண்டிய பிரதேசங்களிளும், கடலரிப்பு ஏற்படுமென மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடல் அரிப்பை பூரணமாக தடுப்பதற்கு கடற்கரையோரத்தில் கருங்கலிலான வேலி அமைக்கப்பட வேண்டுமென, சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், இது வரை எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக கடலரிப்பு ஏற்படும் பட்சத்தில் பல்கலைக்கழகத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்துமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# கிண்ணியாவில் 04 நூல்கள் இன்று வெளியீட்டு விழா

*கந்தளாய் தினகரன் நிருபர்*

கிண்ணியாவைச் சேர்ந்த கலா பூஷணம் ஏ. ஸீ. எம். இப்ராஹீம் எழுதிய 04 நூல்களின் வெளியீட்டு விழா இன்று காலை 8.30 மணிக்கு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் இடம் பெறுகிறது.

ஓய்வு பெற்ற நூலகர் எம். ரீ. சபறுள்ளாகான் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். கிண்ணியா நகரசபை தவிசாளர் எஸ். எச். நளீம், கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.சனூஸ் உள்ளிட்ட மற்றும் பலர் ஏனைய அதிதிகளாகக் கலந்து சிறப்பிப்பர்.

கலாபூஷணம் ஏ.ஸீ.எம். இப்ராஹீம் எழுதிய பொத்தானை வயல், பமுத்தோலை, அரபுநாட்டில் கற்றறிந்த பாடங்கள், யுனிக் டெக்னிக்ஸ் இன்லெட்டர் ரைட்டிங் ஆகிய 04 நூல்கள் வெளியிட்டு வைக்கப்படும்.

# சட்டவிரோத மணல் அகழ்வு; 21 உழவு இயந்திரங்கள் மீட்பு



**சாரதிகளும் கைது**

*ஏறாவூர் நிருபர்*

மட்டக்களப்பு மயிலவெட்டுவான் பிரதேசத்தில் மணலை ஏற்றிக்கொண்டு அனுமதியின்றி வரதிச்சோலை காட்டுப்பகுதி ஊடாக பயணம் செய்த குற்றச்சாட்டின் பேரில் 21 உழவு இயந்திரங்களை கைப்பற்றியதுடன் அவற்றின் சாரதிகளையும் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

மணல் ஏற்றுவதற்கு இவர்களிடம் அனுமதிப்பத்திரம் உள்ள போதிலும் அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்ட காட்டுப்பகுதியை ஊடறுத்துப் பயணிப்பதற்கான அனுமதிப்பத்திரம் இவர்கள் பெற்றிருக்கவில்லை என்பதுவே இவர்கள் மீதான குற்றச்சாட்டாகுமென தெரிவிக்கப்படுகிறது.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மோட்டார் சைக்கிள் படையணி

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 20ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்

*அவைக் களத்திற்கு அஞ்சி, தாம் கற்றவற்றை அதற்கு ஏற்பச் சொல்ல மாட்டாதவர் உயிருடன் இருந்தும் இறந்தவரோடு ஒப்பாவார்.*

## நாட்டின் சுபீட்சத்திற்கு அடித்தளமாக அமையும் புதிய அரசியலமைப்பு

புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான நிபுணத்துவ குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் ஒன்பது நிபுணர்களை உள்ளடக்கி இக்குழுவை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த புதனன்று கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போது இந்நிபுணத்துவ குழுவை அமைப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டது. நீதியமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கடந்த ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அமையவே இந் நிபுணத்துவ குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் பேராசிரியர் நஜீமா கமருதீனும் கலாநிதி ஏ. சர்வேஸ்வரனும் இடம்பெற்றுள்ளனர்.

'தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பிரதிபலிக்கும் வகையில் இக்குழுவில் நிபுணர்களை உள்வாங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைக் கூட்டத்தின் போது வலியுறுத்தியுள்ளார். அதற்கேற்ப இவர்கள் இக்குழுவில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மக்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய ஐ.தே.க தலைமையிலான அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட 19 வது திருத்தத்தின் ஊடாக நாட்டில் ஏற்பட்டுள்ள பலவீனங்களையும் பாதிப்புக்களையும் திருத்தியமைக்கும் வகையில் 20 வது திருத்த சட்ட மூலத்தை முதலிலும் அதனைத் தொடர்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் பொருத்தமான நவீன யுகத்திற்கு ஏற்ற புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

ஏனெனில் தற்போது நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்பு இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னர் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது 1978 இல் அன்றைய ஜனாதிபதியான மறைந்த ஜே. ஆர் ஜயவர்தன இந்த யாப்பை அறிமுகப்படுத்தினார். இதுவே இந்நாட்டின் இரண்டாவது குடியரசு யாப்பாக விளங்குவதோடு சுதந்திரத்திற்கு பின்னர் நாட்டில் நீண்ட காலம் நடைமுறையிலிருக்கும் யாப்பாகவும் விளங்குகின்றது. ஆனாலும் அவர் அன்றைய கால சுழலுக்கு ஏற்ப இவ் யாப்பைத் தயாரித்து அறிமுகப்படுத்தினாரேயன்றி நாட்டினதோ, மக்களினதோ அபிலாஷைகள், எதிர்பார்ப்புக்கள் குறித்து அவர் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. அதன் விளைவாகவே இந்த யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட முதல் பத்து வருட காலப்பகுதிக்குள் அதுவும் அவரது ஆட்சிக் காலத்திலேயே 13 திருத்தங்களைக் கண்டிருக்கின்றது. இது , இந்த யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது தொடக்கம் முதல் பத்து வருட காலப்பகுதி குறித்துக்கூட கவனம் செலுத்தப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

அரசியல் யாப்பு என்பது நாடொன்றின் உயிர் நாடியாகும். அவ்வாறு இருக்கையில் 1978 அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட முதல் பத்து வருடங்களுக்குள் செய்யப்பட்ட 13 திருத்தங்கள் அடங்கலாக கடந்த 42 வருட காலப்பகுதியில் 19 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'இந்த யாப்பை திருத்த வேண்டும். நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்ற, காலத்திற்கு பொருத்தமான யாப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்' என்ற கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இப்பின்புலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கம் 2000 இல் புதிய அரசியமைப்பை கொண்டு வர நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் மக்கள் தொடர்ந்தும் அரசியலமைப்பின் தேவையையும் அவசியத்தையும் வலியுறுத்தத் தவறவில்லை. இப்பின்னணியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாட்டு மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிக்கு ஏற்ப புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போதைய யாப்பு 1978இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் கடந்த 42 வருட காலப்பகுதியில் நாட்டிலும் உலகிலும் பாரிய மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. மக்களின் எதிர்பார்ப்புக்களிலும் அபிலாஷைகளிலும் கூட அதிகரிப்புகளும் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. அதனால் தற்போதைய நவீன யுகத்திற்கு ஏற்ற புதிய அரசியலமைப்பு நாட்டுக்கு இன்றியமையாததாகும்.

அந்த வகையில் தான் அரசாங்கம் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்ற பொருத்தமான அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. இதன் ஊடாக நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவும் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கவும் நாட்டில் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பல்லின மக்கள் வாழும் நாட்டில் சுபீட்சம், பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட இந்த யாப்பு அடித்தளமாக அமையும் என்ற நம்பிக்கை மக்களிடமுள்ளது.

ஆகவே ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான நடவடிக்கைக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒத்துழைக்க வேண்டும். அது வளமான தேசத்திற்கான பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# வாழ்க்கையில் நம்பிக்கையும் துணிவும் வேண்டும்

வெளியுலகத்தில் பல்வேறு செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், எமது வாழ்க்கையிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதுதான் முக்கியமான விடயம். எம்முடைய வாழ்விலே நம்பிக்கை இருக்க வேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கை இல்லையெனில் மனிதன் எவ்வாறு முன்னேறிச் செல்ல முடியும். எமது நம்பிக்கைகள் தவறான விடயங்களிலா, போலியான விடயங்களிலா, கற்பனையான விடயங்களிலா அல்லது உண்மையான விடயங்களிலா உள்ளது. இங்கு குறிப்பிடப்படும் 'உண்மை' என்பது முன்னர் இருந்த, இப்பொழுது இருக்கின்ற, எப்பொழுதுமே இருக்கப் போகின்ற, என்றுமே மாற்றமடையாத உண்மையாகும். இந்த உண்மை, சூழ்நிலையுடன் தொடர்பு இல்லாதது. நீங்கள் உயிருடன் வாழும் வரை அதாவது பிறப்பு இறப்பு எனும் இரு சுவர்களுக்கிடையில் இருக்கும் வரை உங்களிடம் உள்ள உண்மை.

இந்த கொரோனா தொற்று இருக்கும் சூழ்நிலையை எடுத்துக் கொண்டால், முன்னர் இந்த சூழ்நிலை இருக்கவில்லை, இப்பொழுது இருக்கின்றது, எதிர்காலத்திலே இருக்கப்போவதில்லை. இந்த சூழ்நிலை மாற்றமடையத்தான் களுக்கு சொந்தங்கள், பந்தங்கள், உறவுகள், வேலைகள், வீடு, வாசல் மற்றும் எவையெல்லாம் இருக்கின்றதோ அவையெல்லாம் உள்ளன. உங்களது மூச்சு நிற்கும் பொழுது எதுவுமே உங்களிடம் இருக்க மாட்டாது. இத்தகைய மூச்சு உங்களினுள் வந்து போகும் வரை நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள். நீங்கள் துர்பாக்கியசாலி என ஒரு போதும் நினைக்க வேண்டிய தேவையில்லை.

வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் தொடர்ந்து வந்து போய்க் கொண்டேதான் இருக்கும். உயிருடன் இருக்கும் வரை நீங்கள் எது வேண்டுமானாலும் செய்ய முடியும். சூழ்நிலை எவ்வாறு இருந்தாலும், உங்களிடம் துணிவும், பொறுமையும் இருக்கவேண்டும். அந்த துணிவிலிருந்து நம்பிக்கை பிறக்க வேண்டும். இவை பற்றிய பல



**பிரேம் ராவத் அவர்கள், பல நாடுகளிலுமுள்ள மக்களிடம் 'அமைதியை உணர்வது ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியம்' என உரையாற்றி வருகின்றார். COVID19 சூழ்நிலையால் அவரின் உரைகள் 'Lockdown' எனும் தொடர் வீடியோக்களாக Virtual நிகழ்ச்சிகள் மூலம் பார்வையாளர்களை சென்றடைகின்றன. அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள்...**

வேண்டும். ஆனால் உங்களிடம் உள்ள உண்மை எவ்வாறானது? என்றும் மாற்றமடையாத அந்த உண்மையை அறிவதனாலும், உணர்வதனாலும் உங்களது வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்பட வேண்டும். உங்களைப் பொறுத்தவரையில் இடைவிடாது வந்து போகும் இந்த மூச்சு மட்டும் தான் உண்மை. இந்த மூச்சு உங்களினுள் வந்து போகும் வரை உங்களிடம் எல்லாமே உள்ளன. உங்களிடம் இல்லாதவற்றையும் கூட இந்த மூச்சு வந்து போகும் வரை உங்களால் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த மூச்சுத்தான் உங்களின் வாழ்வில் எல்லாவற்றையும் விட முக்கியமான விடயமாகும். இந்த மூச்சின்றி நீங்கள் ஒன்றுமே இல்லை, வெறும் உடல்தான். இந்த மூச்சு வந்து போவதனால்தான் உங் கதைகளைப் படித்திருக்கின்றோமே, நம்முடைய வாழ்விலே தைரியமாக இருக்க வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்ளக் கூடாதா? துணிவுடன் எம் வாழ் க்கையை கொண்டு சென்றோமாயின் எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும், எந்தப் பிரச்சினையானாலும் அதற்கான தீர்வைக் கண்டு கொள்ள முடியும். இந்த மூச்சு வந்து போய்க்கொண்டிருக்கும் வரை எம்மிடம் அதற்கான தைரியம் இருக்கின்றது. எமது வாழ்க்கையை பயத்திலிருந்து விலக்கி முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லமுடியும். மனிதன் பயத்திலிருக்கும் போது அவனால் ஒன்றுமே செய்ய முடியாமல் போகின்றது. வாழ்வில் வெளிச்சத்தைக் காணமுடியாமல் இருக்கின்றது. அவனால் உண்மைப் பொருளை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது.

நேரம் ஒரே வேகத்தில் தான் ஓடிக் கொண்டிருக்கின்றது. ஆனால் மனிதன் எப்பொழுதும் பதட்டத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பதனால் அவன் செய்யும் செயல்களால் வாழ்க்கையில் எந்தவித பயனையும் பெறப்போவதில்லை. நேரத்தை வீணாக்குவது போலாகிவிடும். உங்களுக்கு கிடைத்த இந்த நேரத்தை வீணாக்காமல் துணிவுடன் செயற்படுங்கள். கடந்து சென்ற நேரம் மீண்டும் திரும்பி வரப்போவதில்லை. தீர்வு காணமுடியாத விடயம் என்று எதுவுமே இல்லை. நம்பிக்கையுடன் செயற்படவேண்டிய தருணம் இதுவாகும். இந்த சூழ்நிலையில் எமக்கு கிடைத்த பாடத்தை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது. கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும், பயப்படுவதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இது நம்பிக்கையுடன் செயற்பட வேண்டிய காலமாகும். உங்களை தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள், முகம், கைகளை கழுவி எப்பொழுதும் சுத்தமாக இருங்கள்.

மனம் எப்பொழுதும் சஞ்சலப்பட்டு ஓடிக்கொண்டேதான் இருக்கும். மனம் போன போக்கில் மனிதனும் ஓடிக் கொண்டேதான் இருக்கின்றான். நீங்கள் எங்கு சென்றாலும் எத்தகைய சூழலில் வாழ்ந்தாலும் பறவைகளைப் போல சுதந்திரமாக வாழமுடியும். இந்த கொரோனா சூழ்நிலையினால் நீங்கள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தாலும், மனதை ஒரு நிலைப் படுத்தி அமைதியாக இருக்க முடியும்.

இந்த மூச்சு உங்களினுள்ளே வந்து போகும் வரை அதனை புரிந்து கொள்ளுங்கள். அதற்கு மதிப்பு கொடுங்கள். மூச்சு உங்களுக்கு உயிரைக் கொண்டு வருகின்றது. நேரத்தை எடுத்து வருகின்றது. நீங்கள் எங்கிருந்தாலும் சரி, இந்த பிரபஞ்சத்தை படைத்தவர் உங்களின் இதயத்தில் வீற்றிருக்கின்றார். அதனால் நீங்கள் தனிமையை ஒரு போதும் உணரவேண்டியதில்லை. உங்களுக்கு நண்பர்கள் இந்த நேரத்தில் தேவையில்லை. நண்பர்களுக்கெல்லாம் நண்பராக உங்களைப் படைத்தவர் உங்களில் இருக்கின்றார். கடைசி மூச்சு உள்ளவரை உங்களுடனேயே வாசம் செய்வார்.

உங்கள் உள்ளம் சொல்வதை செவி மடுத்துக் கேளுங்கள். நான் எனது வாழ்க்கையில் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்றுதான் உள்ளம் சொல்கின்றது. உண்மைப் பொருளை உணர்வுடன் இணைத்து ஆனந்தத்தை அடையுங்கள். உண்மை என்றும் உங்களுடனேயே இருக்கின்றது. உங்களிடம் உள்ள புதையலை அறியாது இருப்பதுதான் துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம். உங்கள் வாழ்வில் உண்மையை அறிந்து, அதை ஏற்றுக்கொண்டு வாழும் போதுதான் மனதிலுள்ள குழப்பங்கள் விலகும். அந்த உண்மை நிலையை உணரத்தொடங்கும் பொழுது தான் நீங்கள் அமைதியாக வாழமுடியும். உள்ளம் அந்த சுதந்திரத்தை விரும்பும், அதனால் வாழ்க்கையில் நன்றியுணர்வு ஏற்படும். உங்களை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். வாழ்க்கையை விழிப்புணர்வுடன் வாழுங்கள். உள்ளத்தை நன்றியுணர்வால் நிரப்புங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வில் பிரகாசம் தோன்றும். தன்னை அறிந்து வாழ்வை வழம்பெற செய்யுங்கள். என்றும் ஆனந்தமாக வாழுங்கள், வாழ்கையை வெற்றியடையச் செய்யுங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு:**

https://www.timelesstoday.tv/
https://www.tprf.org/peaceeducationprogram/
https://www.premrawat.com/engage/peakknowyourself
https://www.youtube.com/c/PremRawatOfficial/featured
Or WhatsApp +94777793140

தொகுப்பு:
இ.மனோகரன்...

# பஸ், ரயில் கட்டணங்களை அதிகரிக்காமல் மக்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குவோம்

## போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே

***கேள்வி: புதிய அரசில் உங்களுக்கு கிடைத்த அமைச்சு தொடர்பில் என்ன எண்ணுகிறீர்கள்?***

***பதில்:*** எனக்கு அளிக்கப்பட்டுள்ள போக்குவரத்து அமைச்சு குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அத்தோடு இளைஞரான இராஜாங்க அமைச்சர் ஒருவரும் எனக்கு வழங்கப்பட்டுள்ளார். நாம் தற்போது எமது பணிகளை ஆரம்பிக்க தயாராகி வருகின்றோம்.

நாம் தேர்தலில் மக்களிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கோரினோம். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்கவும் கொரோனா தொற்றுக் காரணமாக பாதிப்படைந்த பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்பவுமாகும். அத்துடன் ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியை குறைப்போம் என்றும் கூறியிருந்தோம். மக்கள் அனைத்தையும் அங்கீகரித்துள்ளார்கள். நாம் தற்போது 'சுபீட்சத்தின் நோக்கு' திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

***கேள்வி: போக்குவரத்துத்துறை சவால் மிக்கதாகும். அச்சவாலை வெற்றிக் கொள்ள உங்களின் எதிர்கால திட்டங்கள்,.....***

***பதில்:*** தற்போது எமது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். ஏனென்றால் எமது மக்களின் 90 வீதமானோர் பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்துகின்றனர். நாம் பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையில் இலங்கை போக்குவரத்து சபை பஸ் சேவைகளையும் ரயில் சேவைகளையும் மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாத வகையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

***கேள்வி: அமைச்சரவை அமைக்கப்பட்டு இரண்டு வாரங்களாகின்றன. திட்டங்களை தயாரிக்க இன்னும் காலம் எடுக்குமா?***

***பதில்:*** அதிகாரம் உள்ளதென்று பொது மக்களின் பணத்தை வீணடித்து கண காட்சி காட்ட நாம் தயாரில்லை. எம்மிடமுள்ள வளத்தை பயன்படுத்தி எமது நிறுவனங்களை மேம்படுத்துவதோடு மக்களுக்கு திருப்தியான சேவையை பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் அந்த நிறுவனங்களை ஒவ்வொன்றாக ஆராய வேண்டும். நாம் கொழும்பு மாவட்டத்தில் சிசு செரிய பஸ் போக்குவரத்தை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கவுள்ளோம். கொழும்பில் மாத்திரம் 200 'சிசு செரிய' பஸ்கள் உள்ளன. கொழும்பில் அதனை ஆரம்பித்து பின்னர் அச் சேவையை நாடு பூராவும் விஸ்தரிக்கவுள்ளோம்.

***கேள்வி: நீங்கள் கூறுவதை பார்த்தால் பஸ் மற்றும் புகையிரத சேவைகள் நட்டத்தில் இயங்குவதாகவே தெரிகின்றது. அதனால் பஸ், ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா?***

***பதில்:*** இல்லை. இவ்வேளையில் நாம் ஒரு போதும் பஸ், ரயில் கட்டணங்களை அதிகரிக்க மாட்டோம். இந் நிறுவனங்களை நட்டத்தில் இருந்து மீட்க புதிய திட்டங்களை செயல் படுத்தவுள்ளோம். புகையிரதங்களை பயன்படுத்தி பொருட்களை கொண்டு செல்வது போன்ற நடவடிக்கையை நாம் பஸ் வண்டிகளிலும் மேற்கொள்ளவுள்ளோம். பஸ் வண்டிகளில் பின்பக்க ஆசனங்களை அகற்றி அவ்விடங்களில் கிராமங்களில் இருந்து விவசாய பொருட்களை ஏற்றி இறக்க தீர்மானித்துள்ளோம்.

***கேள்வி: அன்று எதிர்க்கட்சியில் இருந்த போது நல்லாட்சி அரசாங்கத்தின் ஊழல் மோசடி பற்றி பேசினீர்கள். போக்குவரத்து அமைச்சின் மீது நீங்கள் குற்றம் சாட்டினீர்கள். அன்று நீங்கள் தெரிவித்த ஊழல் மோசடி குறித்து அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பீர்களா?***

***பதில்:*** ஆம், நாம் போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். அத்தகவல்களை FCIDக்கு கையளிக்க மாட்டோம் . அதற்குரிய பொலிசாரிடம் கையளித்து குற்றம் செய்தவர்களுக்கு எதிராக சட்டத்தை செயல்படுத்துமாறு கூறுவோம்.

***கேள்வி: கோட்டை புகையிரத நிலையத்தில் நீங்கள் மேற்கொள்ள உள்ள மாற்றங்கள் என்ன?***



***பதில்:*** ரயில் நிலையத்தில் ரயில் வரும் வரை பயணிகள் காத்திருக்கின்றார்கள். அதன் பின்னர் அதில் பயணம் செய்து தங்கள் கிராமத்தில் உள்ள கடைகளில் பொருட்களை வாங்கிக் கொண்டு செல்கின்றார்கள். அதனால் நாம் அனைத்து அரச நிறுவனங்களும் செயல்படுத்தும் விற்பனை நிலையங்களை திறந்து அவர்களுக்கு தேவையான பொருட்களை மலிவு விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். விமான நிலையத்தில் தீர்வையற்ற கடைகள் உள்ளது போல ரயில் நிலையத்தில் அவ்வாறான கடைகளை திறக்கவுள்ளோம். நல்ல உணவகங்களையும் அமைப்பதோடு மலசலகூட வசதிகளையும் மேம்படுத்த உள்ளோம்.

***கேள்வி: நீங்கள் தொழிற்சங்க தலைவராக, அமைச்சுப் பதவி மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?.***

***பதில்:*** நாம் எமது அரசின் கொள்கையாக தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கு விசேட கவனம் செலுத்துவோம். கோரிக்கைகள் நியாயமானது என்றால் போராட்டம் நடைபெறுவதற்கு முன்னரே அவற்றை வழங்குவோம். அதன் மூலம் எமக்கு எமது அமைச்சின் தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்களிடமிருந்தும் நல்ல ஒத்துழைப்பும் சக்தியும் இவ்வமைச்சை நடத்துவதற்கு கிடைத்துள்ளது.

***கேள்வி: பஸ் மற்றும் ரயில்கள் குறித்த கால அட்டவணையின் படி இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு பற்றி உங்கள் கருத்து?***

***பதில்:*** நாம் ஆரம்பத்தில் கூறியவாறு மிகக்குறைந்த வளத்தைக் கொண்டே இந்த சேவையை வழங்குகிறோம். அதனால் இன்னும் சில காலம் பழைய நிலைமையே இருக்கக்கூடும். எவ்வாறாயினும் நாம் புகையிரத பொது முகாமையாளருக்கும் இ.போ. ச தலைவருக்கும் கால அட்டவணைப்படி போக்குவரத்து சேவைகளை நடத்துமாறு கூறியுள்ளோம். அதேபோல் செயலியொன்றையும் உருவாக்கி கால அட்டவணையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

***கேள்வி: நீங்களும் இராஜாங்க அமைச்சர், அதிகாரிகள் ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலில் பஸ்ஸை கழுவும் இடத்தில் இருந்து ஆரம்பியுங்கள் என்று கூறினார். அதன் மூலம் போக்குவரத்து அமைச்சை ஆரம்பத்திலிருந்தே மீள அமைக்க வேண்டுவேண்டுமென்ற கருத்தில்தானே கூறினார்?***



***பதில்:*** ஜனாதிபதி கூறியது போன்று விசேடமாக பஸ் ஒன்று தனது பயணத்தை பூர்த்தி செய்த பின்னர் மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கும் போது பஸ்ஸின் உள்ளேயும் வெளியேயும் துப்புரவு செய்யுமாறு அறிவித்துள்ளோம். போக்குவரத்து ஆணைக்குழுவினூடாகவும் தனியார்துறை பஸ் வண்டி உரிமையாளரிடமும் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளோம். அதேபோன்று மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி செயல்படுத்தவுள்ளோம்.

***கேள்வி: மாகாண சபை தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு எவ்வாறு தயாராகிறீர்கள்.....***

***பதில்:*** மாகாண சபைத் தேர்தலுக்கு கட்டாயம் முகம் கொடுக்க வேண்டும். எமது நாட்டின் தேர்தல் சரித்திரத்தையே மாற்றிய பொதுத் தேர்தலைப் போன்று மாகாண சபைத் தேர்தலிலும் நாம் வெற்றி பெறுவோம். செய்யும் வேலையை சரியாக செய்தால் நாம் தேர்தலைப் பற்றி பயப்பட வேண்டிய அவசியமில்லை.

ஜயசூரிய உடுகும்புற...
தமிழில்: வீ.ஆர். வயலட்

# தமிழில் படித்து விஞ்ஞானியான மெய்யா மெய்யப்பன்

**தமிழில் மட்டுமே படிப்பதால் உயர் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் பின்தங்க நேரிடும் என்று ஒரு வாதமும் தாய்மொழியில் படித்ததால் வாழ்க்கையில் சிறந்த நிலைக்கு வந்தவர்கள் ஏராளம் என்று மற்றொரு வாதமும் இன்னும் தொடர்கின்றன. இவ்வாறு தமிழ் வழி கல்வி கற்று வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சாதித்து காட்டியவர்கள் பொதுவெளியில் அதிகம் தென்படுவதில்லை.இப்படிப்பட்ட சூழ்நிலையில், தமிழகத்தின் காரைக் குடியில் பிறந்து, தமிழ் வழியில் கல்வி பயின்று, அமெரிக்காவுக்கு குடிப்பெயர்ந்து இன்று உலகமே வியந்து பார்க்கும் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பில் 24 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றி நடைப்போட்டு வருகிறார் தமிழரான மெய்யா மெய்யப்பன்.**

தன்னம்பிக்கை அளிக்கும் அவரது வெற்றிக்கதையையும், நானோ டெக்னாலஜி துறையில் அவர் நிகழ்த்தி வரும் சாதனைகள் ஏராளம்.

யார் இந்த மெய்யா மெய்யப்பன்?

தமிழகத்தின் காரைக்குடியில் நடுத்தர குடும்பத்தில் பிறந்த மெய்யா மெய்யப்பன் அங்குள்ள பிரபல பள்ளியொன்றில் தமிழ்வழியில் தனது பள்ளிப்படிப்பை நிறைவு செய்தவுடன், திருச்சியிலுள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் இரசாயன பொறியியலில் பி.டெக் பட்டம் பெற்றார். பிறகு இங்கிலாந்தின் பர்மிங்காமில் அதே பிரிவில் முதுகலை பட்டம் பெற்ற இவர், பின்பு 1979இல் அமெரிக்காவுக்கு சென்று முனைவர் பட்டம் பெற்றார்.

இரசாயன பொறியியல் துறையில் தனது உயர்கல்வி முழுவதையும் பயின்று முடித்த மெய்யப்பன், வேலையை தேட தொடங்கியபோது அக்காலக்கட்டத்தில் நிலவிய பொருளாதார மந்தநிலையின் காரணமாக கடும் சவாலான சூழ்நிலை நிலவியது. எனினும், இடைவிடாது போராடிய இவருக்கு, சம்பந்தமே இல்லாத மின்பொறியியல் துறைசார்ந்த வேலையே கிடைத்தது.

எனினும், துளியும் சளைக்காத மெய்யப்பன் மிக குறுகிய காலத்திலேயே அந்த துறையில் திறமையை வளர்த்துக்கொண்டு சுமார் 12 ஆண்டுகள் ஒரே நிறுவனத்திலேயே வேலை செய்தார். இவற்றிற்கிடையே அமெரிக்க குடியுரிமையையும் பெற்றார்.

கலிஃபோர்னியாவிலுள்ள நாசாவின் ஏம்ஸ் ஆய்வு நிலையத்தின் நானோ டெக்னாலஜி ஆய்வு பிரிவின் தலைமை விஞ்ஞானியாக கடந்த 14 ஆண்டுகளாக இருந்து வருகிறார்.

### அமெரிக்காவில் நானோ தொழில்நுட்பத்திற்கு வித்திட்டவர்


இரசாயன பொறியியல் துறையில் இளங்கலை முதல் முனைவர்பட்ட ஆய்வு வரை முடித்த மெய்யா மெய்யப்பன், அதனுடன் தொடர்பற்ற மின்பொறியியல் துறையில் 12 ஆண்டுகாலம் பணியாற்றியதை போல, அவர் இன்று உலகம் முழுவதும் அறியப்படும் நானோ தொழில்நுட்பம் குறித்து அவர் கல்வி பயின்றதே இல்லை என்பது வியப்புக்குரியது.


அமெரிக்காவின் பல்வேறு அரசுத்துறைகளில் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தி கொண்டேன். இந்த நிலையில், 1996ஆம் ஆண்டு நாசாவில் இணைந்துகொள்ள எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. நாசாவில் பணியில் சேர்ந்து இரண்டு மாதங்களாகியும் அங்கு நான் என்ன செய்யவேண்டுமென்ற வழிகாட்டுதல் எதுவும் கொடுக்கப்படாத நிலையில்தான், எனது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திய அந்த அழைப்பு வந்தது என்று மெய்யப்பன் கூறுகிறார்.

'அமெரிக்க அறிவியல் கழகத்திலிருந்து என்னை அழைத்த அதிகாரியொருவர் 'எதிர்காலத்தில் உங்களுக்கு விருப்பமா?' என்று கேட்டார். அதற்கு நான் உடனே சரியென்று சொல்லிவிட்டேன்.

அதாவது, இன்று உலகம் முழுவதும் உள்ள பல்வேறு அறிவியல், சுகாதார, தொழில்நுட்ப பிரச்சினைகளையும் நம்பிக்கைக்குரிய தொழில்நுட்பமாக விளங்கும் நனோ தொழில்நுட்பத்தில் முதலீடு செய்து ஆராய்ச்சியை மேற்கொள்ளலாமா, வேண்டாமா என்று 24 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளை மாளிகை யோசித்தது. அதற்கான பதிலை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவில்தான் மெய்யப்பன் இடம்பெற்றிருந்தார். அந்த குழுவினர் மூன்றாண்டுகால ஆய்வுக்கு பின்னர் 1999ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட அப்போதைய அதிபர் பில் கிளிண்டன் அந்த நாட்டின் அரசுத்துறைகளில் நனோ தொழில்நுட்பம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கும் சட்டத்தில் 2000ஆவது ஆண்டு கையெழுத்திட்டார்.









தாக்கத்தை செலுத்தப்போகும் ஒரு தொழில்நுட்பம் குறித்த அடிப்படை ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு கப்பற்படை, விமானப் படை உள்ளிட்டவற்றை சேர்ந்த மூன்று பேர் தயாராக உள்ளனர், அதில் நான்காவது நபராக இணைய

நனோ டெக்னாலஜி என்ற சொல்லாடலே இல்லாத காலத்தில் கல்வி பயின்ற மெய்யப்பன், அந்த தொழில்நுட்பம் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்படுவதில் பெரும் பங்கு வகித்த பெருமைக்குரியவர். இடைப்பட்ட காலத்தில் விண்வெளித்துறையில் நானோ தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தையும் அதில் மெய்யப்பனுக்கு உள்ள திறமையையும் கண்ட நாசா அவரை நானோ தொழில்நுட்ப ஆய்வு மையத்தின் இயக்குநராக நியமித்தது.

## நனோ தொழில்நுட்பத்தில் உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவரமாவார்.....



### உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவர்

நனோ தொழில்நுட்பத்தில் உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராக கருதப்படும் மெய்யா மெய்யப்பன், இதுவரை 350க்கும் அதிகமான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதோடு, உலகம் முழுவதும் 500க்கும் மேற்பட்ட கருத்தரங்கங்கள் மற்றும் நிகழ்வுகளில் உரையாற்றியுள்ளார். நனோ தொழில்நுட்பம் சார்ந்த 18க்கும் மேற்பட்ட படைப்புரிமைகளை (Patent) பெற்றுள்ள இவர், உலகின் புகழ்ப்பெற்ற பல்கலைக்கழகங்களின் ஆய்வுகளுக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளார்.

அமெரிக்காவில் நனோ தொழில்நுட்பம் அரசின் கவனத்தை பெறவும், பரவலடையவும் காரணமாக அமைந்த மெய்யப்பனின் வழிகாட்டுதலை, பின்னாட்களில் பல்வேறு உலக நாடுகளின் அரசுகளும் கோரின.

மெய்யா மெய்யப்பன், நனோ தொழில்நுட்பத்துறையில் ஆற்றி வரும் வரலாற்று சிறப்புமிக்க பணிகளை அங்கீகரிக்கும் வகையில், அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் அரசு, அந்த நாட்டின் உச்சபட்ச விருதுகளில் ஒன்றான 'Presidential Meritorious Award' என்ற விருதை அவருக்கு வழங்கியது.

இதுமட்டுமின்றி, நாசாவின் தலைசிறந்த தலைமைக்கான பதக்கம், சிறந்த விஞ்ஞானி பதக்கம், சிறந்த பொறியியலாளர் பதக்கம் மற்றும் நானோ தொழில்நுட்பம் சார்ந்த உலக புகழ்ப் பெற்ற அமைப்புகளின் எண்ணற்ற விருதுகளுக்கு சொந்தக்காரர் இவர்.

### மெய்யப்பனின் சாதனைகள்

2006ஆம் ஆண்டு வரை கலிஃபோர்னியாவிலுள்ள நாசாவின் ஏம்ஸ் ஆய்வு மையத்தின் நனோ தொழில்நுட்ப மையத்தின் இயக்குநராக செயல்பட்ட மெய்யா மெய்யப்பன், கடந்த 24 ஆண்டுகளாக அதே மையத்தின் விண்வெளி ஆய்வு தொழில்நுட்பத்துறையின் தலைமை விஞ்ஞானியாக பணியாற்றி வருகிறார்.

மெய்யப்பனின் குறிப்பிடத்தக்க சாதனை 2007ஆம் ஆண்டு தொடங்கியது என்று கூறலாம். அப்போதுதான் இவரது தலைமையிலான அணியினர் நனோ தொழில்நுட்பத்தை கொண்டு உருவாக்கிய பொருளொன்று விண்வெளிக்கு கொண்டுசெல்லப்பட்டது. இந்த தொழில்நுட்பத்தை கொண்டு உருவாக்கப்பட்ட பொருளொன்று விண்வெளிக்கு செல்லப்பட்டது அதுவே முதல் முறை.

இதை தவிர்த்து, கார்பன் நானோ குழாய்கள், கிராபென் மற்றும் நானோ ஒயர்கள் போன்ற புதுமையான நானோ பொருள்களைப் பயன்படுத்தி மின்னணு, வேதியியல் சென்சார்கள், பயோசென்சார்கள், எரிசக்தி சேமிப்பு சாதனங்கள் மற்றும் பிற துறைகளுக்கான தொழில்நுட்பங்களை மெய்யப்பன் உருவாக்கியுள்ளார். விண்வெளி ஆய்வு மட்டுமின்றி புற்றுநோய் மற்றும் நோய்த்தொற்று கண்டறிதலுக்கு தேவையான மருத்துவத்துறை சார்ந்த சென்சார்களையும் இவர் தலைமையிலான குழு கண்டறிந்துள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்படும் வீரர்கள் அடிக்கடி பூமிக்கு வந்து பொருட்களை எடுத்து செல்வதை தவிர்க்கும் வகையில், ஆய்வு மையங்களில் உருவாக்கப்படும் கருவிகளை விண்வெளியில் இருந்தவாறு பெற்றுக்கொள்ள வகை செய்யும் 3டி பிரிண்டர்களின் பயன்பாட்டை நனோ தொழில்நுட்பத்தை கொண்டு அதிகப்படுத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், அடுத்த ஐந்தாண்டுகளில் இது செயல்பாட்டுக்கு வருமென்று மெய்யா மெய்யப்பன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 41 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மெய்யா மெய்யப்பன், அந்த நாட்டில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்களில் மிகச் சிறந்த சாதனை புரிந்தவர்களில் ஒருவர் என்று கூறலாம்.

ஆனால், தனது சாதனைக்கு சரியான நேரத்தில், சரியான இடத்தில் இருந்ததும், அதற்குரிய வழிகாட்டுதல் கிடைத்ததுமே காரணம் என்றும் கடின உழைப்பும் தெளிவான குறிக்கோளுமே வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கான வழிகள் என்றும் அவர் கூறுகிறார்.

மேலும், தமிழுக்கும் தனக்குமான உறவு ஒவ்வொரு நாளும் இடைவிடாது தொடர்ந்து வருவதாக அவர் கூறுகிறார்.

நான் என்னதான் அமெரிக்காவில் இத்தனை ஆண்டுகளாக வாழ்ந்து வந்தாலும், நான் ஒரு தமிழர் என்பதை நினைத்து பெருமிதம் கொள்கிறேன். அந்த அடையாளம் எனது மரபணுவில் நிரந்தரமாக உள்ளது.

மேலும், உலகின் மிகவும் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழிலிருந்துதான் பல்வேறு மொழிகள் பிறந்தன என்பது பெருமைக்குரிய விடயம்.

---

# தொழிலுக்கான திறன்களை பாடசாலை வகுப்பறையில் உருவாக்குதல் அவசியம்




**இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக மார்ச் மாதம் 13ஆம் திகதி இழுத்து மூடப்பட்ட பத்தாயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகள் சுமார் ஐந்து மாதங்களின் பின்னர் மீண்டும் வழமை நிலைமைக்குத் திரும்பியுள்ளன.**

உலக நாடுகள் பலவற்றில் இன்னும் கொரோனாவின் தாக்கம் குறைந்தபாடில்லை. அதனால் அங்கெல்லாம் பாடசாலைகள் இன்னும் இழுத்துமூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. அந்தவகையில் இலங்கை 12 இழப்புகளுடன் அதிஷ்டவசமாக அனைத்து பாடசாலைகளையும் மீள வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வந்த ஜனாதிபதி தொடக்கம் கல்வி, சுகாதார, பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் வரை பாராட்டுக்குரியவர்கள்.

மார்ச் 13இல் மூடப்பட்ட பாடசாலைகள் சுமார் மூன்றரை மாதவிடுமுறைக்குப் பின்னர் ஜூன் மாதம் 27ஆம் திகதி திறக்கப்பட்டு மாணவர்களை 6ஆம் திகதி பகுதியாக உள்ளீர்த்தது. அப்படி ஆரம்பித்த பாடசாலைகள் ஒரு வாரத்துள் யூலை 13ஆம் திகதி திங்களன்று மீண்டும் மூடப்பட்டன.

பின்பு அதேமாதம் 17ஆம் திகதி திறக்கப்பட்டு பகுதியளவில் நடைபெற்று வந்தன. இறுதியாக நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் நீண்ட கொரோனா விடுமுறையின் பின்னர் கடந்த ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஒரே தடவையில் மீண்டும் திறக்கப்பட்டன. எனினும் பாடசாலைகளின் மாணவர்கள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வகுப்பு ரீதியாக வாரநாட்களில் பாடசாலை மட்டுப்படுத்தப்பட்டளவில் ஆரம்பமானது.


அந்த நடைமுறை விலக்கிக் கொள்ளப்பட்டு கடந்த 2ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் வழமைபோல பாடசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. கல்வியமைச்சின் புதிய அறிவித்தலின்படி சகல பாடசாலைகளையும் செப்ரம்பர் முதல் வழமைபோல நடாத்துவது என்றும் இரண்டு கட்டங்களாக ஆரம்பிப்பது என்றும் கூறப்பட்டிருந்தது தெரிந்ததே.

சுகாதாரப் பரிந்துரைகளுக்கு அமைய 2 ஆம் திகதி முதல் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்கள் காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் செப்ரெம்பர் 8ஆம் திகதி தொடக்கம் ஆரம்ப நிலை வகுப்புக்கள் உட்பட அனைத்துப் பாடசாலைகளும் வழமை போன்று இடம்பெறும். கொரோனா வைரஸ் பரவுவதால் நாடு முழுவதிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் மேற்கொண்ட வேலைத் திட்டத்தை இடைநீக்கம் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

அதன்படி திட்டமிட்ட கால அட்டவணையின்படி பாடசாலை நடவடிக்கைகளைக் காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை மட்டுமே நடத்துமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதால் தற்போது சில வகுப்புகள் பிற்பகல் 3.30 மணி வரை நடத்தப்பட்டுவந்தமை குறிப்பிடத் தக்கது. இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தடைப்பட்டிருந்த பாடசாலை விளையாட்டு போட்டிகளை மீண்டும் ஆரம்பிக்க விளையாட்டு மற்றும் சுகாதார அமைச்சுக்கள் அனுமதி வழங்கியுள்ளன.



**3 பரீட்சைகளும் 3 விடுமுறைகளும்**

கொரோனா தாக்கம் காரணமாக பாடசாலைகள் எவ்வாறு கட்டம் கட்டமாக திறக்கப்பட்டதோ அவ்வாறே கட்டம் கட்டமாக விடுமுறையும் வழங்கப்படவேண்டியதாயிற்று. காலத்தின் நிலைமையின் அவசியம் கருதி இச்செயற்பாடுகளை அரசாங்கம் கச்சிதமாக கையாண்டு வருகிறது.

அதன்படி எதிர்வரும் 4 மாதங்களில் 3 பொதுப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன. அதனையொட்டி 3 குறுகியகால விடுமுறைகளும் வழங்கப்படவிருக்கின்றன. ஏனெனில் பரீட்சை நடைபெறும் காலங்களில் பாடசாலை நடாத்தமுடியாது என்பதற்கிணங்க இவ்விடுமுறைகள் கல்வியமைச்சினால் வழங்கப்படுகின்றன. எனினும் இவ்விடுமுறையை பிரயோசனமாக மாற்றுவதென்பது ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் கைகளில் தங்கியுள்ளது. கொரோனாவினால் இழந்த கல்வியை மீட்டெடுப்பதில் அர்ப்பணிப்பு பொதுநலம் அவசியமாகின்றது. இதற்கென அரசாங்கம் சுற்றுநிருபத்தை வெளியிடும் என எதிர்பார்க்க முடியாது.

**பரீட்சைகள்**

2020 ஆம் ஆண்டுக்கான பொதுப் பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒக்டோபர் 11 ஆம் திகதியும்

க.பொ. த உயர் தரப் பரீட்சைகள் ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல் நவம்பர் 06 வரையும் நடைபெறவிருக்கின்றன.

அதேபோன்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் ஜனவரி 18 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 27 ஆம் திகதி வரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் தவணை நவம்பர் 9 முதல் டிசம்பர் 23 ஆம் திகதி வரையாகும்.

**விடுமுறைகள்...**

பரீட்சைகளை மையமாக வைத்து எதிர்வரும் 4 மாதங்களில் 3 கட்டங்களாக விடுமுறைகளை வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.அதற்கேற்ப முதற் கட்டமாக ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் நவம்பர் 8ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படும். இரண்டாம் கட்டம் வருட இறுதி விடுமுறை டிசம்பர் 24 முதல் 2021 ஜனவரி 4 ஆம் திகதி வரையாகும்.

மூன்றாம் கட்டமாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் ஜனவரி 18 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 27 ஆம் திகதி வரையும் நடைபெறும் காலப்பகுதியில் அனைத்து பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்கப்படும்.

எனினும் ஜனவரி 1 முதல் 17 வரை க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் விடுமுறை வழங்கப்படும்.

க.பொ.த சாதாரண தர பரீட்சையின் பின்னர் பெப்ரவரி 1 முதல் மீண்டும் அனைத்துப் பாடசாலைகளும் வழமைபோல ஆரம்பமாகும்.

அனைத்து ஆசிரியர்களும் கடமைக்கு சமுகமளிக்க வேண்டும். கற்பித்தலுக்கு மேலதிகமாக மேற்பார்வை மதிப்பீடுகளை பரீட்சித்தல் சுகாதார மற்றும் ஒழுங்கு பேணல் கருமங்களிலும் பொறுப்புக்களை கையேற்க வேண்டும். அனைத்து ஆசிரியர்களுக்குமான கடமைநேரம் மு.ப. 7.30மணி தொடக்கம் பி.ப.1.30மணி வரையுமாகும். கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் வழமைபோன்று கடமைக்காக சமுகமளிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கவும்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனிடம் பகிரங்க வேண்டுகோள்

**துறைநீலாவணை நிருபர்**

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி இரா.துரைரெத்தினம், முன்னாள் கிழக்கு மாகாண சபை சிரேஸ்ட உறுப்பினர், பத்மநாபா மன்றம் ஈ.பி.ஆர்.எல்.எப், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ம க்களுக்கு தேவையான விடயங்களை செய்வதற்கு தமிழ் மக்கள் வாக்களிப்பின் ஊடாக சட்டரீதியான ஆணையை உங்களுக்கு வழங்கியதன் காரணமாக நீங்கள் இராஜாங்க அமைச்சராக கடமைகளை பொறுப்பெடுத்தமைக்கு எனது வாழ்த்துக்களையும்,நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதில் நீங்கள் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்திற்கு அதிகாரம் வழங்குவது தொடர்பாகவும், தரம் உயர்த்துவது தொடர்பாகவும் இதற்கான பல முயற்சிகளை கடந்த காலத்தில் மேற்கொண்டு இருந்தீர்கள். அவ் வேலையைச் செய்வதற்கு உங்கள் கையில் ஆளுந் தரப்பிற்கான அதிகாரங்கள் தற்சமயம் உள்ளன.

இவ் அதிகாரத்தை பயன்படுத்துமுகமாக தமிழ் பிரதேச செயலகத்திற்கு அதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதென்பது எந்த இனத்திற்கும் எதிரான விடயமல்ல. இந்த அதிகாரத்தை அமுல்படுத்துவது அரசியல் வாதிகளுமல்ல, தமிழ் மக்களுமல்ல. இவ் அதிகாரத்தை அமுல்படுத்துவது அரச நிருவாகம். நிருவாகக்கட்டமைப்பு இயங்குவதற்கு சட்டதிட்டங்களும், சுற்று நிருபங்களும் உள்ளது என்பதை சந்தேகம் கொள்பவர்கள் மறந்து விடக் கூடாது.

தமிழ் சமூகம் அரசியல் ரீதியான அதிகாரங்களை பல வருடங்களாக அமுல்படுத்துவதற்கான சூழ்நிலை இருக்கவில்லை. பலமொழி, பலஇனம், பல கலாசாரம் உள்ள அம்பாறை மாவட்டத்தில் தமிழ் சமூகம் மிகவும் சிறப்பான முறையில் கட்டுக்கோப்பாக வாழ்ந்து வருவதோடு, ஏனைய இனங்களில் ஜனநாயகத்தையும், கலாசாரத்தையும் மதித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இனங்களுக்குள் முரண்பாடுகள் ஏற்படாதவாறு அனைவரிடமும் பேசி அதிகாரங்களை அமுல்படுத்த வேண்டும். பிரதேச செயலகத்திற்கு அதிகாரங்களை வழங்குவதனுடாக மக்கள் நன்மை அடைவார்கள். மக்கள் நன்மை அடைவதன் ஊடாக நல்லாட்சிக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். 1989ம் ஆண்டு இருந்து இன்ற வரையும் அதிகாரம் இல்லாமல் இயங்குகின்ற கல்முனை தமிழ் பிரதேச செயலகம் அதிகாரம் வழங்குவதினூடாக பாதிக்கப்பட்ட மக்கள் நன்மை அடைவார்கள்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்ற ஆட்சியாளர்களாக உள்ள அரசின் இராஜாங்க அமைச்சராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். அமைச்சுப் பதவியை பொறுப்பேற்கும் போது மக்களுக்கு சேவை செய்வதற்காகவே நீங்கள் அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டதாக தெரிவித்துள்ளீர்கள். இதில் முதல் வேலையாக உங்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பணியை செய்து முடிப்பதற்கு உங்களால் முடியும்.

இவ்விடயத்தை இனமுரண்பாடு தோற்றுவிக்கப்படாமல் அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாறு கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மசகு எண்ணெய் கசிவுக்கான...

புகை வர வாய்ப்பு உள்ளது. கப்பலுக்கு உரிமையான நிறுவனமும் எம்முடன் தொடர்பில் உள்ளது. முழுமையாக தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு கப்பல் பாதுகாப்பாக உள்ளதென உறுதிசெய்யப்பட்டப் பின்னர் கப்பல் நிறுவனத்துக்கு வழங்கப்படும்.

தற்போதைய சூழலை பொறுத்த வரை கப்பல் மூலம் இலங்கையின் கடற்பரப்பில் எண்ணைக் கசிவு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவானதாகும். விபத்துகள் ஏற்பட்டால் எண்ணெய்க் கசிவு ஏற்படக் கூடியதுதான். ஆனால், கப்பல் சென்று மோதுவதற்கான எவ்வித வாய்ப்புகளும் இல்லாமையாலும் கடற்பரப்பு ஆழமாக இருப்பதாலும் எண்ணெய்க் கசிவு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அத்துடன், கப்பல் தற்போது இலங்கையின் தெற்கு கடற்பரப்பை நோக்கி நகர்ந்த வண்ணமுள்ளது.

இந்தியாவின் கப்பல் தீயணைப்பு படையும் எம்முடன் இணைந்துள்ளனர். மேலும் இரண்டு கப்பல்களை அந்த இடத்திற்கு இன்று (நேற்று) மாலை அனுப்பவுள்ளோம். இந்திய கடற்படையின் கப்பலொன்றும் வந்துள்ளது. அதிலுள்ள ஹெலிக்கொப்டர்களும்பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையின் பிரமாண்டமான இரண்டு டக் ரக கப்பல்களும் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் சில கப்பல்களை அனுப்பவுள்ளோம். தீ பரவலை கட்டுப்பத்தி பாதுகாப்பான முறையில் கப்பலை அகற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

23 பேர் கப்பலில் இருந்தனர். இதில் 19 பேர் கடற்படையினரிடம் உள்ளனர். அவர்களுக்கு எவ்வித பாதிப்பு இல்லை. ஒருவருக்கு மாத்திரமே பாரிய காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் இன்னமும் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளார். வெடிப்புச் சம்பவம் ஏற்பட்ட இடத்தில் இருந்ததாலேயே அவருக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவர் மீண்டுவருது சற்று கடினமாகும். அவர் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கப்பலின் மாலுமி மற்றும் மற்றுவொருர் இந்திய கடற் பாதுகாப்பு அதிகாரிகளின் கப்பலில் உள்ளனர்.

இந்தக் கப்பலின் என்ஜின் அறையில்தான் முதலில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவொரு ஜப்பான் சான்றிதழ் பெற்ற கப்பலாகும். வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கும் மசகு எண்ணெய் உள்ள இடத்திற்கும் இடையில் பாரிய இடைவெளி உள்ளது. வெடிப்புச் சம்பவத்தால் கப்பலில் உள்ள எண்ணெய்க்கும் பாதிப்பு ஏற்படாதென்றே நினைக்கிறோம். வலயத்தின் அனைத்து நாடுகளுக்கும் நாம் இதனை தெரியப்படுத்தி அவர்களது வளத்தை இந் நடவடிக்கைக்களுக்கு பயன்படுத்த எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத...

சென்று கொண்டிருந்தபோது, இலங்கையில் கிழக்கு கடற்பரப்பில் 38 கடல் மைல் தொலைவில் நேற்றுமுன்தினம் தீப்பிடித்தது. இந்த கப்பலில் 2,70,000 தொன் மசகு எண்ணெய் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்து திணைக்களம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை துறைமுக அதிகாரசபை, சுற்றுச்சூழல் அதிகார சபையின் கீழ் உள்ள கடல்சார் பாதுகாப்பு திணைக்களம், மீன்வளத் துறை, இடர் முகாமைத்துவ திணைக்களம், வானிலை ஆய்வுத் துறை, வனவிலங்குத் துறை, இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் உட்பட 15 நிறுவனங்கள் ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டம் இந்த செயற்பாட்டை வெற்றிக்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நவாஷ் ஷெரீப்புக்கு...

முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், லண்டனில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர் பிணையில் வெளிவர முடியாதவாறு பிடியாணையைப் பிறப்பிக்குமாறு மாநில பொலிஸ் ஆணையாளர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து பிடியாணையைப் பிறப்பித்த நீதிபதி, நீதிமன்றக் கட்டளையை உடனடியாக நிறைவேற்றுமாறு வெளிவிவகார அமைச்சிற்கு பணிப்புரை விடுத்தார்.

## நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் பட்டதாரிகளின் தகைமை சான்றிதழ்களை பரீட்சிக்கும் நேர்முக தேர்வு

**பாறுக் ஷிஹான்**

அரச சேவையில் பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளின் அடிப்படை தகைமை சான்றிதழ்களை பரிசீலனை செய்யும் நேர்முகத்தேர்வு பிரதேச செயலகங்களில் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலகத்திலும் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனின் வழிகாட்டலில் நேர்முகத்தேர்வு நேற்று காலை முதல் மாலை வரை இடம்பெற்றது.

இதன் போது கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் மனோஜ் இந்திரஜித் ,திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.சிவபாதம் ,நிர்வாகப்பிரிவின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ரி ஹமீட்,விதாதா வள நிலைய விஞ்ஞான தொழினுட்ப உத்தியோகத்தர் எம்.முருகானந்தம் , உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர் அடிப்படை தகைமை சான்றிதழ்களை பரிசீலனை செய்யும் நேர்முகத் தேர்வினை நடாத்தியதுடன் நேர்முகத்தேர்வின் ஒழுங்கமைப்பை பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.யோகஸ்வரன் மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதி கோட்டாபயவின் எண்ணக்கருவிற்கமைய தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று நாடளாவிய ரீதியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். இதன் அடிப்படையில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் 102 பட்டதாரிகள் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் அவர்களுக்கு நியமனங்களும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வழங்கி வைக்கப்பட்டன.

## 10 புதிய பல்கலைக்கழகங்களை...

எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் இணைத்து இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வீடு கட்டுமான... 03ஆம் பக்க தொடர்...

அழைத்துவரப்பட்டவர்களில் ஒருவர், இரவு 11 மணியளவில் மேல் தளத்துக்குச் சென்றுள்ளார்.

எனினும் அவர் மதுபோதையில் இருந்தமையால் தடுமாறி நிலத்தில் வீழ்ந்துள்ளார்.

அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

மரணவிசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் முன்னிலையில் (03) இடம்பெற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று...

அதன்படி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜரானார்.

சுமார் 05 மணி நேரம் வாக்குமூலங்கள் வழங்கிய பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது செயற்படுத்தப்பட்ட தேசிய நிறைவேற்று சபையின் தீர்மானம் காரணமாக தான் அரசியல் பழிவாங்கலுக்கு ஆளானதாக அந்த மனுவில் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்தின் 15 அமைச்சர்கள் இதற்கு முன்னர் ஆணைக்குழுவில் ஆஜராகி சாட்சியமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 01 மணிநேர... 03ஆம் பக்க தொடர்...

சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.சிறிநீதன் தலைமையிலான குழுவினர் இரவு 09மணிமுதல் 10மணிவரை பாரிய சத்திரசிகிச்சையிலீடுபட்டனர். அதன் பின்னர் அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டு செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைக்கு உடல்நிலை குறித்து எதுவும் சொல்ல முடியாது. கொரோனா பரிசோதனை முடிவுகள் வந்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## பிரச்சினைகள்... 03ஆம் பக்க தொடர்...

முறையாகவும், பயனாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

பிரச்சினைகளை பேசி, பேசி காலத்தை ஓட்டமுடியாது. நீங்கள் பாடசாலை பிரச்சினையை அறிவித்தீர்கள். இன்று தீர்வை வழங்கினோம். மைதானம் தேவையென கூறினீர்கள். இட ஒதுக்கீடு தொடர்பில் கம்பனியுடன் பேசி அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் நிதி ஒதுக்கப்பட்டு மைதானப் பணியும் ஆரம்பமாகும். இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவை சந்தித்தும் கலந்துரையாடவுள்ளேன்.

அதேவேளை, கல்வி என்பது புத்தக படிப்பு மட்டும் அல்ல, அதனையும் தாண்டி பல விடயங்கள் உள்ளன. விளையாட்டு உட்பட பல் துறைகளில் மாணவர்களால் சாதிக்க முடியும் அதேபோல் அமைதி, அமைதி எனக்கூறி மாணவர்களை முடக்காமல், அவர்களுக்கு கேள்வி கேட்பதற்கான வாய்ப்புகளை ஆசிரியர்கள் வழங்க வேண்டும். அப்போதுதான்திறந்ததலைவர்களைஉருவாக்க முடியும் என்றார்.

## பேரறிவாளனின் 90 நாள்...

விசாரணைக்குட்படுத்திய நீதிபதிகள், எதிர்வரும் 08ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக இருக்கும் பேரறிவாளன், கடந்த 28 வருடங்களாக சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

அவருக்கு 90 நாட்கள் பிணை கோரி அவரது தாயார் அற்புதம்மாள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, பேரறிவாளனுக்கு 90 நாட்கள் பிணை கேட்டு அற்புதம்மாள் அனுப்பிய மனு நிராகரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக சிறைத்துறை விளக்கம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத... 03ஆம் பக்க தொடர்...

அங்கு விரைந்து பதுங்கியிருந்து இவர்களைக் கைதுசெய்துள்ளனர். விசேட அதிரடிப்படை கட்டளையதிகாரி வருண ஜயசுந்தரவின் பயணிப்புரைக்கமைவாக அம்பாறை வலய கட்டளையதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜேஆர். சேனாதீரவின் அறிவுறுத்தலில் மாவட்ட கட்டளையதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் கேஜி. நளின் பெரேராவின் வழிகாட்டலில் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை மோட்டார் சைக்கிள் படையணியின் தலைமையதிகாரி பொலிஸ் பரிசோகர் டீ.எம்.எம். யு.கே.பி. தென்னகோன் தலைமையிலான குழுவினர் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## பிரேமலால் எம்.பி ரிட்மனு...

விதிக்கப்பட்ட நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பிரேமலால் ஜயசேகர, சட்டப்படி பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட முடியாதென சட்ட மாஅதிபர் கடந்த தினம் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே அவரது சட்டத்தரணியால் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள அனுமதியளிக்குமாறு கோரி குறித்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரை இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்த பகுதியில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில், பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் கடந்த ஜுலை மாதம் 31ஆம் திகதி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு தொல்லியல் செயலணிக்கு...

செயலணிக்கு பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டுமென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மற்றும் பிரதமர், பொருத்தமான இருவரை சிபாரிசு செய்யுமாறு அமைச்சரிடம் தெரிவித்திருந்தனர்.

எனினும், இதுவரை இதற்கு இரு பிரதிநிதிகள் நியமிக்கப்படாமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு காலத்தில் புத்திஜீவிகளினால் நிரம்பியவர்களாக நம்மவர்கள் இருந்தனர். கடந்த காலத்தில் தமிழர்களின் தலைமைகள் என்று கூறிக் கொண்டவர்களின்விவேகமற்றவீரத்தின் வெளிப்பாடுகள் ஏற்படுத்திய விளைவுகளில் ஒன்றாக புத்திஜீவிகளுக்கும் தற்போது நம்மத்தியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

கடந்த கால ஆயுதச் செயற்பாடுகளினால் பல புத்திஜீவிகள் விவேகமற்ற முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.

அதன் காரணமாக பெருமளவானோர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

எஞ்சியிருப்பவர்களும் சமூகம் சார் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கி இருப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

இவ்வாறான காரணங்களினால் இச் செயலணிக்கு பொருத்தமான தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிக்க முடியாமல் இருக்கின்றது. எனினும் தொடர்ந்தும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினால் விரைவில் இருவர் நியமிக்கப்படுவர் என்று தெரிவித்தார்.

## அமுலாக்க முன் இன,மத,அரசியல்...

ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் அவருக்கே வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலையில் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

## தேர்தலுக்கு முன்னர்...

குற்றச்சாட்டுக்கள் காரணமாக மாகாண சபை தேர்தல் முடியும் வரை பதவியில் நீடிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஓய்வு பெற்றுச் சென்றால் நல்லது, என அமைச்சர் விமல் வீரவன்ச முன்வைத்த குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கு போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இலங்கை கடற்பரப்பை பாதுகாக்க...

ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான கப்பல் குறித்து விசேட கலந்துரையாடலொன்று நேற்று சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றது.

துறைசார் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, சமுத்திர ஊழல் ஒழிப்பு அதிகார சபையினர் உட்பட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர,

02 இலட்சத்து 70ஆயிரம் தொன் எரிபொருளுடன் இந்த கப்பல் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதிலுள்ள எரிபொருள் வெடிப்புக்கு உள்ளானாலோ அல்லது கப்பலில் இருந்து எண்ணெய்க் கசிவுகள் ஏற்பாட்டாலோ பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்படும்.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்புகள் ஏற்படுமானால் அதனைத் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பாரிய எண்ணைக் கசிவுகள் ஏற்பட்டால் ஹம்பாந்தோட்டைமுதல் யாழ்ப்பாணம் வரையான கடற்பரப்பில் இது பரவலடையும்.

இதனை தனியொரு நாட்டால் மாத்திரம் கையாள முடியாது என்பதால் தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வது அவசியமாகும். அதற்குத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கப்பல் உரித்துடைய நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து உரிய அரச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

இந்த கப்பலிலுள்ள எரிபொருளை வேறு கப்பலுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை கடற்படையினர், விமானப் படை மற்றும் இந்திய பாதுகாப்புப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## ஏற்றுமதி பொருளாதாரத்தை வெற்றி...

கொரோனாவுக்கு முன்னர் தேசிய ஆடை உற்பத்தியாளர்களுடன் நடத்திய சந்திப்பின் போது அவர்களது பிரச்சினைகள் குறித்து ஆழமாக ஆராயப்பட்டதுடன், அவர்களின் ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்குள்ள தடைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்காக 'சர்வதேச ரீதியான சாதாரண சந்தை வாய்ப்புகள்' என்ற தொனிப்பொருளில் இவர்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி தொடர்பிலான விழிப்புணர்களை ஏற்படுத்த திட்டமிட்டிருந்தோம்.

மக்களுடைய அரசாங்கம் என்ற அடிப்டையில் மக்களுக்கான பணிகளை செய்வது எமது பொறுப்பு. அதன் பிரகாரம் தேசிய ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஆடை ஏற்றுமதி தொடர்பில் விளக்கமளிப்பது அமைச்சின் பொறுப்பாகும். ஏற்றுமதி சபை மற்றும் துறைசார் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகிறோம். தேசிய ஆடை உற்பத்தி தொடர்பில் எமது அரசாங்கம் அதிகூடிய கவனத்தை செலுத்தியுள்ளது என்றார்.

## என்ஜின் செயலிழந்துள்ளதால்...

கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கப்பல் தொடர்பிலான அனைத்து தகவல்களும் புகைப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. தீயை அணைக்கும் முயற்சியில் கடற்படையும் விமானப்படையும் எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன.

கப்பலால் எவ்வித பாதிப்பும் நாட்டுக்கு ஏற்படாத வண்ணமும் தீயை கட்பாட்டுக்குள் கொண்டுவர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கடற்படை, விமானப் படை மற்றும் உரிய அரச நிறுவனங்கள் ஊடாக எடுத்துள்ளோம்.

இலங்கையின் கிழக்கு கடற்பரப்பின் சங்கமன்கண்டிக்கு 38 கடல் மைல்கள் தொலையில் பனாமா நாட்டுக்கு சொந்தமான எண்ணைக் கப்பலொன்று ஈராக்கிலிருந்து இந்தியா நோக்கி பயணத்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தீ விபத்துக்குள்ளானது.

இந்தத் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இலங்கை கடற்படையும் விமானப் படையும் இணைந்து பணியாற்றி வருகின்றனர். கப்பலில் தீ பரவ ஆரம்பித்தவுடன் கப்பலில் இருந்தவர்கள் அருகில் பயணித்துக்கொண்டிருந்த கப்பலொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படைக்கு தகவல் வழங்கப்பட்ட உடனே இதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்து விட்டனர்.

தீயை அணைக்கும் முயற்சியில் கடற்படையும் விமானப்படையும் எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. இந்தியாவின் பாதுகாப்பு பிரிவினரும் இணைந்துள்ளனர். தண்ணீருக்குப் அப்பால் தீயை அணைக்கும் திரவியங்களும் பாவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த கப்பலில் உள்ள 2,70,000 தொன் மசகு எண்ணைத் தொடர்பிலேயே எமது நாட்டில் உள்ளவர்கள் தற்போது அச்சம் அடைந்துள்ளனர். இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுத்துள்ளோம். இந்தியா எமக்கு உதவிகளை வழங்கி வருகிறது. ஏனைய சில நாடுகளும் உதவ முன் வந்துள்ளன.

சில கப்பல்களை கொண்டு சென்று குறித்த கப்பல் இலங்கையை நோக்கி நகர்வதை தடுப்பதற்கான முயற்சிகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம். சிலவேளை கப்பலிலிருந்து எண்ணெய்க் கசிவு ஏற்பட்டால் அது இலங்கையின் கரைக்கு வராதவண்ணம் தடுப்பதற்கான நடவடிக்கைளையும் கடற்படை மற்றும் உரிய அரச நிறுவனங்கள் ஊடாக எடுக்கப்பட்டுள்ளன.

## ஆன்மீக நூல் வெளியீட்டு விழா



களுத்துறை மாவட்டம் இங்கிரிய, றைகம் மேற்பிரிவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ குறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தின் வரலாற்றையும் அதன் பெருமைகளையும் பறைசாற்றும் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு றைகம், மேற்பிரிவு ஸ்ரீகுறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க ஆலயத்தின் கொடிதம்ப பிரதிஷ்டை நிகழ்வின் போது வெளியிடப்படவுள்ள இந்த நூல் இதுவரை இலங்கையில் வெளிவந்த ஆன்மீக சிறப்பு மலர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட படைப்புகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆன்மீகம், தமிழர் வாழ்வியல், தமிழின் செழுமை,அறிவியல் உள்ளிட்ட பல சுவாரஸ்யமான விடயங்களோடு புதிய பாணியில் ஒரு புதுமையான ஆன்மீக நூலாக வெளியாகயிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா செடிகளை வளர்த்த இருவர் கைது

கன்னொருவ வீதி, வாரதென்ன பிரதேசத்திலுள்ள வீட்டுத் தோட்டமொன்றில் கஞ்சா செடிகளை வளர்த்துவந்த இருவரை, நேற்றுமுன்தினம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர்களிடமிருந்து ஐந்தரை இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐந்தரை கிலோ கிராம் கஞ்சா செடிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்டச் சுற்றிவளைப்பின்போதே, மேற்படி இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.மேற்படி இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கண்டி வைத்தியசாலைக்கு அண்மித்த பிரதேசத்தில், 62.35 கிராம் ஹெரோய்ன் மற்றும் 50,820 ரூபாய் ரொக்கப் பணத்துடன் பெண்ணொருவரை (வயது 32), போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர், நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இதன்போது சுமார் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் வகுப்பறை கட்டட பிரச்சினைக்கு தீர்வு

**(ஹற்றன் சுழற்சி , ஹற்றன் விசேட, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்)**





ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடம் நேற்று தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடியே 14 இலட்சம் ரூபா செலவில் இந்த இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று தசாப்த காலமாக புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் போதியளவு கட்டட வசதிகள் இன்மையால் மாணவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

75 வருடத்திற்கு மேல் பழைமை வாய்ந்த பலகையினால் வேயப்பட்ட தோமஸ் க ட்டடத்திலேயே சுமார் ஆறு வகுப்புக்கள் கல்வி கற்று வந்தனர். மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்கு உகந்த நிலையில் காணப்படவில்லை. இந்நிலையிலேயே கடந்த 2019 ஏப்ரல் மாதம் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் இந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

எனினும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல், உரிய நேரத்திற்கு நிதி ஒதுக்கப்படாமை, கட்டட பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களினால் கட்டடத்தை உரிய நேரத்திற்கு ஒப்படைக்கமுடியவில்லை. இந்நிலையில் அரசாங்கம் உயர்தரம், சாதாரண தரம், தரம் ஐந்து வகுப்புக்கள் ஆகியன ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஏனைய வகுப்புக்கள் கடந்த 02 ம் திகதியே ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தன.

எவ்வாறான போதிலும்; பழைய கட்டடம் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதால் அக்கட்டடத்தில் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப முடியாது என பெற்றோர்கள் பாடசாலையில் கடந்த புதன்கிழமை ( 02 ஆம் திகதி) ஒன்றுக்கூடி தெரிவித்தனர்.

புதிய கட்டடம் திறக்கும் வரை தங்கள் பிள்ளைகளை குறித்த கட்டடத்தில் கல்வி கற்க அனுமதிக்க முடியாது என தெரிவித்ததனை தொடர்ந்து இது குறித்து ஹற்றன் வலயக் கல்விப்பணிப்பாளரினதும், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானினதும் கவனத்திற்கும் கொண்டு வந்தனர்.

அதனை தொடர்ந்து அவர், கல்வி திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு குறித்த கட்டடத்தினை பாடசாலைக்கு ஒப்படைக்குமாறு தெரிவித்ததனையடுத்து கட்டடம் ஒப்பந்தகாரர்களால் நேற்றுமுன்தினம் உத்தியோகப் பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்தே குறித்த கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

எனினும் இக் கட்டடத்திற்கு தேவையான தளபாடங்கள் ஏனைய கற்றல் கற்பித்தலுக்கு தேவையான உபகரணங்கள் இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் அதிபர் நரேந்திரன் ஜெயந்திநாத் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கட்டட திறப்பு விழாவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், ஹற்றன் வலயக்கல்வி பணிமனையின் கல்விப்பணிப்பாளரும் காப்பாளருமான பி.ஸ்ரீதரன் உட்பட மக்கள் பிரதிநிதிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# களுத்துறை மாவட்ட ஆசிரியர் உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை

களுத்துறை மாவட்ட பெருந்தோட்ட உதவி ஆசிரியர்களாக 2015 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற 60 ஆசிரியர் உதவியாளர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் திகதி பயிற்சியை நிறைவு செய்து கொண்ட போதிலும் இன்னும் தாம் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படாமல் ஆசிரிய உதவியாளர்களாக பாடசாலைகளில் சேவையாற்றுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய மாவட்டங்களில் ஆசிரிய உதவியாளர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான நிலுவை தொகையும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் 2015 ஆம் ஆண்டு நியமனம் பெற்று 2018 ஆம் ஆண்டு கல்லூரி படிப்பை நிறைவு செய்த தமக்கு இன்னும் நியமனங்கள் வழங்கப்படவில்லையென ஆசிரிய உதவியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமின்றி மாதாந்தம் வழங்கும் 10000 ரூபாய் கொடுப்பனவை கூட கல்வி வலயங்கள் முறையாக வழங்குவது இல்லையென ஆசிரியர் உதவியாளர்கள் குற்றம்சுமத்துகின்றனர். குறிப்பிட்ட மாத கொடுப்பனவை அடுத்த மாத கடைசியில் தான் வழங்குகின்றது.

ஏனைய ஆசிரியர்கள் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் தங்களது சம்பளத்தை பெற்றுக்கொள்ளும் நேரம் ஆசிரியர் உதவியாளர்கள் தங்களது தகமைகளை பூர்த்தி செய்தும் எந்தவித பயனும் இல்லாமல் இருக்கின்றார்கள்.

60 பேருக்கான நியமனங்களை பெற்றுத்தருவத்தில் ஏன் இந்த தாமதம் என அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். இது தொடர்பாக மேல்மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் கூறினால் தேர்தல் முடிந்ததும் உங்களுக்கான நியமனம் வழங்கப்படும் என அசட்டுத்தனமாக பதில் கூறி அனுப்பி வைக்கின்றனர்.

தேர்தல் முடிவடைந்து ஒரு மாத காலம் ஆக போகின்ற இந்த நிலையில் தங்களது நியமனம் தொடர்பாக எந்தவித ஏற்பாடுகளும் செய்வதாக தெரியவில்லை.

எனவே ஆசிரியர் நியமனத்தை பெற்றுத்தருமாறு உரிய அதிகாரிகளிடம் மேல்மாகாண களுத்துறை மாவட்ட ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.









ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட புனிதஜோன் பொஸ்கோ கல்லூரியில் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் நேற்று (04) திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட , நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்)

## மடவளையில் ஓவிய திறப்பு விழா நிகழ்வு

**(எம்.ஏ.அமீனுல்லா, பாத்ததும்பரை விசேட நிருபர்)**

மடவளை நகரில் ஜாமியுல் கைராத் ஜும்ஆ பள்ளிவாசல் மதில்களில் வரையப்படட ஓவியங்கள் கடந்த புதன் கிழமை (2) மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினது ஆலோசனையின் அடிப்படையில் நகரங்களை அழகுப்படுத்தும் சுவர் ஓவியங்கள் வரையும் திட்டத்தின்படி இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

மடவளை பஸார் ஜாமியுல் கைராத் ஜும்ஆ பள்ளிவாசல் பரிபாலனசபையின் பதில் தலைவர் அல்ஹாஜ் ஏ. ஹில்மி தலைமையில் நடைபெற்றது. இத் திறப்பு விழாவிற்கு அனுசரணையாளரான 'பெண்டியம் 2000' வியாபார நிறுவனத்தின் உரிமையாளர் ஜெகத் திஸாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# கல்வி வளர்ச்சி மூலமே மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்

**மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி**

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

கல்வி வளர்ச்சி மூலமே மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என கருதி அதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அன்று முதல் இன்று வரை முக்கியத்துவம் வழங்கிவருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஹற்றன் புனிதஜோன் பொஸ்கோ கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டடத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இப்பாடசாலைக்கான கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஆனாலும் அது மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக கையளிக்கப்படவில்லை என 2 நாட்களுக்கு முன்னர் பெற்றோர் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



அந்தவகையில் இன்று கட்டடத்தை திறந்துவைப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இதனை நாம் அரசியலுக்காக திறந்து வைக்கவில்லை. மாணவர்களின் கல்வி வளர்ச்சியே எமது இலக்கு. அதற்கான வழியை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா காலம் முதல் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வரை காங்கிரஸின் தலைமையின் கீழ் மலையக கல்வி வளர்ச்சிக்காக பல திட்டங்களை, சேவைகளை முன்னெடுத்துள்ளோம்.

கல்வி வளர்ச்சி மூலமே மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என கருதி அதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அன்று முதல் இன்றுவரை முக்கியத்துவம் வழங்கிவருகின்றது. எமது தலைவர்களும் நிதிகளை ஒதுக்கினர். ஜீவன் தொண்டமானும் தற்போது கூடுதல் கவனம் செலுத்திவருகின்றார். இது தொடர்பில் அவர் உரிய தரப்புகளுடன் ஆலோசனை நடத்திவருகின்றார்.

# கெசல்கமுவ ஓயாவில் ஆணின் சடலம் மீட்பு

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



காசல்ரீ நீர் தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் கெசல்கமுவ ஓயா நீர் விழ்ச்சிக்கு அருகாமையில் உள்ள ஒடையொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை லெட்சுமி கீழ் பிரிவில் 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் ரவிகுமார் என்பவரே இவ்வாறு நேற்று மதியம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



கெசல்கமுவ ஓயா பகுதிக்கு விறகு சேகரிக்க சென்ற ஒருவரினால் நீரில் சடலம் மிதந்து கொண்டிருப்பதை கண்டு பொதுமக்களுக்கு தகவல் வழங்கப்பட்ட பின் பொதுமக்களால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



குடும்பஸ்தர் நேற்று காலை 07.30 மணியளவில் வீட்டில் இருந்து உப மின் உற்பத்தி நிலையத்திற்கு தொழிலுக்காக வந்தவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் ஹற்றன் மாவட்ட நீதிமன்ற நீதவானினால் மரண விசாரனைகள் இடம்பெற்றவுடன் சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக சடலம் டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கபடவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்,

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை நோர்வூட் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிராமிய வங்கிகளூடான கடன் வழங்கும் திட்டம் ஆரம்பம்

கோப்பாய் நிருபர்

வடக்கில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் கிராமிய வங்கிகள் ஊடாக அங்கத்தவர்களுக்கு அரவணைப்பு கடன் வழங்கும் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று காரணமாக சில மாதங்கள் அநேகமான கிராமிய வங்கிகளில் இக் கடன் வழங்கும் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தன. தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியதும் இந்த அரவணைப்பு கடன் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தவர்களாக இணைந்தவர்கள் மட்டுமே இந்த அரவணைப்பு கடனுக்கு விண்ணப்பிக்க முடியும். அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் கடன் தொகை 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

# வடக்கில் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையம் அவசியம்

## யாழ். வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி

கிளிநொச்சி குறூப் நிருபர்



போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்களை அதிலிருந்து விடுவித்து சமூகத்தில் இணைப்பதற்காக வடக்கில் புனர்வாழ்வு நிலையம் ஒன்று அவசியம் என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த வாரம் கிளிநொச்சி சிந்தனையாளர் வட்டத்தில் நடைபெற்ற விசேட கருத்தமர்வில் கலந்துகொண்டு வடக்கில் போதைப்பொருள் பாவனை தொடர்பில் விளக்கமளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அண்மைய சில வருடங்களாக வடக்கில் பேதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பது செய்திகளின் ஊடாகவும், நேரடியாகவும் அவதானித்து வருகின்றோம். குறிப்பாக இளம் சமூகம் அதிலும் மாணவர்கள் போதை பொருள் பானைக்குள் அதிகம் உள்ளாவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.

தற்போது கசிப்பு, கஞ்சாவிலிருந்து ஹெரோயின், ஐஸ் போன்ற அடுத்தக்கட்ட போதைப்பொருள் பாவனைக்கு சமூகம் சென்றுவிட்டது.

இது எங்கள் சமூகத்திற்கு ஆரோக்கியமனதாக இல்லை. சமூகத்தை பெரும் சீரழிவுக்கு கொண்டு சென்றுவிடும். ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பது மிக, மிக கடினமான பணி.

ஹெரோயினுக்கு அடிமையானவருக்கு அது கிடைக்கவில்லை என்றால் அவர் அதனை பெற்றுக் கொள்வதற்கு எதனை வேண்டுமென்றாலும் செய்வார். கொலை செய்யக் கூடி தயங்க மாட்டார்.

முக்கியமாக நீண்ட தூர பயணத்தில் ஈடுபடுகின்ற பேருந்து சாரதிகள் ஐஸ் போதைப்பொருளை அதிகம் பயன்படுத்துகின்ற தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறே மாணவர்கள் மத்தியில் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதான தகவல் வெளிவந்தவண்ணமுள்ளன. அத்தோடு போதைப்பொருள் பாவனையில் ஈடுப்பட்டவர்களை போதை பொருள் விற்பனையில் ஈடுப்பட்டவர்கள் அதிலிருந்து விடுபட விடமாட்டார்கள். அவர்கள் தங்களின் விற்பனை பரப்பை அதிகரித்துச் செல்லும் வகையில் தங்களின் வலைப்பின்னலை கொண்டிருக்கின்றார்கள்.

எனவே தான் இந்த சூழலிலிருந்து எமது சமூகத்தை மீட்கவேண்டிய நிலையில் நாம் அனைவரும் இருக்கின்றோம்.

வடக்கில் போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை உருவாக்கத்தின் அவசியம் குறித்து அதன் எது நிலைகளை ஆராய்ந்து வருகின்றோம்.

தற்போதைய கொரோனா சூழலில் போதைப்பொருள் பாவனைக்குள்ளானவர்களை நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள நிலையங்களுக்குச் அழைத்துச் செல்ல முடியாது. எனவே தான் வடக்கில் போதைபொருள் தடுப்பு புனர்வாழ்வு நிலையம் ஒன்றை உருவாக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது என்றார்.

# ஹெரோயின், 13 தொலைபேசிகளுடன் இளைஞர் ஒருவர் கைது



யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழில் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் பொலிஸ் அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 13 தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

கொக்குவில் காம்பஸ் லேன் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். 27 வயதுடைய இளைஞரே பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின்படி கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் அவரிடம் இருந்து மீட்கப்பட்ட 13 தொலைபேசிகளுடன் விசேட அதிரடிப் படையினரால், யாழ்ப்பாணம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாகவும், விசாரணையின் பின்னர், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றதாகவும் யாழ்ப்பாணம் பொலிசார் தெரிவித்தனர்.

# போத்தல் கள்ளுக்கான உற்பத்தி வரியை நீக்க அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

மானிப்பாய் தினகரன் நிருபர்

பனங்கள் போத்தலில் அடைப்பதற்கான உற்பத்தி வரியை அரசாங்கம் பலமடங்காக அதிகரித்துள்ளதால் துறைசார்ந்த சங்கங்களுக்கு வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, சங்கங்களின் வளர்ச்சி கருதி உற்பத்தி வரியை (மது வரி) நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலிகாமம் பனை, தென்னை, வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கோரியுள்ளது.

உற்பத்திவரி சம்பந்தமாக கொத்தணித் தலைவர் எஸ் செல்வராசா அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடித்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பனம் தொழில் வல்லுனர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பனங்கள் போத்தலில் அடைப்பதற்கான உற்பத்திவரியாக தாங்கள் ஆட்சியிலிருந்த 2015ம் ஆண்டிற்கு முன்னர் ஒரு லீற்றருக்கு ரூபா 10 வீதம் ஆக இருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் அதனை 01 லீற்றருக்கு ரூபா 50 ஆக அதிகரித்துள்ளது.

இதனால் உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பின் காரணமாக போத்தலிடைத்த பனங்கள்ளை விற்பனை செய்வதில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். எனவே பனங்கள் போத்தலிலடைப்பதற்கான உற்பத்திவரி (மதுவரி) நீக்கம் செய்து தந்துதவுதல் வேண்டும்.

எமது நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற போத்தலிலடைத்த கள்ளிற்கு பதினைந்து நாட்களிற்கு ஒரு தடவை கலால்வரி செலுத்த வேண்டும்.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கள் விற்பனை நிலையங்கள் மூடப்பட்டு இருந்தமையினால் வருமானங்கள் இல்லாத காரணத்தினால் போத்தலில் அடைத்து களஞ்சியப்படுத்து கின்ற கள்ளிற்கு குறித்த பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை கலால் வரிசெலத்த முடியாதுள்ளது.

எனவே மேற்படி விடயத்தை கருத்தில் கொண்டு போத்தலிடைத்த கள் 'பருவமற்ற காலத்தில்' விற்பனை செய்யப்படும் போது கலால் வரி செலுத்துவதற்கான ஒழுங்குகளை செய்து தந்துதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

# வரலாற்று உண்மையை கூறிய விக்னேஸ்வரனை கைது செய்வோம் என்பது வேடிக்கையானது

## - சீ.வி.கே.சிவஞானம்

பருத்தித்துறை விசேட நிருபர்

தமிழர்களுடைய வரலாற்று உண்மையை கூறிய விக்னேஸ்வரனை கைது செய்வோம் என கூறுவது வேடிக்கையான விடயம் என சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கிழக்கு மரபுரிமை செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேத்தானந்த தேரர் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

தமிழர்களுடைய பூர்வீகங்கள், இந்து ஆலயங்கள் பரவிக்கிடக்கின்றன. இலங்கை பூராவும், உலகம் பூராகவும் அதிலும் வடக்கு, கிழக்கில் வரலாறுகள் கல்வெட்டுக்கள் பெருமளவில் காணப்படுகின்றன.



அதனைவிட 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன-ராஜீவ்காந்தி ஒப்பந்தத்திலே வடக்கு,கிழக்கு பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்களுடைய வரலாற்று ரீதியான வாழ்விடம் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டு அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த எல்லாவல மேதானந்த தேரரை விட ஆயிரம் மடங்கு வரலாறு தெரிந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார். வரலாற்று ரீதியாக ஆவண ரீதியாக இந்த மண்ணிலேயே தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

அதனைவிட வேறு எந்த ஆவணம் வேண்டும் இந்த எல்லாவல மேதானந்த தேரருக்கு? இது ஏற்கனவே எப்போதுமே நான் பேசிக் கொண்டு இருக்கின்ற ஒரு விடயம். அதைத் தான் விக்னேஸ்வரனும் தனது கருத்தாக தெரிவித்திருக்கின்றார். அவர் புதிதாக எதையும் இறக்குமதி செய்து கூறவில்லை. அவர் வரலாற்றைத் தான் தெரிவித்திருந்தார் என்றார்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமன கடிதம் வழங்கும் நிகழ்வு



மன்னார் குறூப் நிருபர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாக மாவட்ட ரீதியில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வானது மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் தலைமையில் மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று காலை (11) நடைபெற்றது.

மன்னார் நகர பிரதேச செயலக பிரிவில் பல்கலைக்கழக கல்வி மற்றும் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் உள்ள வேலையற்ற 103 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கிவைக்கப்பட்டன. மேலும் அவர்களுக்கான நியமன பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தெளிவு படுத்தலும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், திட்டமிடல் அதிகாரி, பிரதேச செயலக கணக்காளர், நிர்வாக அதிகாரி, பதிவாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு நியமனங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# 'பிளாஸ்ரிக் அற்ற யாழை நோக்கிய பயணம்'

கோப்பாய் நிருபர்

விதையனைத்தும் விருட்சமே அமைப்பின் 'பிளாஸ்ரிக் அற்ற யாழை நோக்கிய பயணம்' எனும் தொனிப்பொருளில் செயற்றிட்டம் இன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி அமைப்பின் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட நகர்வாக காலை 8 மணி முதல் தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை மையமாகக் கொண்ட வீதியோரங்களில் உள்ள பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்கள் அகற்றப்படவுள்ளன. இச் செயற்பாட்டில் சமூக ஆர்வலர்கள் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# கஜேந்திரகுமாரின் வீட்டில் வேலை செய்த பெரும்பான்மையினத்தவர் உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அமைத்து வரும் வீட்டின் தொழிலாளி ஒருவர் மேல் தளத்திலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நல்லூர் குறுக்குத் தெருவில் இச் சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. காலியைச் சேர்ந்த இந்துனில என்ற 38 வயதான தொழிலாளியே உயிரிழந்தவராவார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக அமைத்து வரும் வீட்டில் கூரை வேலையில் ஈடுபட காலியிலிருந்து அழைத்துவரப்பட்டவர்களில் ஒருவர், இரவு மேல் தளத்துக்குச் சென்றுள்ளார். எனினும் அவர் தவறி நிலத்தில் வீழ்ந்துள்ளார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டது.

இறப்பு விசாரணை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னிலையில் இடம்பெற்றது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# கூட்டுறவு சங்கங்களின் நெல் கொள்வனவுக்காக நிதி ஒதுக்கீடு

கோப்பாய் நிருபர்

வடக்கு மாகாணத்தில் சிறுபோக நெற்செய்கையின் போது கூட்டுறவு சங்கங்களின் நெல் கொள்வனவுக்காக உணவு ஆணையாளர் திணைக்களத்தால் 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள 3 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி ஆலைகள் நெல் கொள்வனவை மேற்கொள்வதற்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

முற்பணமாக வழங்கப்பட்ட இந்நிதி சங்கங்களால் மீளவும் 6 மாத காலத்திற்குள் திருப்பி வழங்கப்படவேண்டும்.

இதில் கிளிநொச்சியில் மூன்று கூட்டுறவு சங்க அரிசி ஆலைகளுக்கு 10 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவில் இரண்டு அரிசி ஆலைகளுக்கு 8 மில்லியன் ரூபாவும், வவுனியாவில் ஒரு அரிசி ஆலைக்கு 2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் பெரும்போகநெற்செய்கையின்போதும்கூட்டுறவு சங்கங்களின் அரிசி ஆலைகளுக்கு நெல் கொள்வனவுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.

# முச்சக்கரவண்டிகள் விபத்து; சாரதிகளுக்கு சிறு காயங்கள்

பா.சதீஸ்

வவுனியா ஹொறவப்பொத்தானை வீதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு முச்சக்கரவண்டிகள் சேதமடைந்ததுடன், சாரதிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வவுனியா நகரிலிருந்து கோவில் குளம் நோக்கி பயணித்த இரு முச்சக்கரவண்டிகள், ஹொறவப்பொத்தான வீதியில் சென்றுகொண்டிருந்த போது, ஒன்றை ஒன்று முந்திச்செல்ல முற்பட்டபோது விபத்து இடம்பெற்றது.விபத்தில் இரண்டு முச்சக்கர வண்டிகளும் சேதமடைந்த நிலையில் அதன் சாரதிகள் சிறு காயங்களிற்குள்ளாகினர். விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒரு இலட்சம் கிலோ மீற்றர் காப்பற் வீதி; மன்னாரில் ஆரம்பம்

மன்னார் குறூப் நிருபர்

நாட்டில் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் காப்பற் வீதி அமைக்கும் திட்டம் நேற்று காலை மடு பிரதேச செயலாளர் பிரிவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் குறித்த வேலைத்திட்டத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதியின் உத்தரவிற்கு அமைவாக குறித்த வேலைத் திட்டம் முதற் கட்டமாக மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோதிநகர் 2ஆம் கட்டை கிராமத்தில் உள்ளக பிரதான வீதி அமைப்பதற்கான வேலைத்திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் சோதிநகர் 2ஆம் கட்டை கிராம மக்கள், கிராம அலுவலகர் உட்பட அழைக்கப்பட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நாடளாவிய ரீதியில் சுமார் 900 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள ஒரு இலட்சம் கிலோ மீற்றர் தூரம் கொண்ட காப்பற் வீதி அமைக்கும் திட்டம் மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோதிநகர் 2ஆம் கட்டை கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'நான்கு குழந்தைகளை வளர்ப்பதில் சிரமம்'

ஐ.சிவசாந்தன்

கட்டுவன் பகுதியினை சேர்ந்த இளம் தாய் ஒருவர் கடந்த மார்ச் மாதம் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளை பிரசவித்திருந்தார்.

குழந்தைகள் நால்வரும் முழுமையான ஆரோக்கியத்துடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குழந்தை பராமரிப்பு பிரிவிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் அவர்களை வளர்ப்பதில் பொருளாதார ரீதியாக பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

அதனால் தமக்கு அரச உதவி வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் என நான்கு குழந்தைகள் கடந்த மார்ச் மாதம் பிறந்தனர்.

குழந்தை மருத்துவ வல்லுநர் சிவலிங்கம் ஜெயபாலனின் சிறப்புக் கண்காணிப்பின் கீழ் குழந்தைகளுக்கான மாதாந்த சிகிச்சை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நான்கு குழந்தைகளையும் வளர்ப்பதில் பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து உதவிகளை பெறுவதற்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ வல்லுநர் சிவலிங்கம் ஜெயபாலன் வழிவகைகளை முன்னெடுத்துக் கொடுத்தார்.

எனினும் எமக்கு இதுவரை எந்தவித உதவிகளும் கிடைக்கவில்லை.

நாள் ஒன்றுக்கு ஒரு பால்மா பெட்டியினை வாங்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளோம்" என்று பெற்றோர்கள் தெரிவித்தனர்.



திருகோணமலை வலய முன்பள்ளிகளுள் ஒன்றான பாலையூற்று வைரவர் கோவிலடி முன்பள்ளியில் நேற்று முன்தினம் சிறார்கள் பூந்தோட்டம் அமைத்தனர். இதில் வலய பொறுப்பாளர் வி.ஷர்மிளா முன்பள்ளி ஆசிரியரான இ.லூர்த்துமேரி மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். படம் திருமலை மாவட்ட விசேட நிருபர்

# அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை ஆரம்பம்

## அதிபர் பி.பரமேஸ்வரன் தெரிவிப்பு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

நாடளாவிய ரீதியில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இவ்வாண்டுக்காக விண்ணப்பித்த ஆசிரியர் பயிற்சியாளர்களை கலாசாலைகளுக்கு உள்வாங்கும் நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிபர் பி.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கமைவாக, அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு உள்வாரி பயிற்சி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகின்றது எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இதுவரை காலமும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரியர் பயிற்சியாளர்களை இணைத்துக் கொள்ளும் நேர்முகப்பரீட்சைகள் கல்வி அமைச்சின் மூலம் கல்வி அமைச்சிலேயே நடைபெற்று வந்தன.

இருந்த போதிலும், இவ்வாறான நேர்முகப் பரீட்சைகளை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் நடத்துவதற்கான அனுமதியினை, கல்வி அமைச்சின் ஆசிரியர் பயிற்சிக்கான நிருவாகம் முதற் தடவையாக ஆசிரியர் கலாசாலைகளுக்கு வழங்கியுள்ளது.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், இஸ்லாம், இரண்டாம் மொழி தமிழ் மற்றும் உடற் கல்வி ஆகிய பாட நெறிகளில் பயிற்சியினைத் தொடர்பவர்களுக்கென எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.



இம்முறை அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 235 பயிற்சி ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கமைவாக ஆரம்பக் கல்வி பாடநெறிக்கு 186 பேரும், ஆங்கிலப் பாடநெறிக்கு 21 பேரும், இஸ்லாம் பாடநெறிக்கு 11 பேரும், உடற்கல்வி பாடநெறிக்கு 10 பேரும், இரண்டாம் மொழி தமிழ் பாடநெறிக்கு ஐவரும், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் பாடநெறிக்கு இருவரும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், இஸ்லாம், இரண்டாம் மொழி தமிழ் ஆகிய பாட நெறிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரையும், ஆரம்பக் கல்வி பாட நெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்கிழமை முதல் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 முதல் பி.ப 4.30 வரை இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக கலாசாலையின் 0672277234 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் என்றார்.

# மின்சார தாக்குதலுக்குள்ளான 5 விமான படை வீரர்கள் வைத்தியசாலையில்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை சீனக்குடா விமானப் படை முகாமில் மின்சாரம் தாக்கிய ஐவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது.

திருகோணமலை சீனக்குடா விமான படை முகாமில் நிகழ்வொன்று இடம்பெற உள்ளதாகவும் இந்நிகழ்விற்கு அழகுபடுத்துவதற்காக ஏணியை எடுத்துச் சென்ற போது மின்சாரம் தாக்கியதாகவும், இதனையடுத்து ஐந்து விமான படை வீரர்களையும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் சீனக்குடா விமானப் படை முகாமில் கடமையாற்றி வரும் தர்மேந்திரா (24 வயது), விக்ரமசிங்க (26 வயது), ரத்னசிறி (31 வயது), பிரதீப் குமார (31 வயது), திலகசிறி (39 வயது) எனவும் தெரியவருகின்றது.

# எரிந்த கப்பல் தொடர்பில் கவனமாக இருக்க அறிவுறுத்தல்

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

பாறுக் ஷிஹான்

மசகு எண்ணை கப்பல் தொடர்பில் அம்பாறை மாவட்ட மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சங்கமன் கண்டி கடற் பகுதியில் மசகு எண்ணெய்க் கப்பல் தீப்பற்றி எரிகின்ற நிலையில் பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொண்டு மக்கள் அனைவரும் அவதானத்துடன் இருக்குமாறு அறிக்கை ஒன்றின் ஊடாக தெரிவித்தது.

மேலும் இவ்வெச்சரிக்கை திருக்கோவில், தம்பிலுவில், உமிரி, பொத்துவில், கல்முனை, ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச கடற்பிராந்தியத்தில் வாழும் மக்களை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## மசகு எண்ணெய் கப்பல் தீ

# அவசரகால செயற்பாடுகளை முன்னெடுக்க அறிவுறுத்தல்

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை, சங்கமன் கந்தமுனை பிரதேச கடலில் மசகு எண்ணெய் கொள்கலன் கப்பல் தீ விபத்துக்கான அவசர கால முன்னாயத்த செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம். அப்துல் லத்தீப் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் பிரதேச செயலாளர்கள், கல்முனை மீன்பிடி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட கடல் சார் அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மசகு எண்ணெய் கொள்கலன் கப்பல் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை கடற்படை, விமானப்படை, கரையோர பாதுகாப்பு அதிகார சபை மற்றும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இருந்த போதிலும் தீயினை முழுமையாக கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை நிலவுகின்றது. அத்துடன் கொள்கலன் கப்பல் வெடித்து சிதறக் கூடிய சந்தர்ப்பமுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மசகு எண்ணெய் கொள்கலன் கப்பல் வெடிக்கும் பட்சத்தில் கடல் நீர் பெருக்கு தரையை நோக்கி வரும், கடற்றொழில் வள்ளம் உடையும் சூழல், நீர் நிலை மாசடையும் மற்றும் மீனவர் தொழில் பாதிப்பு ஏற்படுவதோடு உணவு தட்டுப்பாடு ஏற்படும்.

இவ்வாறான சூழ் நிலையிலிருந்து பொது மக்களையும், மற்றும் சூழலையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கரையோர மக்களையும் மீனவர்களையும் விழிப்புணர்வூட்டுதல் மற்றும் விழிப்பாக இருக்க அறிவுறுத்தல் செய்தல், கடல் மற்றும் தரையில் உள்ள வளங்களை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்தல், தேவையில்லாமல் அனர்த்த வேலையில் கடற்கரையில் வேடிக்கை பார்க்கும் விடயங்களை தவிர்க்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் வாழும் வயோதிபர்கள், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் விசேட தேவையுடையோர் விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.



மூதூர் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் மூதூர் கட்டைபறிச்சான் 223 ஆவது படைப் பிரிவின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததானம் மூதூர் தள வைத்தியசாலையில் நடைபெற்ற போது... படம் மூதூர் தினகரன் நிருபர்

# கலைகள் ஒரு சமூகத்தின் கண்ணாடி போன்றதாகும்

பெரியநீலாவணை விசேட நிருபர்

கலைகள் ஒரு சமூகத்தின் கண்ணாடி போன்றதாகும். இத்தகைய கலைஞர்களுக்கு அரசாங்கம் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கிவருகின்றது என அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவித்தார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக பிரதேச மட்டத்திலுள்ள உதவி அவசியமான கலைஞர்களுக்கு உதவி வழங்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய கலைஞர்களுக்கு காசோலைகளை வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

புதிய கலைஞர்களை உருவாக்குவதற்கு மூத்த கலைஞர்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினர் கலைத் துறையில் ஈடுபடுவது குறைந்து செல்கின்றது. பத்திரிகைகள் வாசிப்பது, வாசிக சாலைகளுக்கு சென்று நல்ல புத்தகங்களை வாசிப்பதும் குறைந்து செல்கிறது. எமது முன்னோர்கள் வீட்டுச் சென்ற கலைகளை தொட்டுச் செல்லுபவர்களாக இருக்க வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்தின் வருகை இளம் சமூகம் சிந்திப்பதற்கான வாய்ப்பை குறைத்துள்ளது. ஒவ்வொரு சமூகத்தின் இருப்பையும் பிரதிபலிக்கும் கலைகள் அழிந்து செல்வது அந்த சமூகத்தின் உயிரோட்டத்தை குறைத்து விடும். கலைகளை இரசிப்பது குறித்த ஒரு இனத்திற்காகவோ அல்லது சமூகத்திற்காகவோ அல்ல.

கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களம் கலைஞர் அடையாள அட்டை, சுவதம் கௌரவிப்பு மற்றும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டம் என்று பல்வேறு ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை செய்து வருகின்றது. இதன் ஒருகட்டமாகவே இந்த உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது. உங்களது கலைகள் சமூகத்திற்கு பயனுள்ளதாக இருக்க வேண்டியதும் அவசியமாகும் என்றார்.

# கடலரிப்பால் தென்கிழக்கு பல்கலையை அண்டிய பகுதிகளில் பாதிப்பு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

ஒலுவில் பிரதேசத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் கடலரிப்பின் காரணமாக இப் பகுதியில் பல்வேறு பாதிப்புக்கள் இடம்பெற்று வருவதுடன் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினை அண்டிய பகுதியில் உள்ள நிலப்பரப்பு வெகுவாக கடலரிப்பிற்குள்ளாகி வருவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



ஒலுவில் துறைமுகத்தினை அண்டிய பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் கடலரிப்பினால் இப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட குடியிருப்புக்கள், கரையோரப் போக்குவரத்து வீதிகள், தென்னந் தோப்புக்கள், மீனவ வாடிகள் போன்றன அழிவடைந்து வருவதுடன், கடற்றொழிலினை நம்பியுள்ள மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாக பாதிப்படைந்து வருகின்றன.

ஒலுவில் பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள துறைமுக நிர்மாணப் பணி மேற்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து இப் பகுதியில் இவ் இழப்புக்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடலரிப்பின் காரணமாக ஒலுவில் துறைமுகத்தினை அண்மித்துக் காணப்படும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான பல ஏக்கர் நிலப்பரப்பு கடலால் காவு கொள்ளப்பட்டுக் காணப்படுவதுடன், இப் பல்கலைக்கழகத்தின் எல்லைப் புற மதிற் சுவர்கள் மற்றும் தற்காலிக வேலிகள் போன்றன கடந்த சில தினங்களாக கடலரிப்பிற்குள்ளாகி அழிவடைந்து வருகின்றன.

இதுதவிர, ஒலுவில் பிரதேச மக்களுக்குச் சொந்தமான தென்னந் தோப்புக்களும், பயன்தரும் மரம் செடி கொடிகளும், கடலரிப்பினால் அழிந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

# மணல் வீதியில்லா மாநகரம் வேலைத்திட்டம் ஆரம்பம்



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாநகர சபையின் “மணல் வீதியில்லா மாநகரம்” எனும் கருத்திட்டத்தின் ஊடாக மணல் வீதிகளை கிறவல் வீதியாக செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி பணிச்சையடி பண்ணை வீதி, சின்ன ஊறணி மாதர் சங்க வீதி, மயாநாட்சி அம்மன் குறுக்கு வீதிகள் மற்றும் இருதயபுரம் மயாண வீதி ஆகிய வீதிகளை கிறவல் வீதியாக அபிவிருத்தி செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாநகர சபையின் சொந்த வருமானத்தின் மூலமாகவும், பொது மக்களின் வரிப்பணத்தின் ஊடாகவும் மாநகர சபையின் முழுமையான வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் இப் பணிகளை மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபையின் உறுப்பினர்களான க.ரகுநாதன், வி.பூபாலராஜா. இரா. அசோக் மற்றும் மாநகர பொறியியலாளர் சித்திராதேவி லிங்கேஸ்வரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

## எண்ணைக் கசிவுகள்

# வெளியேறியுள்ளதா என கண்காணிப்பு

திருக்கோவில் தினகரன் நிருபர்



அம்பாறை திருக்கோவில் சங்கமன்கண்டியில் இருந்து சுமார் 38 கடல் மைல் தூரத்தில் கடலில் நேற்று முதல் எரிந்து கொண்டு இருக்கும் கப்பலில் இருந்து எண்ணைக் கசிவுகள் வெளியேறியுள்ளதா என திருக்கோவில் பொலிசார் கடலோர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.ஜெயவீர தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று பிற்பகல் வேளையில் திருக்கோவில் முருகன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள கடற்கரையில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு இருந்தனர்.

இதன்போது திருக்கோவில் பொலிசார் கடல் நீரினை போத்தலில் எடுத்து திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஊடாக கடல் நீரில் எண்ணைக் கசிவு ஏற்பட்டுள்ளதா என பரிசோதிப்பதற்கான கடல்நீர் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தாம் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாகவும் திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எஸ். ஜெயவீர தெரிவித்து இருந்தார்.

இதேவேளை எரிந்து கொண்டு இருக்கும் கப்பலில் இருந்து எண்ணைக் கசிவுகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் கடற்படையினர் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

# கடலரிப்பால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் பொத்துவில் -அறுகம்பைக் கடற்கரை பகுதி

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

சர்வதேச ரீதியில் 'உல்லாசப் பயணிகளின் சொர்க்கம்' என வர்ணிக்கப்படும் பொத்துவில் அறுகம்பைக் குடா பகுதி கடலரிப்புக்குள்ளாகி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் அப் பகுதியிலுள்ள ஹோட்டல் உடமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஜூன் மாதம் முதல் மோஷமான கடலரிப்புக் காரணமாக உல்லாசப் பயண ஹோட்டல்களின் உரிமையாளர்கள் பெருமளவு நஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர். சீமெந்துக் கட்டடங்கள், எல்லை வேலிகள், பயன்தரு மரங்கள் என்பன பெருமளவில் அழிவடைந்துள்ளன.



கடந்த 2019ம் ஆண்டு, ஏப்ரல்21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக அறுகம்பை உல்லாச பயணத்துறை பாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ் வருடம் கொவிட்19 காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் தற்போது, இயற்கை அழிவான கடலரிப்புக் காரணமாக அழிவேற்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். சர்வதேச மற்றும் உள்ளூர் உல்லாசப் பயணிகளினால் களைகட்டும் பொத்துவில் அறுகம்பை, உல்லைப் பிரதேசங்கள் தற்போது சோபையிழந்து காட்சியளிக்கின்றன.



தற்கொலைகளை தடுக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம், திருகோணமலையை நேற்று முன்தினம் பிற்பகல் வந்தடைந்த போது...

# ஐரோப்பாவின் மிகப்பெரிய விபச்சார விடுதி 'திவால்'

ஜெர்மனியின் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட ஐரோப்பாவின் மிகப்பெரிய விபச்சார விடுதிகளில் ஒன்று திவால்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளது.



கொலொக்னே நகரில் பிரதான இடத்தை பெற்றிருக்கும் பாஸ்சாஸ் என்ற 10 மாடிகள் கொண்ட அந்த விபச்சார விடுதியின் பணிப்பாளர் ஆர்மின், 'நாங்கள் ஒரு முடிவில் இருக்கிறோம்' என்று உள்ளூர் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வடக்கு ரைன் வெஸ்பாலியா மாநிலத்தில் விபச்சாரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாஸ்சாஸ் விடுதியில் சுமார் 120 விலைமாதுக்கள் வழக்கமாக பணிபுரிகின்றனர். சமையல்காரர்கள், சிகை அலங்கார நிபுணர்கள் என்று அங்கு சுமார் 60 ஊழியர்கள் உள்ளனர்.

தமது வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிக்க திறன் இல்லாத நிலையில் பெருந்தொற்றை கையாள்வதில் ஜெர்மனி நிர்வாகம் தோல்வி அடைந்திருப்பதாக ஆர்மின் தெரிவித்துள்ளார். வர்த்தகத்தை மீண்டும் திறக்க முடியாது என்று ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையும் அதிகாரிகள் தமக்கு தெரிவித்து வருதாக அவர் குறிப்பிட்டார்.

# கொவிட்–19: பிரேசிலில் தோற்றாளர் எண்ணிக்கை 4 மில்லியனாக உயர்வு

பிரேசிலில் கொவிட்19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4 மில்லியனைத் தாண்டியுள்ளது. இருப்பினும் தற்போது புதிய வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் குறைய ஆரம்பித்திருப்பதாக அந்நாட்டுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரேசிலில் இந்த மாதம் சராசரியாக அன்றாடம் சுமார் 44,000 பேருக்கு நோய்த்தொற்று உறுதியானதோடு, 870 பேர் வரை உயிரிழக்கின்றனர்.

நோய்த்தொற்றின் உச்சத்தைத் தாண்டிவிட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். இருப்பினும் தொடர்ந்து கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.



பிரேசிலில் முதல் முதலாக பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி கொவிட் 19 நோய்த்தொற்று அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னர் அங்கு நோய் வேகமாகப் பரவ ஆரம்பித்தது. 4.04 மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்; 124,600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

நோய்த்தொற்றால் பிரேசிலின் பொருளாதாரத்திற்கு பெரிய அடி விழுந்தது. கிட்டத்தட்ட 9 மில்லியனுக்கும் அதிகமானோர் வேலை இழந்தனர்.

# பிரான்ஸில் கொரோனா தொற்று மீண்டும் உச்சம்



பிரான்ஸில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 7,000க்கும் அதிகமானோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதாக அந்நாட்டுச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து ஐந்தாவது நாளாக மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கையும், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்போர் எண்ணிக்கையும் உயர்ந்ததாக அமைச்சு கூறியது.

வைரஸ் தொற்றால் நேற்று 20 பேர் உயிரிழந்தனர். தொடர்ந்து 4ஆவது நாளாக மரண எண்ணிக்கை ஈரிலக்கத்தில் பதிவானது. பிரான்ஸில் பாதிக்கப்பட்டோர் மொத்த எண்ணிக்கை 300,000க்கும் அதிகம்; அவர்களில் சுமார் 30,700 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸால் இதுவரை உலக அளவில் 2.6 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 8 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகி உள்ளனர். கொரோனாவுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. தடுப்பு மருந்துகளும் பல்வேறு சோதனைக் கட்டங்களில் இருக்கின்றன.

# சவூதியில் வெளிநாட்டு சுகாதார பணியாளருக்கு நீடிப்பு இல்லை



சவூதி அரேபியாவில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் வெளிநாட்டு சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒப்பந்தம் நீடிக்கப்படாது என தெரிவித்துள்ளனர்.

மனிதவள சுகாதார அமைச்சகதின் துணைச் செயலாளர் அப்துல் ரஹ்மான் வெளியிட்ட சுற்றறிக்கையை அடுத்து சவூதியில் முக்கிய மற்றும் தலைசிறந்த வல்லுநர்களைத் தவிர்த்து மற்ற சுகாதாரப் பணியாளர்களுக்கு 10 அண்டுகளுக்கு மேல் ஒப்பந்தம் இல்லை என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலை மாதம், 'சவூதியர்' என்ற திட்டத்தின் கீழ் மற்ற நாட்டு சுகாதாரப் பணியாளர்களுக்கு பதில் 20 வீதம் சவூதி மக்களை மருத்துவம் மற்றும் சுகாதார பணிகளில் பணியமர்த்த முடிவெடுக்கப்பட்டது.

அந்த முடிவை நிறைவேற்றும் விதத்தில் முதற்கட்டமாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கொவிட் –19: ஆசியாவில் 100,000 பேர் உயிரிழப்பு



ஆசியா முழுவதும் கொவிட் –19 வைரஸ் தொற்றால் 100,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் ஐந்தரை மில்லியன் பேருக்கு வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகள் பலவற்றில் வைரஸ் பரவலைத் தடுக்க முடக்கநிலை அறிவிக்கப்பட்டது. சில நாடுகளில் அவை மீண்டும் நடப்புக்கு வந்தன. மரண வீதத்தின் அடிப்படையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடு இந்தியாவாகும். ஆசியாவில் உயிரிழந்த 100,000 பேரில் முக்கால்வாசிப் பேர் இந்தியர்கள்.

அங்கு 3.8 மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்; 67,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இந்தியாவில் புதிதாகச் சுமார் 84,000 பேருக்கு வைரஸ் தொற்று உறுதியானது. உலக அளவில் வேறெந்த நாட்டிலும் ஒரே நாளில் அவ்வளவு அதிகமானோருக்கு நோய்த் தொற்று உறுதிசெய்யப்படவில்லை.

# அமெரிக்காவில் கறுப்பினத்தவர் உயிரிழப்புக்கு காரணமான ஏழு பொலிஸாரும்; இடைநிறுத்தம்

அமெரிக்காவில் கறுப்பினத்தவர் ஒருவர் பொலிஸ் பிடியில் மூச்சுத்திணறி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஏழு பொலிஸார் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மனநலம் பாதிக்கப்பட்டிருந்த டானியல் ப்ரூட் என்ற அந்த ஆடவர் பொலிஸார் மீது உமிழ்வதை தடுக்க அவருக்கு முகமூடி அணிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் இடைநிறுத்தப்படுவது குறித்த அறிவிப்பை வெளியிட்ட ரோசஸ்டர்ஸ் மேனர் லொவ்லி வொர்ரன், திட்டமிட்ட இனவாதமே இந்த உயிரிழப்புக்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ப்ரூட் கடந்த மார்ச் மாதமே உயிரிழந்தபோதும் அதுபற்றி தற்போதே வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அமெரிக்காவில் பெரும் ஆர்ப்பாட்டங்களை தூண்டிய ஜோர்ஜ் ப்ளொயிட்டின் உயிரிழப்புக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே ப்ரூட் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





மற்றொரு கறுப்பினத்தவரான ப்ளொயிட்டின் மரணமும் இதனை ஒத்துள்ளது. இந்த இருவரும் பொலிஸாரால் தடுக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர். இதனை அடுத்து பொலிஸ் ஒடுக்குமுறை மற்றும் நிறவெறிக்கு எதிராக உலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஏழு பொலிஸாரின் இடைநிறுத்தமானது ப்ரூட் உயிரிழந்த பின் எடுக்கப்படும் முதல் ஒழுக்காற்று நடவடிக்கையாக உள்ளது. இந்த ஒப்பந்த விதிகளின்படி நிறுத்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொடர்ந்து சம்பளம் வழங்கப்படும் என்று நகர அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை செய்தியாளர் சந்திப்பில் பேசிய மேயர் வொர்ரன், 'சபையின் ஆலோசனைக்கு எதிராக விசாரணையில் உள்ள அதிகாரிகளை நான் இன்று இடைநிறுத்தம் செய்வதோடு, விசாரணைகளை பூர்த்தி செய்யும்படி சட்டமா அதிபரை நான் வலியுறுத்துகிறேன்' என்றார்.

'டானில் ப்ரூட்டின் முன் எமது பொலிஸ் திணைக்களம், எமது உளச் சுகாதார அமைப்பு, எமது சமூகம், நானும் தோல்வி அடைந்துவிட்டேன்' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த மாத ஆரம்பம் வரை இந்த சம்பவம் குறித்து தம்மை அறிவுறுத்த நகர பொலிஸ் தலைவர் லாரொன் சிங்லேட்டரி தவறிவிட்டதாகவும் மேயர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் கோரிக்கைக்கு அமைய பொலிஸார் உடலில் அணிந்திருக்கும் கெமராவின் வீடியோ பதிவு கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்தே இந்த சம்பவம் வெளிச்சத்திற்கு வந்தது.

தாம் அந்த வீடியோவைப் பார்த்தபோது பொலிஸ் தலைவர் தமக்கு கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பதாக கண்டறிந்தேன் என்று வொர்ரன் தெரிவித்தார்.

# வைரஸ் பரவலை சமாளிக்க தடுப்பு மருந்துகளுக்கு திட்டம்




வைரஸ் பரவலைச் சமாளிக்க அடுத்த ஈராண்டில் 10 நாடுகளைச் சேர்ந்த 28 மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவில் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்க முன்வந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நல அமைப்பான யுனிசெப் அதனைத் தெரிவித்தது.

உலக சுகாதார அமைப்பின் தலைமையிலான கோவக்ஸ் தடுப்பு மருந்துத் திட்டத்தில் யுனிசெப் அமைப்பும் இடம்பெற்றுள்ளது. 28 மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களும் அடுத்த ஈராண்டுக்கான அவற்றின் வருடாந்தரத் தயாரிப்புத் திட்டங்களைத் தன்னிடம் பகிர்ந்துகொண்டதாக அது கூறியது.

உலக அளவில் தடுப்பு மருந்துகளை அதிகம் வாங்கும் அமைப்பாக யுனிசெப் உள்ளது.

100 நாடுகளின் சார்பில் சுமார் 2 பில்லியன் முறை பயன்படுத்தக்கூடிய வழக்கமான தடுப்பு மருந்துகளை ஆண்டுதோறும் வாங்குவதாக அது குறிப்பிட்டது.

# "பலஸ்தீனர் சார்பில் பேசுவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை"

## மஹ்மூத் அப்பாஸ் ஆவேசம்

விரிவான தேசிய உரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கும் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் பிளவுகளை முடிவுக்குக் கொண்டுவர பத்தா மற்றும் ஹமாஸ் இடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ரமல்லா மற்றும் பெய்ரூட்டில் பலஸ்தீன குழுக்களின் தலைவர்களுடன் கடந்த வியாழக்கிழமை வீடியோ கொன்பிரன்ஸ் முறையில் உரையாற்றும்போதே அப்பாஸ் இதனைத் தெரிவித்தார்.

"இப்போதிருந்து எமக்காக பேசுவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை. எமது அபிலாசைக்காக நாமே பேசுவோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையை இஸ்ரேல் தமது ஆட்புலத்திற்குள் இணைக்கும் திட்டத்தை தடுக்கும் வழிகள் பற்றி பேசவே இந்த பலஸ்தீன தரப்புகளுக்கு இடையிலான கூட்டம் இடம்பெற்றது. அத்துடன் இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழலில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலுடனான எந்த ஒரு பேச்சுவார்த்தைகளிலும் நடுவராக மாத்திரம் அமெரிக்க பங்கு வகிப்பதை பலஸ்தீன அதிகாரசபை நிராகரிப்பதாக அப்பாஸ் வலியுறுத்தினார். அரபு அமைதி முயற்சியின் அடிப்படையில் ஐ.நா மேற்பார்வையின் கீழ் சர்வதேச அமைதி மாநாடு ஒன்றுக்கும் அப்பாஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் உரையாற்றிய ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே, "பிராந்திய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதே அமெரிக்காவின் மத்திய கிழக்கு திட்டமாகும். அது இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி அரபு நாடுகளுக்குள் ஊடுருவ இஸ்ரேலுக்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறது" என்றார்.

"பிராந்தியத்திற்கும் எமது பலஸ்தீன அபிலாசைக்கும் முன்னெப்போதும் இல்லாத ஆபத்து மற்றும் மூலோபாய அச்சுறுத்தலைக் கொண்ட யுகத்திற்கு நாம் சென்று கொண்டிருக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஒஸ்லோ உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரவும் பலஸ்தீன ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் அரசியல் திட்டம் ஒன்றை நிறுவும்படியும் அவர் அழைப்பு விடுத்தார்.



அமெரிக்க மத்தியஸ்தத்தில் இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையிலான இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் அறிவிப்பு கடந்த ஓகஸ்ட் 13 ஆம் திகதி வெளியானது.

இதனை பலஸ்தீனர்கள் கடுமையாக எதிர்த்ததோடு இந்த உடன்படிக்கை பலஸ்தீன அபிலாஷைகளை பாதுகாக்காது என்றும் பலஸ்தீன உரிமைகளை புறக்கணிப்பதாகும் என்றும் குறிப்பிட்டனர்.

# ஆறு மாகாணங்களில் மழையுடன் கூடிய வானிலை தொடரும்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

மேல், சப்ரகமுவ, தென், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் தொடர்ந்தும் மழையுடன் கூடிய வானிலை தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன், சீரற்ற வானிலை காரணமாக 2,428 குடும்பங்களை சேர்ந்த 9,853 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும்.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

சூரியனின் தென் திசை நோக்கிய தொடர்பான இயக்கத்தின் காரணமாக இவ் வருடம் ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் மாதம் 07ஆம் திகதி வரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது.

காக்காப்பள்ளி, கட்டுபொத, குருவெல, விலேகம, மஹா ஓயா, தும்பங்கேணி மற்றும் பழுகாமம் ஆகிய பிரதேசங்களுக்கு மேலாக நேற்று நண்பகல் 12.09 அளவில் சூரியன் உச்சம் கொடுத்தது. மழையுடனான காலநிலையால் 4 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5055 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, சீரற்ற வானிலை காணரமாக 2,428 குடும்பங்களை சேர்ந்த 9,853 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள தென் மாகாணத்தில் 1,737 குடும்பங்களைச் சேர்ந்த 7,422 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் மாத்திரம் 1,671 குடும்பங்களைச் சேர்ந்த 7,166 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதுடன், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 66 குடும்பங்களைச் சேர்ந்த 256 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்துக்கு அடுத்தப்படியாக வடக்கு மாகாணத்தில் 423 குடும்பங்களைச் சேர்ந்த 1,577 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் கடும் காற்றுக் காரணமாகவே பாதிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணத்தில் உள்ளவர்களும் சீரற்ற காலநிலையால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டுப்பாடற்ற வேகம்

# டிப்பர் வாகனமொன்று மூன்று லொறிகளுடன் மோதி விபத்து



**தம்புள்ள தினகரன் நிருபர்**

மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மூன்று சிறிய ரக லொறிகளை மோதிச் சென்று நின்றதுடன், சம்பவத்தை அடுத்து டிப்பர் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்று தலை மறைவாகியதாக தம்புள்ள பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் லொறியில் பயணித்த இருவர் படுகாயங்களுடன் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தம்புள்ள, ஹபரணை பிரதான வீதியில் பெல்வெஹர பிரதேசத்தில் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் இடம் பெற்றிருப்பதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

பெல்வெஹர பிரதேசத்திலிருந்து தம்புள்ளையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மணல் ஏற்றப்பட்ட டிப்பர் வாகனம், மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்வதற்கு எத்தனித்த வேளையில் எதிரில் வந்து கொண்டிருந்த இரண்டு சிறிய ரக லொறிகளில் மோதித் தள்ளிச் சென்று, வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மற்றுமொரு சிறிய லொறியொன்றில் மோதி நின்றுள்ளமை பொலிசார் மேற் கொண்ட ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. தம்புள்ள பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு நிலக்கரி கொள்வனவு

புத்தளம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு உடனடியாக கொள்வனவு செய்யும் நடவடிக்கையின் கீழ் 3,00,000 மெற்றிக் தொன் நிலக்கரியை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விஷேட நிலையியற் பெறுகைக் குழுவின் சிபாரிசுக்கு அமைய M/s Swiss Singapore Overseas Enterprises Pte. Ltd என்ற நிறுவனத்திடம் 16.18 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக மின் சக்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# வலி தென் மேற்கில் மூன்று ஆண்டுகளில் 2,185 மின்குமிழ்கள்

**மானிப்பாய் தினகரன் நிருபர்**

வலி தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள சுமார் 600க்கும் மேற்பட்ட வீதிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் 2,185 மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் சில மாதங்களில் அனேகமான மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளமையினால் விசனம் தெரிவித்துள்ள மக்கள், தரம் குறைந்த மின்குமிழ்கள் பொருத்தப்பட்டமையே இந்த நிலைக்கு காரணம் என்று தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என 4 உப அலுவலகங்களை கொண்ட வலி. தென்மேற்கு பிரதேசத்தில் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன.

17 வட்டாரங்களை கொண்ட இப் பிரதேசத்தில் விகிதாசார முறையில் இடம்பெற்ற தேர்தலினால் 28 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் சபை நிதியையும் சேர்த்து வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன.

கடந்த 2017 ஆம் ஆண்டு 600 மின்குமிழ்களும் 2018 ஆம் ஆண்டு 435 மின்குமிழ்களும் 2019 ஆம் ஆண்டு 1150 மின்குமிழ்களும் பொருத்தப்பட்டன. 2185 மின்குமிழ்களும் பொருத்துவதற்கு இலங்கை மின்சார சபைக்கு 24 லட்சத்து 93 ஆயிரத்து 500 ரூபாய் கூலியாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காக்காதீவில் முகத்துவாரம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் சிரமதானம்

முகத்துவாரம் கிராம அபிவிருத்தி சங்கம் காக்கா தீவில் நாளை 6 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு சிரமதான பணியொன்றை செய்யவுள்ளது.

இதில் அமைச்சர் தொலவத்தை கொழும்பு பிரதேச செயலாளர் திருமதி காஞ்சனா, கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான ராஜு பாஸ்கர், மகிந்த காந்தகம, நோபட் பெர்ணாண்டோ, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தனுஜா, யூ. சுரேத்திர, கலைஞர் எஸ். சரவணா, கே. ஈஸ்வரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக முகத்துவாரம் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் ஜே. ஜோசப் ஜே. பி தெரிவித்தார்.

கடற்கரைகளுக்கு அருகிலுள்ள கரையோரங்களையும் சுற்றாடல்களையும் சுத்தப்படுத்தி பேணுவதன் மூலம் கடற்கரைகளை பாதுகாக்கலாம்.

இவ்வாறு கடற்கரைகளுக்கு அருகில் வாழ்பவர்கள் சிரமதானம் மூலம் குப்பைகளையும் போலித்தீன் பைகளையும் அகற்றி சுத்தம் செய்து பாதுகாத்தால் எமது கடல் வளங்களை பேணி பாதுகாத்துக் கொள்ளலாம் என சங்கத்தின் செயலாளர் ஜே. ஜோசப் தெரிவித்தார்.

காத்துவாரம் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் இப்பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகளும் இணைந்து இந்த சிரமதான பணியை மேற்கொள்ளவுள்ளனர்.


இந்த பொதுப் பணிக்கு இப்பகுதியில் வாழும் பொது மக்களும் பங்களிப்பு வழங்கினால் நன்றாக இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய வர்த்தக கொள்கை தயாரிப்பது தொடர்பில் புத்திஜீவிகள் குழு நியமனம்

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய வர்த்தக கொள்கையை வகுப்பதில் உரிய வகையில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் கேட்டறிந்து அதன் கொள்கை வகுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக தற்போதைய காலத்திற்கு பொருத்தமான வகையில் புதிய தேசிய வர்த்தக கொள்கையொன்றை வகுப்பதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் புத்திஜீவிகள் குழு ஒன்றை நியமிப்பதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

03.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 683,530
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 26,347,150.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 23
NLB NATIONAL LOTTERIES















## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

## அலுவலகம் தொடர்பான இடவசதியை வாடகை அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல் மாத்தளை பிரதேச அலுவலகம்

இந்தப்பணியகத்தின் மாத்தறை பிரதேச அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ள தேவைப்பட்டுள்ளது. அந்த கட்டிடமானது, கீழேயுள்ள தேவைப்பாடுகளை கொண்டமைதல் வேண்டும்.

- ➢ குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொண்ட கட்டிடமொன்றாக இருத்தல் வேண்டும்.
- ➢ கட்டிடத்தின் பரப்பளவு 2500 சதுர அடிகளுக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ➢ அறைகளின் எண்ணிக்கை ஆகக்குறைந்தது 04ஆக இருத்தல் வேண்டும்.
- ➢ உள்ளக கழிவறைகள் 02உம் வெளிப்புறமாக ஆகக்குறைந்தது 01 கழிவறையும் காணப்படல் வேண்டும்.
- ➢ குழாய் நீர் வசதி மற்றும் மின்சாரம் காணப்படல் வேண்டும்.
- ➢ மாத்தறை நகர எல்லையிலிருந்து பொது போக்குவரத்து உள்ள பிரதான வீதிக்கு முகப்பாக 02 (இரண்டு) கிலோமீற்றர் எல்லைக்கு உட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும்
- ➢ கேட் ஒன்றுடன் கூடிய பாதுகாப்பு வேலி அல்லது மதில் காணப்படல் வேண்டும்.
- ➢ ஆகக்குறைந்தது 03 வாகனங்களையாவது நிறுத்தி வைக்கப் போதிய இடவசதி காணப்படல் வேண்டும்.
- ➢ அலுவலகத்திற்காக ஒதுக்கப்படும் நிலப்பகுதி முற்றுமுழுதாக பணியகம் தொடர்பாக ஒதுக்கப்பட வேண்டியதுடன் வேறு தேவைகளுக்கு அதனைப் பெற்றுக்கொள்ள முடியாது.

"மாத்தறை பிரதேச அலுவலகம் தொடர்பாக கட்டிடமொன்றை வாடகை அல்லது குத்தகைக்குப் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக்கள்" என தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, குறித்த அமைவிடத்தின் திட்ட வரைபடத்தின் பிரதியொன்றையும், கட்டிடத்தின் உரிமையாளரைத் தொடர்புகொள்ள முடியுமான தொலைபேசி இலக்கத்துடன் 2020.09.18 அன்று பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக குறித்த விலைமனுக்களை கிழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது பிரதான அலுவலகத்திற்கு நிர்வாகப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனு திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்களுக்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு கலந்துகொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியவை**

01. விண்ணப்பங்களிடையே தெரிவு செய்யப்படும் கட்டிடம், பணியகம் தொடர்பாக வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் போது அந்தக் கட்டிடம் தீ/திருட்டு மற்றும் அனர்த்தங்கள் தொடர்பாக காப்புறுதி செய்யப்பட்டிருப்பது உரிமையாளரின் பொறுப்பாகும்.

02. கட்டிட உரிமையாளரினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் மீளவும் அரசாங்க மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இலக்கம் 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே.**

## கேள்விகோரல்

**விளையாட்டு, இளைஞர் விவகார கிராம அபிவிருத்தி அமைச்சு**

**தென் மாகாண சபை**

### மேற்படி விடயம் பற்றிய 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி பிரசுரமான கேள்வி கோரல் அறிவித்தலை திருத்துதல்

அதனடிப்படையில் அவ் அறிவித்தலின் முதலாம் (01) பந்தி கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதாக தயவுடன் அறிவிக்கிறேன்.

01. காலி, லபுதுவ தக்ஷினபாய 3ஆம் மாடியில் அமைந்துள்ள தென் மாகாண விளையாட்டு இளைஞர் விவகார, கிராம அபிவிருத்தி அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவரால் தகுதியும் தகைமையும் உடைய தென் மாகாணத்திற்குள் பதிவுசெய்துள்ள கேள்விதாரர்களின் "ஹிக்கடுவ நாரிகம பல்நோக்கு சேவை நிலையத்தின் கூரையை நிர்மாணித்தல் திட்டத்திற்காக பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

02. அவ் அறிவித்தலின் ஏனைய விடயங்கள் அவ்வாறே இருக்கும் என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ரஞ்சித் யாப்பா**
**செயலாளர்**
**விளையாட்டு இளைஞர் விவகார கிராம அபிவிருத்தி அமைச்சு**
**3ஆம்மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி.**


### வரையறுக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் விதிகளின் கீழ் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

கம்பனியின் பெயர்:
**மினாமி டிரேடிங் (பிறைவட்) லிமிட்டட்**
கம்பனி பதிவு இல : **PV 131705**
பதிவு முகவரி :
**சீமாசஹித்த மாத்தறை பிரதேச கார்மிகயன்கே சமூபகார சமித்திய, மீரா வீதி, இஸ்ஸதீன் நகர், மாத்தறை**
**கம்பனி செயலாளர்கள்**









## இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2020 செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி மற்றும் 05ஆம் திகதி ஆகிய இரு தினங்களிலும் டெய்லி நியூஸ் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுகின்றன.

**SUPPLY, INSTALLATION, COMMISSIONING AND MAINTENANCE OF CCTV CAMARA SYSTEM TO COVER THE AREA OF ADMIN BUILDING AND MAIN ENTERANCE BUILDING AT SEETHAWAKA EXPORT PROCESSING ZONE**

**CONTRACT NO: BOI/SEPZ/ES/2020/23.09.041**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் 2020 செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி மற்றும் 05ஆம் திகதி ஆகிய இரு தினங்களின் டெய்லி நியூஸ் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம்

## பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்விகோரல்

கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழ்க்காணும் வாகனங்களை கொள்வனவு செய்து அகற்றிச் செல்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | விபரம் | டீசல்/ பெட்ரல் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூ. | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூ |
|---|---|---|---|---|
| 01 | வாகன இலக்கம் GE-8942 மிட்சுபிசி டபிள்கெப் - 2000 | டீசல் | 1000/- | 10,000/- |
| 02 | வாகன இலக்கம் 61-6620 டொயோட்டா ஜீப் - 1993 | டீசல் | 1000/- | 10,000/- |
| 03 | வாகன இலக்கம் PB-8059 மைக்ரோ ஜீப் - 2009 | டீசல் | 1000/- | 10,000/- |

01. ஒருவருக்கு லொட் இலக்கம் மூன்றிற்கும் கேள்விகளை சமர்ப்பிக்க முடிவதுடன், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத தொகையை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் காசாளரிடம் காசாக செலுத்தி கேள்வி ஆவணங்களை 2020.09.07 முதல் 2020.09.11 வரை அலுவலக நாட்களில் மு.ப.09.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள மேற்படி வாகனங்களை 2020.09.07 முதல் 2020.09.11 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் பரீட்சித்துப் பார்க்கலாம்.

02. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் காசு வைப்பை இத்திணைக்களத்தின் காசாளரிடம் காசாகச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2020.09.15 மு.ப.10.00 இற்கு முடிவுறும் குறித்த நேரத்திற்கு முன்னர் உங்களது விலைமனுக்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் 3ஆம் மாடியில் கணக்காளர் (வழங்கல்கள்) அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வாகனத்தின் இலக்கத்தை குறிப்பிடுங்கள்

விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டிய முகவரி :-
**பணிப்பாளர் நாயகம்**
**03ஆம் மாடி,**
**கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம்**
**மாளிகாவத்தை, கொழும்பு - 10**

2020.09.15 மு.ப.10.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒருவருக்கு சமுகமளிக்கலாம் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு தகைமை பெறும் கேள்விதாரர்கள் அன்றே வெளிக்கொணரப்படுவதுடன் அவர்கள் வாகனத்தின் கேள்விப் பெறுமதியில் 25%ஐ அன்றே திணைக்களத்தின் காசாளரிடம் காசாக செலுத்துதல் வேண்டும். அத்துடன் மிகுதித்தொகை 07 நாட்களுக்குள் திணைக்களத்திற்கு காசாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.

இது சம்பந்தமாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு இத்திணைக்களத்தின் பிரதம கணக்காளர் - தொலைபேசி இலக்கம் - 0112438291ஐ அழைக்கலாம்.

**கினிகே பிரசந்த ஜனக்க குமார**
**பணிப்பாளர் நாயகம்.**





இந்த சேவை தற்போது நாடு பூராகவும் செயற்படுத்தப்படுகிறது.

லேக்ஹவுஸ் சமூக சேவை


## கல்முனை மாநகர சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு– 2021

**கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பின்வரும் கடைகள், வாகனத் தரிப்பிடங்களுக்கான 2021ஆம் ஆண்டிற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| விடயம் | இடம் | குறியீட்டு இல | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| **01. இறைச்சிக் கடைகள்** | | | | | |
| **I. மாட்டிறைச்சிக் கடைகள்** | | | | | |
| மாட்டிறைச்சிக் கடை இல-01 | கல்முனைபொதுச் சந்தை | KMC/Kal/B/01 | 1,000.00 | 50,000.00 | 550,000.00 |
| மாட்டிறைச்சிக் கடை இல-02 | கல்முனை பொதுச் சந்தை | KMC/Kal/B/02 | 1,000.00 | 50,000.00 | 550,000.00 |
| மாட்டிறைச்சிக் கடை இல-04 | பிரதானவீதி பள்ளியடி (கல்முனைக்குடி) | KMC/Kal/B/04 | 1,000.00 | 12,000.00 | 140,000.00 |
| மாட்டிறைச்சிக் கடை இல-05 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/Nat/B/05 | 1,000.00 | 50,000.00 | 550,000.00 |
| **II. ஆட்டிறைச்சிக் கடைகள்** | | | | | |
| ஆட்டிறைச்சிக் கடை இல-01 | கல்முனைபொதுச் சந்தை | KMC/Kal/M01 | 1,000.00 | 10,000.00 | 95,000.00 |
| ஆட்டிறைச்சிக் கடை இல-02 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/Nat/M/02 | 1,000.00 | 5,000.00 | 12,000.00 |
| **III. கோழி இறைச்சிக் கடைகள்** | | | | | |
| கோழி இறைச்சிக் கடை இல-01 | கல்முனைபொதுச் சந்தை | KMC/Kal/C/01 | 500.00 | 4000.00 | 43,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-02 | கல்முனைபொதுச் சந்தை | KMC/Kal/C/02 | 500.00 | 4000.00 | 42,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-03 | பிரதானவீதி பள்ளியடி | KMC/Kal/C/03 | 500.00 | 4000.00 | 37,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-04 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/Nat/C/04 | 500.00 | 4000.00 | 22,000.00 |
| **02. சந்தைகள்** | | | | | |
| **I. பொது சந்தைகள்** | | | | | |
| கல்முனை பொதுச்சந்தை | கல்முனை நகர் | KMC/Kal/PM/01 | 3000.00 | 200,000.00 | 3,110,750.00 |
| நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | நற்பிட்டிமுனை | KMC/Nat/PM/01 | 3000.00 | 30,000.00 | 250,000.00 |
| **II. மீன் சந்தை** | | | | | |
| மீன்சந்தை | கல்முனை பொதுச் சந்தை | KMC/Kal/FM/01 | 3000.00 | 100,000.00 | 970,000.00 |
| **03. வாகனத் தரிப்பிடங்கள்** | | | | | |
| வாகனத் தரிப்பிடம் - துவிச்சக்கர வண்டி | கல்முனை பொதுச் சந்தை | KMC/Ka/VP/01 | 3000.00 | 100,000.00 | 1,300,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - துவிச்சக்கர வண்டி தவிர்ந்த | கல்முனை பொதுச் சந்தை | KMC/Ka/VP/02 | 3000.00 | 80,000.00 | 662,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - அனைத்து வாகனங்களும் | கல்முனை தெற்கு (ஸாஹிறா கல்லூரி வீதியின் வடக்கு கடற்கரைப் பள்ளி வீதியின் தெற்கு) | KMC/Ka/VP/03 | 3000.00 | 100,000.00 | 720,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - கடற்கரை தவிர்ந்த அனைத்து வாகனங்களும் | கல்முனை வடக்கு- (தாள வட்டான் வீதியின் வடக்கு- பெரியநீலாவனை வீதியின் தெற்கு) | KMC/Mm/VP/04 | 3000.00 | 50,000.00 | 580,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - அனைத்து வாகனங்களும் | கல்முனை நகர் ஐக்கியசதுக்கம் | KMC/Ka/VP/05 | 3000.00 | 30,000.00 | 300,000.00 |

1. விண்ணப்பப் படிவத்தினை வார நாட்களில் 2020.09.04 ஆம் திகதி முதல் 2020.09.23 ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை மாநகர சபையின் நிதிப் பிரிவில் பெற்றுக் கொள்வதோடு, கேள்வி வைப்புத் தொகையினையும் குறித்த காலப்பகுதியில் நிதிப்பிரிவில் மேற்கொள்ளலாம்.
2. முத்திரையிட்ட விலைமனுக்கள் 2020.10.05 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக மாநகர சபையின் முதல்வர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கலாம். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும்.
3. மேலதிக தகவல்கள் தேவைப்படின் மாநகரசபை ஆணையாளரின் 067-2229275 தொலைபேசி அல்லது கணக்காளரின் 067-2224588 தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
4. முத்திரையிட்ட விலைமனுக்களின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பம் செய்யும் விலைமனுக்களின் குறியீட்டு இலக்கத்தினை எழுதவும்.
5 தேர்வு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் கேள்வித் தொகையில் 20% ஐ காசாகவும், 80% ஐ எந்தவொரு வங்கியின் உத்தரவாதக் கடிதமாகவும் (Letter of Guarantee) மாநகர சபை சார்பாக வழங்குதல் வேண்டும்.
6. மேற்படி தெரிவு செய்யப்படும் கேள்விதாரர்கள் ஒரு வார காலத்தினுள் நிபந்தனை 5இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை நிறைவேற்றல் வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. ஒவ்வொரு குத்தகைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

**ஏ.எம்.றகீப் LLB, JPUM**
**தலைவர்- மாநகர முதல்வர்**
**பெறுகைக் குழு, மாநகர சபை, கல்முனை.**






பதுளை மாநகர மண்டபத்தில் 'தேயிலைச் சாயம்' புகைப்படக் கண்காட்சி நேற்று நடைபெற்றது. இவ்விழாவில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அ. அரவிந்தகுமார் மற்றும் வடிவேல் சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## தொழில் திணைக்களத்தின் இடமாற்றம் தொடர்பில் மறுபரிசீலிக்குமாறு செந்தில் தொண்டமான் கோரிக்கை



இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தை அவிசாவளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக மறுபரிசீலிக்குமாறு செந்தில் தொண்டமான் விடுத்த கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளது.

சப்ரகமுவ மாகாண தொழில் திணைக்களத்தை அவிசாவளைக்கு இடமாற்றுவது தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தொழில் பிணக்குகளை தீர்த்துக் கொள்ளல் உள்ளிட்ட இதர பல தேவைகளுக்கு தோட்டத்தொழிலாளர்கள் தொழில் திணைக்களத்தை நாடுகின்றனர். திணைக்களத்தை இடமாற்றம் செய்வதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பில் செந்தில் தொண்டமானால், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அதன் அடிப்படையில் தோட்டப்புறங்களில் பணியாற்றும் அதிகமானோர் தொழில் திணைக்களத்துக்கு வருகை தருவதாகத் தெரிவித்த அமைச்சர் செந்தில் தொண்டமானின் கோரிக்கைக்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளார்.

நிர்வாக ரீதியிலான செயற்பாடுகள் மாத்திரம் அவிசாவளை மத்திய நிலையத்தில் இடம்பெறும் எனவும் ஏனைய அனைத்து விடயங்களும் இரத்தினபுரி திணைக்களத்தில் இடம்பெறும் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

# பட்டதாரிகள், டிப்ளோமா பெற்றவர்கள் 2916 பேருக்கு தொழில் வாய்ப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 2916 பேருக்கு தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுக்க பயிற்சி நியமன கடிதங்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்களுக்கு தொழில்வாய்ப்பை பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 17 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 2916 பேருக்கு பயிற்சி நியமன கடிதங்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்களின் நியமனம் குறித்து நேற்று ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 2916 பயிற்சி நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன..



இதனடிப்படையில் அயகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 98 பேருக்கும், பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 302 பேருக்கும், எஹலியகொடை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 163 பேரும், எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 120 பேரும், எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 427 பேரும், மேலும் கொடக்கவெல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 185 பேரும், இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 209 பேரும், காவத்தை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 58 பேரும், களவான பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 164 பேரும், கிரியெல்ல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 82 பேரும், கொலோன்ன பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 115 பேரும், குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 227 பேரும், நிவித்திகல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 119 பேரும், ஒப்பநாயக்க பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 73 பேரும், பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 201 பேரும், இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 267 பேரும், வெலிகபொல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 106 பேருக்கு நேற்றுமுன்தினம்(2) பயிற்சி நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தில் பயிற்சி நியமன கடிதங்களை பெற்றுள்ள 2916 பேருக்கும் ஒரு வருட காலம் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம மேலும் தெரிவித்தார்.

## மணற்சேனையில் கல்வி நிலையம் திறப்பு



சுவடுகள் தமிழர் அமையம் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி மூதூர் மணற்சேனையில் நேற்று வெள்ளிக்கிழமை (04) கல்வி நிலையமொன்றையும் , சுவடுகள் தமிழர் அமையத்தின் உப அலுவலகத்தையும் திறந்து வைத்தனர். இந் நிகழ்வில் முன்னாள் குச்சவெளி கோட்டக்கல்விப்பணிப்பாளர் சீ. மதியழகன், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், அமையத்தின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

## 154 வது பொலிஸ் தினத்தை முன்னிட்டு விஷேட பூஜைகளும் மரக்கன்று நாட்டும் நிகழ்வும்




இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 154 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு மஸ்கெலியா சமன் தேவாலயத்தில் விஷேட பூஜைகள் இடம்பெற்றதோடு மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் 3 வியாழக்கிழமை ஹற்றன் பொலிஸ் வலயத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விதித்த ஹல்விஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையின் சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரி இனோக்கா ரத்நாயக்க, பொலிஸ்உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரசிக்க ரத்நாயக்க ஹட்டன் பொலிஸ் வலயத்தின் கீழ்இயங்கும் எட்டு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கருஜயசூரியவுக்கு ஐ.தே.கட்சியின் தலைமைத்துவம் வழங்கப்படவேண்டும்

### ஐக்கிய தேசியக் கட்சி பியகம பிரதான அமைப்பாளர் தனவர்தன குருகே

**மள்வானை விசேட நிருபர்**

ஐக்கிய தேசியக் கட்சி புதுப் பொழிவுடன் வெற்றிப் பாதையை நோக்கி செல்ல வேண்டுமானால் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவுக்கு காலதாமதமின்றி கட்சித் தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி பியகம பிரதான அமைப்பாளர் தனவர்தன குருகே தெரிவித்தார்.

கட்சியடைந்த படுதோல்வியிலிருந்து மீண்டும் வெற்றியடையவதற்கு இளைய தலைமைத்துவமொன்று நியமிக்கப்படவேண்டுமென கூறப்பட்டு வந்தபோதும் இச்சந்தர்ப்பத்தில் கட்சியை பாதுகாத்துக்கொள்ள அனுபவம் வாய்ந்த மிகவும் பொருத்தமான நபர் கரு ஜயசூரியவாகுமெனவும் இதுவே கட்சியின் பெரும்பாலானோரின் எதிர்பார்ப்புமெனவும் அவர் தெரிவித்தார்.பியகம கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில்.

நாம் கட்சியின் எதிர்காலம் குறித்து செயற்பட்டுவருகின்றோம். கட்சி தனிநபரொருவர் உரித்தானதல்ல. கட்சியின் தலைமைத்துவம் தீர்மானிக்கப்பட வேண்டியது வாக்களித்த இலட்சக்கணக்கான மக்களினதும் வாக்களிக்க செல்லாதிருந்த வெறுப்படைந்த இருபத்தியேழு இலட்சம் மக்களினதும் விருப்பத்துக்கேற்பவே தற்போது கட்சித் தலைமைத்துவத்துக்கு பலர் முன்வந்துள்ளனர்.

ஆனால் வேலை செய்ய முடியாத டாஸன் ஒருவருக்கு (வெட பெரி டாஸன்) தலைமைத்துவம் சென்றால் கட்சியின் நிலைமை மேலும் மோசமடையும்.

ருவன் விஜேவர்த்தன பியகம மக்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் களனிக்கு சென்றார். எனக்கு கிடைத்த தகவலின் படி இம்முறை தேர்தலில் ருவன் 1502 வாக்குகளே பெற்றிருக்கின்றார். நான் அவரை விட இரண்டு மடங்குக்கும் மேல் வாக்குகளை பெற்றுள்ளேன். கம்பஹா மாவட்டத்தில் நானே எமது கட்சியில் அதிக வாக்குகளை பெற்றவர்.

ஐக்கிய தேசிய கட்சி தொடர்பாக நன்கு அறிந்த எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மிகவும் பொருத்தமான கருஜயசூரிய தலைமைத்துவத்துக்கு நியமிக்கப்படவேண்டும். ஏனென்றால் பௌத்தபிக்குகள் அந்நிய மதத்தலைவர்கள் மக்கள் மத்தியில் அவர் பிரபல்யமானவர்.

கடந்த காலங்களில் பாராளுமன்ற சபாநாயகராக சுயாதீனமாக செயற்பட்டார்.கருவிடம் இன மத கட்சி கல பேதமில்லை.இவ்வாறான உன்னத தலைவர்கள் இருக்கும்போது மக்கள் செல்வாக்கு இழந்த ருவனை அதிகாரத்துக்கு கொண்டுவருமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள்ளது.ருவனுக்கு தலைமை பொறுப்பையேற்க இன்னும் காலம் உள்ளது.சஜித் பிரேமதாஸாவுக்கும் அதுவேதான். ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் சபாநாயகராக நீண்ட காலம் செயற்பட்டவருக்கு கட்சியின் அங்கத்துவமில்லை என்பது கோரிக்கையாகும்.

தலைமைத்துவம் தொடர்பாக வெறுமனே பேசிக்கொண்டிருந்தால் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கும் எமக்கு தலைமைத்துவம் இல்லாமல்போகும் என அவர் தெரிவித்தார்.

# ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவர் கைது

**( பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பல்லபெத்த கல்பாய வித்தியாலயத்தின் அருகில் வீடொன்றில் இருந்து ஹெரோயின் போதைப் பொருள்விற்பனையில்ஈடுபட்டிருந்த பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொடகவெல பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான எல். பி. ஆர். மஞ்சுள ஜயவர்தனவுக்கு பிரதேச மக்கள் கொடுத்த தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 14 ஹெரோயின் பெக்கட்டுகள்' கைப்பற்றியுள்ளனர்.

அன்றைய தினம் அந்த பெண்ணின் வீட்டை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸார் அந்தப் பெண் அணிந்திருந்த ஆடையினுள் மிகவும் சூட்சுமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த 14 ஹெரோயின் பக்கட்டுகளை கண்டுபிடித்துள்ளனர். சந்தேகநபரிடமிருந்து நான்கு கையடக்கத் தொலைபேசிகள், இரண்டு சிம்கார்டுகள் ,தனியார் மற்றும் அரச வங்கிகளில் கணக்குப் புத்தகங்கள் போன்றவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

பல்லேபத்த நகரத்தை அண்மித்து மட்டுமன்றி முத்தெட்டுபொல, கல்பாய, பிசோகொடுவ ஆகிய கிராமப்பகுதிகளில் வாழ்கின்ற விவசாயக் குடும்பங்களின் இளைஞர்களை இலக்கு வைத்து சந்தேகநபர் ஹெரோயின் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக பிரதேச மக்கள் பொலிஸாருக்கு தகவல்களை வழங்கியுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## மண்சரிவு அச்சுறுத்தல்: மஞ்சள் அறிவிப்பு

எஹலியகொடை பிரதேச செயலாளர் பிரிவில் மண்சரிவு ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இப்பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மண்சரிவு இடம் பெறலாமென எதிர்பார்க்கப்படும் சகல இடங்களிலும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அபாய எச்சரிக்கையை எஹலியகொடை பிரதேச செயலகம், பிரதேச கிராம சேவை அதிகாரிகள் மூலம் விடுத்துள்ளது. இப்பிரதேசத்தில் மண்சரிவு ஏற்படலாமென தேசிய கட்டடவியல் ஆய்வு மையத்தினால் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வசிக்கும் மக்களுக்கு மஞ்சள் அறிவிப்பு எனும் முதற்கட்ட அறிவிப்பு விடுக் கப்பட்டுள்ளது. எனவே இப்பிரதேச மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

மேலும் எஹலியகொடை முதல் தெஹியோவிற்ற வரையிலான வீதியிலிலுள்ள இரு பக்கங்களும் அடிக்கடி சிறிய பெரிய அளவிலான மண்சரிவுகள் ஏற்படும் இடங்களாக பொது மக்கள் பொது மக்கள் மத்தியிலும் அ டையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் எஹலியகொடையை அண்மித்த தெரணியகலை யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிகளிலும் மண்சரிவு ஏற்படலாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இ.போ.ச பஸ் சேவை முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை; மக்கள் குற்றச்சாட்டு

**மஸ்கெலியா நிருபர்**

சாமிமலை மஸ்கெலியா வழியாக செல்லும் அரசபேருந்து சேவை முறையாக இடம்பெறுவதில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரச மற்றும் தனியார் ஊழியர்கள்,பாடசாலை மாணவர்கள் புகார் தெரிவிக்கின்றனர். மேலும் காலை வேலையில் சாமிமலை நகரில் இருந்து காலை 6 மணி, 6.45 ற்கும் இடையில் 2 அரச பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வந்தன. அவை தற்சமயம் இடம்பெறாமையால் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் பருவகால சீட்டினை முன்கூட்டியே பணம் செலுத்தி பெற்றபோதும் தனியார் பேருந்துகளில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தனியார் பேருந்தில் சென்றாலும் அதிகளவு பணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த நேரத்தில் பாடசாலைக்கோ, அரச காரியாலயங்களுக்கோ செல்ல முடியவில்லை என குற்றம் சுமத்துகின்றனர். இவ்விடயமாக ஹற்றன் அரச பேருந்து நிலைய அதிகாரியிடம் தொலைபேசியில் கேட்டபோது அங்கு சாரதிகள் 30 பேர் நடத்துனர்கள் 30 பேர் இல்லாததால் இச் சேவைக்கு முறையான ஆளணிபற்றாக்குறை நிலவி வருவதாகவும் தெரிவிக்கின்றனர். .

எதுஎப்படியாயினும் பருவகாலசீட்டுகள் வழங்க முன்னர் இதுவிடயமாக சிந்தித்து இருக்க வேண்டும் பயணிகள் கோரிக்கை தெரிவிக்கின்றனர்.

# Observer JOBS

We change your world

Tel: (011) 242 9361/ 242 9362/ 242 9365 Mobile : (077) 727 0012 Fax : (011) 242 9360

## The following employment vacancies were published in the Sunday Observer on 30th August 2020.

### Accounting / Auditing / Finance

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Accountant |
| Company Name Withheld | Accountant |
| Company Name Withheld | Accountant / Account Assistant - For a Leading Japanese Subsidiary Company |
| Deerga Engineering (Pvt) Ltd | Accounts Assistant |
| Hovael Construction (Pvt) Ltd | Accounts Assistant |
| Company Name Withheld | Accounts Assistant |
| Pasalka Buillders & Decorators (Pvt) Ltd | Accounts Assistant |
| Company Name Withheld | Accounts Assistant cum Administrative Assistant |
| Akra Bakers (Pvt) Ltd | Accounts Clerk cum Data Entry |
| Selyas Holdings (Pvt) Ltd | Accounts Executive |
| Company Name Withheld | Assistant Accountant |
| Mikro Industries (Pvt) Ltd | Assistant Accountant |
| Classic Venture (Pvt) Ltd | Assistant Executive Finance |
| S & D Chemicals (Pvt) Ltd | Debt & Credit Controller |
| American Embassy | Voucher Examiner |

### Advertising / Media / Communication

| COMPANY | DESIGNATION |
|---|---|
| The Associated Newspapers of - Ceylon Limited | DTP Operators (Sinhala/Tamil/English) |

### Agriculture / Dairy / Environment

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Farm Manager / Senior Agriculturalist |
| Tea Smallholder Factories PLC | Tea Factory Superintendent |

### Airline/Marine/Ticketing

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Airport and Aviation Services - (Sri Lanka) Limited | Assistant Operations Manager |
| Airport and Aviation Services - (Sri Lanka) Limited | Head of Electronics & Air Navigation Engineering |
| Company Name Withheld | Visa Consultant |

### Apparel / Clothing / Merchandising

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Hayleys Group | Manager - Printing |

### Construction/Architect/Quantity Surveying

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Hovael Construction Pvt Ltd | Auto Cad Draughtsman |
| International Construction - Consortium (Pvt )Ltd | Condominium Manager |
| Company Name Withheld | Project Manager |
| Gajashakthi Security Service (Pvt) Ltd | Project Manager MEP ( Mechanical / Electrical / Plumbing ) |
| Hovael Construction Pvt Ltd | Quanity Surveyors/ Surveyors |
| Company Name Withheld | Quantity Surveyor |
| Hovael Construction Pvt Ltd | Senior Project Manager/ Project Manager |
| Kolon Global Corporation | Sub - Contractor For House (Service ) Connection / Sub - Contractor For Small Structure |

### Drivers /Security / House Keeping & Other

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Caretaker / Cook - For a Holiday House |
| Parliament of Sri Lanka | Housekeeping Assistant |
| Sri Lanka Cricket | MEP Skilled Labourer |
| Indo East Engineering & - Construction (Lanka) Pvt Ltd | Safety Officer - Male |

### Engineering (Mech/Civil/Elect/Auto)

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Sri Lanka Cricket | Assistant Civil Engineer |
| Sri Lanka Cricket | Assistant Maintenance Engineer |
| Ante Leco Metering Company (Pvt) Ltd | Design Engineer |
| The Associated Newspapers of - Ceylon Limited | Electrical Engineer |
| Company Name Withheld | Engineers/Assistant Engineers |
| Management Systems (Pvt) Ltd | Factory Engineer |
| Levlin Holdings (Pvt) Ltd | Material Testing Laboratory Assisnt Engineers |
| Union Chemicals Lanka PLC | Plant Manager |
| Pasalka Buillders & Decorators (Pvt) Ltd | Site Engineer |
| Hovael Construction (Pvt) Ltd | Site Engineers |
| Company Name Withheld | Technical Support Engineer |
| University Of Colombo School Of Computing | Works Engineer |

### Government and Public Administration

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Parliament of Sri Lanka | Parliamentary Interpreter |
| Ministry of Urban Development and - Housing | Project Director |

### Healthcare/Nursing

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | JNR Executive Microbiology |
| Royal Hospital (Pvt) Ltd | Senior Nurses ( Female ) / Nursing Assistants ( Female ) |

### Hospitality & Tourism/Hotel

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Cook - For a Holiday House |
| Company Name Withheld | Lady Chef |
| Great Wall Restaurants (Pvt) Ltd | Restaurant & Bar Manager |

### HR & Admin/Training/Legal

| COMPANY | DESIGNATION |
|---|---|
| National Dangerous Drugs Control Board | Administrative Officer |
| Gajashakthi Security Service (Pvt) Ltd | Administrative Executive |
| Safeway Solar | Administrative Officer |
| Hovael Construction Pvt Ltd | Administrative Officer/ Transport Officer |
| Airport and Aviation Services - (Sri Lanka) Limited | Company Secretary |
| National Dangerous Drugs Control Board | Management Assistant |
| National Dangerous Drugs Control Board | Manager - (Human Resources) |
| Kusang Lanka (Pvt) Ltd | Office Executive |

### IT - Computer Operators/Graphics

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Hovael Construction (Pvt) Ltd | Data Entry Operators |
| The Associated Newspapers of - Ceylon Limited | DTP Operators |

### IT - Software/Network/Systems/Telecom

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Company Name Withheld | Technical Support Engineer |
| University Of Colombo School Of Computing | Information Systems Manager |
| Musaeus College | Lab Assistant -IT Labs |
| Sri Lanka Cricket | Manager IT |

### Logistics/Warehouse/Transport

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Toyotsu Lanka (Pvt) Ltd | Spare Parts |
| Hovael Construction (Pvt) Ltd | Store Keeper |
| Pasalka Buillders & Decorators (Pvt) Ltd | Store Keeper |
| Company Name Withheld | Store Keeper / Store Assistant / Product Sourcing Specialist - For a Leading Japanese Subsidiary Company |

### Marketing & Sales/Branding

| COMPANY | DESIGNATION |
|---|---|
| C.W.Mackie PLC | Area Sales Managers |
| Safeway Solar | Corporate Business Development Officer |
| Toyotsu Lanka (Pvt) Ltd | Corporate/General Affairs |
| Mint Kandy Distribution (Pvt) Ltd | Distribution Manager |
| Royal Ceramics Lanka PLC | Head Of Project Sales / Dealer Sales Manager |
| Company Name Withheld | Incharge Online Business Operation / Marketing Specialist / Delivery Staff - For a Leading Japanese Subsidiary Company |
| Pure Tech Solutions | Marketing Executive |
| Company Name Withheld | Marketing Managers / Executives - For a Switch Gear ( Panel Board ) Manufacturing Company |
| Royal Ceramics Lanka PLC | Product Manager |
| Wijaya Products ( Pvt ) Ltd | Sales Co-ordinatar - Male |
| Pure Tech Solutions | Sales Coordinator -Female |
| Levlin Holdings (Pvt) Ltd | Sales Engineers - Male |
| Safeway Solar | Sales Executive |
| Raddella Jewellers | Sales Executive/ Training Sales Executive |
| INGCO Power Tools & Hand Tools - ( KDI International ) | Sales Representatives |

### NGO and Non Profit Organizations

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Australian High Commission In Colombo | Senior Advisor |

### QA/QC/Supervisory/Technical

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Toyotsu Lanka (Pvt) Ltd | General Service |
| MN Homes Developer(Pvt) Ltd | Site Supervisor |
| Hovael Construction (Pvt) Ltd | Technical Officer / Supervisor (Civil) |
| Pasalka Buillders & Decorators (Pvt) Ltd | Technical Officer/Site Supervisor |
| Pure Tech Solutions | Technicians |
| Company Name Withheld | Warehouse Supervisor |

### Secretarial/Receptionist/Clerical

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Commercial Bank Of Ceylon PLC | Assistant Company Secretary |
| INGCO Power Tools & Hand Tools - ( KDI International ) | Female Secretary |
| Company Name Withheld | Receptionist |
| Royal Hospital (Pvt) Ltd | Receptionist / Front Office / Call Center Operator |

### Teaching/Academic/Research/Library

| COMPANY | DESIGNATION |
|---|---|
| Royal International School | Additional Senior Principals |
| University Of Colombo School Of Computing | Assistant Librarian |
| Musaeus College | Assistant Teacher - Mathematics |
| Musaeus College | Counsellor |
| SLIIT | Culinary / Cookery Lecturers - For William Angliss Institute |
| Company Name Withheld | English Teachers |
| Royal International School | Non-Academic |
| Trinity College | Senior Boarding House Master |
| University Of Colombo School Of Computing | Senior Lecturer Gr.1,11/Lecturer |
| University of Sri Jayawardenapura | Senior Professor/Professor/ Senior Lecturer/Lecturer |
| Readway International College | Teachers |
| Royal International School Sections | Teachers for Primary and Junior |
| Company Name Withheld | Tuition Female Teachers |

## Find

GOVERNMENT GAZETTE

For more details about the above vacancies, please refer SUNDAY OBSERVER newspaper on 30th August 2020

To apply visit www.observerjobs.lk

LAKE HOUSE Sunday Observer Observer JOBS

## கொரோனா நெருக்கடியால்

# இந்தியப் பொருளாதார வளர்ச்சி 23.9% பின்னடைவு

கொரோனா நோய்த்தொற்று காரணமாக அடுத்தடுத்து பிறப்பிக்கப்பட்ட பொது முடக்க அறிவிப்புகளால் இந்தியப் பொருளாதாரம் ஏப்ரல்ஜூன் காலாண்டில் இதுவரை இல்லாத வகையில் 23.9 சதவீத பின்னடைவை சந்தித்துள்ளது.

இது குறித்து மத்திய அரசு திங்கள் கிழமை வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா தொடர்பான பொது முடக்க அறிவிப்புகளால் இந்தியப் பொருளாதாரம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது.

ஏற்கெனவே, நுகா்வோா் தேவை மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் பெருமளவில் குறைந்து போயுள்ளன. இதனை எடுத்துக்காட்டும் வகையில், நடப்பு 202021ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான முதல் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 23.9 சதவீதம் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

உலகின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதார சக்தியாக திகழும் இந்தியாவின் ஜிடிபி முந்தைய ஜனவரிமார்ச் காலாண்டில் 3.1 சதவீதமாகவும், கடந்த நிதியாண்டு ஏப்ரல் -ஜூன் காலகட்டத்தில் 5.2 சதவீதமாகவும் வளா்ச்சி கண்டிருந்தது என மத்திய அரசு புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

ஜிடிபி வளர்ச்சி தொடர்பான கண க்கீடு கடந்த 1996ஆம் ஆண்டு வெளியானதிலிருந்து அதன் வளர்ச்சி தற்போதுதான் இந்த அளவுக்கு முதல்முறையாக கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது.


பல ஆய்வாளர்கள் கணித்ததைக் காட்டிலும் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மோசமான நிலைக்கு சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கொரோனாவால் அதிகம் பாதிப்படைந்த ரஷ்யாவில் பொருளாதார வளர்ச்சியானது ஏப்ரல்-ஜூன் காலகட்டத்தில் 8.5 சதவீத பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இது, எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் குறைவான பின்னடைவாகவே கருதப்படுகிறது. அதேசமயம், கொரோனா தொற்று முதலில் ஆரம்பமான சீனாவின் பொருளாதாரம் இக்காலாண்டில் 3.2 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

# இந்தியாவில் கொரோனா தொற்றின் வேகம் அதிகரிக்க காரணம் என்ன?

## நிபுணர்கள் விளக்கம்



இந்தியாவில் ஒரே வாரத்தில் 5 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், நாட்டில் தொற்றின் வேகம் அதிகரிப்பதற்கான காரணங்களை நிபுணர்கள் விளக்கி உள்ளனர்.

கொரோனா தொற்றின் வேகம் இந்தியாவில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இங்கு கடந்த 4 நாட்களாக தொடர்ந்து 70 ஆயிரத்துக்கு அதிகமான புதிய நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த 1 வாரத்தில் மட்டும் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் கொரோனாவிடம் சிக்கி உள்ளனர்.

அதிக மக்கள் தொகையை கொண்டுள்ள நாடான இந்தியாவில் இத்தகைய தொற்று வேகம் மக்களை கவலையடையச் செய்துள்ளது. எனவே இந்த தொற்றை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்க அரசுகள் தீவிரம் காட்டி வருகின்றன. இதற்காக பரிசோதனைகளை தீவிரப்படுத்துதல், நோயாளிகளை கண்டறிதல் மற்றும் தீவிர சிகிச்சை அளித்தல் என்ற தாரக மந்திரங்களை அரசுகள் பின்பற்றி வருகின்றன.

இந்தியாவில் இவ்வாறு கொரோனாவின் வேகம் அதிகரிப்பதற்கான காரணம் குறித்து நிபுணர்கள் ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர். அதில் கண்டறிந்த விஷயங்களை அவர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

இது குறித்து இந்திய மருத்துவ ஆய்வு கவுன்சிலின் தொற்று நோய்கள் பிரிவு தலைவர் டாக்டர் சமிரன் பண்டா கூறுகையில், ‘கொரோனா பரிசோதனையின் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், அதிக எண்ணிக்கையிலான புதிய நோயாளிகள் கண்டறியப்படுகின்றனர். அத்துடன் ஊரடங்கு தளர்வுகள் மற்றும் கொரோனாவுக்கு எதிராக மக்களிடம் நிலவும் மெத்தனப் போக்கு போன்றவையும் தொற்றின் வேகம் அதிகரிப்பதற்கான காரணங்கள் ஆகும்’ என்று தெரிவித்தார்.


அறிகுறி இல்லாதவர்கள் மற்றும் லேசான அறிகுறிகள் கொண்டவர்களால் இந்த நோய் அதிகமாக பரவுவதாக தெரிவித்த பண்டா, எனவே இத்தகைய பரவல் முறையை தடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் இந்தியாவில் கொரோனாவின் இந்த வேகம் எதிர்பார்த்ததுதான் எனவும், எனினும் மாநிலங்களில் ஒரே சீராக இல்லாதது ஆறுதலானது என்றும் தெரிவித்தார்.

முன்னணி வைராலஜிஸ்டான டாக்டர் சாகித் ஜமீல் கூறும்போது, ‘முக கவசம் அணிதல், கைகளை கழுவுவது மற்றும் சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் போன்ற அறிவுரைகளை மக்கள் புறக்கணித்துள்ளனர். இதற்கு காரணம், நாட்டில் தொற்றில் இருந்து மீள்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு, குறைவான சாவு விகிதம் போன்ற அறிவிப்புகளால் ஏற்பட்டுள்ள மெத்தனமே ஆகும். ஆனால் நாம் அதிக தினசரி பாதிப்பை கொண்டுள்ளோம். உலக அளவில் 3வது அதிக நோயாளிகளை பெற்றிருக்கிறோம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்’ என்று எச்சரித்தார்.

இந்திய மருத்துவ சங்க முன்னாள் தலைவரும், ஆசியாஓசியானியா மருத்துவ சங்க கூட்டமைப்பு தலைவருமான டாக்டர் அகர்வால் கூறுகையில், ‘இப்படியே போனால் இந்தியா கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையில் பிரேசில் மற்றும் அமெரிக்காவையும் மிஞ்சிவிடும். இது 6 வாரங்களிலேயே நடக்கலாம். தற்போதைய சூழலில் பரிசோதனைகளை அதிகரிப்பதை தவிர அரசுக்கு வேறு வழியில்லை. ஆனால் தனி மனிதர்கள் மட்டத்தில் எச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது’ என்று கூறினார்.

ஊடரங்கு தளர்வுகள் புதிய நோயாளிகளை உருவாக்கும் எனக்கூறிய அவர், தற்போதைய நிலையில் பலி எண்ணிக்கையை குறைப்பதே முக்கியமானது எனவும், இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

# நவம்பரில் ரஜினி கட்சி; மதுரையில் மாநாடு



நடிகர் ரஜினி வரும் நவம்பர் மாதம் அரசியல் கட்சி தொடங்குவது உறுதி எனவும் மதுரையில் மாநாடு நடத்தவுள்ளதாகவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த கால் நூற்றாண்டிற்கும் மேலாக நடிகர் ரஜினி அரசியலுக்கு வருவது பற்றி தமிழகத்தில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. 'இப்போது இல்லை என்றால் இனி எப்போதும் இல்லை' என, அவரது ரசிகர் பெருமக்கள் போஸ்டர்கள் ஒட்டி ரஜினிகாந்தின் அரசியல் பிரவேசத்துக்கு அழைப்பு விடுத்த வண்ணம் உள்ளனர்.

சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில் ரஜினியின் ஒவ்வொரு நடவடிக்கையும் அரசியல் வட்டாரத்தில் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மார்ச் 12ம் திகதி சென்னை லீலா பேலஸ் நட்சத்திர விடுதியில் செய்தியாளர்களை சந்தித்த ரஜினிகாந்த், ''மாற்றம் வேண்டி மக்களிடம் எழுச்சியும், அலையும் வரட்டும் அரசியலுக்கு வருகிறேன்,'' எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில், 'ரஜினிகாந்த் நவம்பர் மாதம் கட்சி தொடங்குகிறார். அரசியல் கட்சி தொடங்குவதில் இருந்து நடிகர் ரஜினிகாந்த் ஒரு போதும் பின்வாங்கமாட்டார். கொரோனா இல்லாமல் இருந்திருந்தால் ரஜினி தொடங்கும் கட்சியின் முதல் மாநாடு மதுரையில் நடைபெற்றிருக்கும். அதற்கான முடிவை அவர் ஏற்கனவே எடுத்திருந்தார். அதனால், கட்சி துவங்கியதும் முதல் மாநாடு மதுரையில் நடக்க வாய்ப்புள்ளது' என, நடிகர் ரஜினிகாந்துக்கு மிக மிக நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சென்னையில் 17.50 லட்சம் பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட வாய்ப்பு: ஆய்வில் தகவல்

சென்னையில் வசிக்கும் 17.50 லட்சம் மக்களுக்கு கொரோனா தொற்று ஏற்படவும், மொத்த மக்கள்தொகையில் 80 சதவீதம் பேர் எளிதில் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட 15 மண்டலங்களில் கரோனா பாதிப்பு குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ஐசிஎம்ஆர்) வழிகாட்டுதல்படி, மக்களிடம் நோய் எதிர்ப்பு சக்தியைக் கண்டறியும் ஆய்வு நடத்தப்பட்டது. தேசிய தொற்று நோயியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இணைந்து ஜூலை 18 முதல் 28ஆம் திகதி வரை இந்த ஆய்வை மேற்கொண்டன.

15 மண்டலங்களுக்கு உள்பட்ட 200 வார்டுகளில் 51 வார்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 7,217 வீடுகளில் வசிக்கும் 10 வயது முதல் 60 வரை உள்ள 12,405 பேரிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த 12,405 பேரிடம் பரிசோதனை செய்யப்பட்டதில், 2,673 பேருக்கு கொரோனா நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உருவாகி உள்ளது தெரியவந்துள்ளது. இது பரிசோதனை செய்ய மொத்த எண்ணிக்கையில் 21.5 சதவீதம் ஆகும். இதன் மூலம் சென்னையில் 5இல் ஒருவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது. அதிகபட்சமாக தண்டையார்பேட்டை மண்டலத்தில் 44.2 சதவீதம் பேரும், ராயபுரத்தில் 34.4 சதவீதம் பேரும், தேனாம்பேட்டையில் 29.4 சதவீதம் பேரும், குறைந்தபட்சமாக பெருங்குடியில் 7.3 சதவீதம் பேரும், மாதவரத்தில் 7.1 சதவீதம் பேருக்கும் கொரோனா நோய் எதிர்ப்பு சக்தி இருப்பது தெரியவந்துள்ளது. பரிசோதனை செய்யப்பட்டவர்களில் 1,115 ஆண்களுக்கும், 1,538 பெண்களுக்கும், மூன்றாம் பாலினத்தவர்கள் 5 பேருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

17.50 இலட்சம் பேருக்கு தொற்றுக்கு வாய்ப்பு: இந்த ஆய்வில் சென்னை மாநகராட்சிக்கு உற்பட்ட பகுதிகளில் கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 17.50 லட்சம் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில், அதிகபட்சமாக தண்டையார்பேட்டை மண்டலத்தில் 2.99 இலட்சம் பேரும், தேனாம்பேட்டை மண்டலத்தில் 2.66 இலட்சம் பேரும், ராயபுரத்தில் 2.56 இலட்சம் பேரும், அண்ணா நகரில் 1.82 இலட்சம் பேரும், திரு.வி.க.நகரில் 1.71 இலட்சம் பேரும், கோடம்பாக்கத்தில் 1.30 இலட்சம் பேரும், குறைந்தபட்சமாக மணலியில் 24 ஆயிரம் பேரும் என மொத்தம் 17.50 இலட்சம் பேருக்கு கொரோனா ஏற்பட வாய்ப்புள்ளது.

# 3 வயது சிறுமி பாலியல் கொடுமை செய்யப்பட்டு கொலை

உத்தரப் பிரதேச மாநிலத்தில் 3 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் லக்கிம்பூர் மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் குடும்பம் ஒன்று வசித்து வருகிறது. இந்த குடும்பத்தை சேர்ந்த 3 வயது சிறுமி கடந்த புதன் கிழமை முதல் காணாமல் போனதாக கூறப்படுகிறது. இதனை அடுத்து சிறுமியை தேடி வந்த பெற்றோர்கள் சிறுமி கிடைக்காததால் காவல்துறைக்கு தகவல் அளித்துள்ளனர். பின்னர் அங்கு வந்த காவல்துறையினர் நடத்திய தேடுதல் வேட்டையில், கிராமத்திற்கு 500 மீட்டர் தொலைவில் உள்ள ஒரு காட்டுப்பகுதியில் சிறுமி உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து சிறுமியின் உடலை காவல்துறையினர் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அதில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. இதனை தொடர்ந்து வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர் அதே கிராமத்தில் வசிக்கும் லெக்ராம் என்ற நபர் காரணமாக இருக்கலாம் எனக் கூறி அவரை தேடி வருகின்றனர்.

# நடிகை ராகினி திவேதி கைது

பெங்களூரில் தமிழ் நடிகை ராகினி திவேதியை பொலிசார் போதைப் பொருள் விவகாரத்தில் கைது செய்தனர்.

பெங்களூரில் போதைப்பொருட்கள் விற்பனை விவகாரத்தில் சின்னத்திரை நடிகை அனிகா உட்பட 3 பேரை போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கன்னட திரை உலகில் போதைப்பொருட்கள் பயன்படுத்தும் பழக்கம் இருப்பதாக 3 பேரும் கூறியதாக தெரிகிறது. இதையடுத்து, கன்னட திரை உலகில் போதைப்பொருள் பயன்படுத்தும் விவகாரம் குறித்து மத்திய குற்றப்பிரிவு பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்த விவகாரத்தில் கன்னட திரை உலகில் பிரபல நடிகையாக இருந்து வரும் ராகிணி திவேதியிடம் விசாரணை நடத்த பெங்களூர் சாம்ராஜ்பேட்டையில் உள்ள மத்திய குற்றப்பிரிவுபொலிஸ் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு இருந்தது.

ஆனால் அவர் பொலிஸ் விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவர் விசாரணைக்கு பயந்து தலைமறைவாகி விட்டதாக தகவல்கள் வெளியானது. இதற்கிடையே நடிகை ராகிணி திவேதி சார்பில், அவரது வக்கீல் பொலிசாரை சந்தித்து பேசி விசாரணைக்கு அவர் ஆஜராக முடியாத காரணம் குறித்து விளக்கம் அளித்தார். அதாவது சொந்த பிரச்சினை, உடல் நலக்குறைவு காரணமாக வருகிற 7ந் திகதி நடிகை ராகிணி திவேதி விசாரணைக்கு ஆஜராக காலஅவகாசம் வழங்கும்படிபொலிசாரிடம் வக்கீல் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் போதைப்பொருள் விவகாரம் தொடர்பாக கன்னட நடிகை ராகினி திவேதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# எல்லையில் பதற்றம்; தயார் நிலையில் இராணுவம்

இந்திய சீன சர்வதேச எல்லைப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவுவதாகவும், ராணுவம் தயார் நிலையில் இருப்பதாகவும் ராணுவ தலைமைத் தளபதி எம்.எம். நரவணே தெரிவித்துள்ளார்.

கிழக்கு லடாக்கில் பாதுகாப்புச் சூழலை ஆய்வு செய்வதற்காக, ராணுவத் தலைமைத் தளபதி எம்.எம்.நரவணே இரண்டு நாள் பயணமாக வியாழக்கிழமை லடாக் சென்றாா். அங்கு அவர் பாதுகாப்பு நிலைகளை நேரில் ஆய்வு செய்தார்.

எல்லை நிலவரங்கள் குறித்து வெள்ளிக்கிழமை காலை நரவணே கூறுகையில், இந்தியா - சீனா சர்வதேச எல்லைக் கோட்டுப் பகுதியில் தற்போது நிலைமை பதற்றமாக உள்ளது, நிலைமையை எதிர்கொள்ளதேவையானமுன்னெச்சரிக்கைநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நேற்று லேஷ் பகுதிக்கு வந்தேன். பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, அதிகாரிகள் மற்றும் வீரர்களுடன் பேசினேன். பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆய்வு செய்தேன். எந்த விதமான சவாலையும் எதிர்கொள்ளவும் இந்திய வீரர்கள் மிகுந்த தைரியத்துடன் இருக்கிறார்கள், உலகிலேயே நமது வீரர்கள் தான் சிறந்தவர்கள் என்பதை என்னால் இங்கே சொல்ல முடியும் என்று நரவணே தெரிவித்துள்ளார்.



சீன மீண்டும் லேலடாக் பகுதியில் வாலாட்டுவதை அடுத்து நமது ராணுவத்தின் நவீன ஹெலிகாப்டர் ரோந்து பணியினை மேற்கொண்டுள்ளது.

தற்போது எல்லையில் காணப்படும் சூழ்நிலை சற்று கவனிக்கத்தக்கதாக, பதற்றமாகவே இருக்கிறது.

ஆனால் அது பற்றி நாம் கவனத்தில் கொண்டுள்ளோம்.

நமது பாதுகாப்பை பொறுத்தமட்டில் தேவையான சில நடவடிக்கைகளை எடுத்துள்ளோம், தற்போதிருக்கும் நிலைமையில் மாற்றமில்லாமல் நீடிக்க உறுதி மேற்கொண்டுள்ளோம் என்றும் கூறியுள்ளார்.

## உள்நாட்டு விமானங்களை

# 60 சதவீதம் இயக்க மத்திய அரசு அனுமதி

மார்ச் 24 அன்று ஊரடங்கு அறிவிக்கப்பட்ட பின்னர், அனைத்து விமானங்களும் தடை செய்யப்பட்டன. இதன் பின்னர், மே 25 அன்று மீண்டும் விமானங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது, இந்த நாளில் 30,550 பேர் உள்நாட்டு விமானங்களில் பயணம் செய்தனர். மே மாதத்தில், விமானப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு நாளில் வெறும் 40,000 ஆக இருந்தது, இப்போது அது 1 லட்சத்தைத் தாண்டியுள்ளது. இதன் காரணமாக தினசரி விமானங்களின் எண்ணிக்கையும் மே மாதத்தில் 500 ல் இருந்து இப்போது 1100 ஆக உயர்ந்துள்ளது.

உள்நாட்டு விமானங்களின் திறனில் 60 சதவீதம் பயன்படுத்த முடியும் என்று விமான அமைச்சகம் விமான நிறுவனங்களுக்கு தெரிவித்துள்ளது. கொரோனா நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இதுவரை விமான நிறுவனம் அதன் முழு திறனில் 45 சதவீத விமானங்களை மட்டுமே அனுமதித்தது.

ஒருபுறம், அன்லாக் 4 இன் கீழ் எடுக்கப்பட்ட விமான அமைச்சகத்தின் இந்த முடிவில் விமான நிறுவனங்கள் மகிழ்ச்சியடைவார்கள், ஏனெனில் அவர்கள் புதிய விமான பயணிகளைப் பெறுவார்கள், இது அவர்களின் வணிகத்தை அதிகரிக்கும். மறுபுறம், பயணிகளும் இந்த முடிவிலிருந்து பயனடைவார்கள்,

தற்போதைய நிலைமை மற்றும் உள்நாட்டு விமான பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு விமான அமைச்சகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

## சிங்கம் படபாணியில் பணியில் சேரும்பொழுதே

# ரவுடிகள் பயப்பட வேண்டும் என பொலிசார் நினைக்கின்றனர்; –பிரதமர் மோடி பேச்சு

சிங்கம் படம் போன்று பணியில் சேரும்பொழுதே ஏரியா ரவுடிகள் அனைவரும் பயப்பட வேண்டும் என பொலிசார் நினைக்கின்றனர் என்று பிரதமர் மோடி பேசியுள்ளார்.

தெலுங்கானாவின் ஐதராபாத் நகரில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய போலீஸ் அகாடமியில் இளம் ஐ.பி.எஸ். பயிற்சி அதிகாரிகளிடம் காணொலி காட்சி வழியே பிரதமர் மோடி இன்று உரையாடினார்.

இதன்பின் அவர்கள் முன் பிரதமர் மோடி பேசும்பொழுது, உங்களது காக்கி சீருடையின் அதிகாரத்தினை எப்படி பயன்படுத்துவது என்பதற்கு பதிலாக அதனை அணிந்து கொள்வதில் நீங்கள் பெருமை கொள்ள வேண்டும் என்பது மிக முக்கியம்.

உங்களுடைய காக்கி சீருடைக்கான மரியாதையை ஒருபொழுதும் இழக்காதீர்கள் என கூறினார்.

பொலிஸ் அதிகாரிகள் பணியில் சேரும்பொழுது, ஒவ்வொருவதும் நம்மை கண்டு பயப்பட வேண்டும். குறிப்பிடும்படியாக நமது ஏரியா ரவுடிகள் அனைவரும் பயப்பட வேண்டும் என நினைக்கின்றனர் என்று கூறினார்.

சிங்கம் போன்ற படங்களை பார்த்துவிட்டு, தங்களை பற்றி அவர்கள் பெரிய அளவில் நினைத்து கொள்கின்றனர். அதனால் உண்மையான பணி புறக்கணிக்கப்படுகிறது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும். நமது பணி புறக்கணிக்கப்படவில்லை என்பதனை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என கூறினார்.

கொரோனா பாதிப்பு போன்ற காலத்தில் நல்ல முறையில் பணியாற்றி, காக்கி சீருடையில் இருந்த போலீசாரின் முகம் பொதுமக்களின் மனதில் நன்றாக பதிந்துள்ளது என்றும் அவர்களை பாராட்டி பேசினார்.



மத்திய பிரதேசம் போபாலில் பெய்துவரும் கனமழையால் பாதிக்கப்பட்டவர்கள் கிடைத்த பொருட்களுடன் பாதுகாப்பான இடத்திற்கு செல்கின்றனர்.

தினகரன்

விளையாட்டு

2020 செப்டெம்பர் 5 சனிக்கிழமை

sports.tkn@lakehouse.lk

# பங்களாதேஷ் தொடருக்காக பயிற்சிகளை ஆரம்பிக்கும் இலங்கை அணி



இலங்கை கிரிக்கெட் அணியின் டெஸ்ட் வீரர்கள் பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடருக்காக அடுத்த வாரம் முதல் தமது பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இம்மாத இறுதியில் இலங்கை வரும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, ஒக்டோபர் மாதம் தொடக்கம் நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன் ஷிப்பிற்காக இலங்கை வீரர்களுடன் விளையாடவுள்ளது. இந்நிலையில், குறித்த டெஸ்ட் தொடருக்கு தயாராகும் வகையிலேயே இலங்கை கிரிக்கெட் அணியின் டெஸ்ட் வீரர்கள் தங்களது பயிற்சிகளை ஆரம்பிக்கவிருக்கின்றது.

இலங்கை அணியின் பயிற்சிகள் அடுத்த புதன்கிழமை (9) தொடக்கம் ஆரம்பமாகவிருக்கின்றன.

இலங்கை – பங்களாதேஷ் ஆகிய அணிகள் அடுத்த மாதம் விளையாடவிருக்கும் இந்த டெஸ்ட் தொடர் ஜூலை மாதம் நடைபெறவிருந்து கொவிட்19 வைரஸ் காரணமாக முன்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவரும் பங்களாதேஷ் அணி இலங்கை வந்து 14 நாட்கள் கொண்ட சுயதனிமைப்படுத்தல் முகாமில் பங்கெடுத்த பின் தமது பயிற்சிகளை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷ் அணிக்கு அவர்கள் இலங்கையுடன் விளையாடவுள்ள டெஸ்ட் தொடர் கடந்த ஆறு வருடங்களில் விளையாடுகின்ற முதலாவது மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடராக அமையவிருக்கின்றது. இன்னும், இலங்கை – பங்களாதேஷ் ஆகிய இரண்டு அணிகளும் கொவிட்19 வைரஸ் தொற்று ஏற்பட்ட பின்னர் விளையாடும் முதல் சர்வதேச தொடராகவும் ஒக்டோபர்மாதம் தொடக்கம் நடைபெறவுள்ள இந்த டெஸ்ட் தொடர் அமையவுள்ளது.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டிகளுக்காக இலங்கை கிரிக்கெட் கழக அணிகள் இடையில் நடாத்திய மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் திறமை காட்டிய வீரர்களுடன் சேர்த்து, 23 பேர் அடங்கிய இலங்கையின் டெஸ்ட் குழாத்தினை தெரிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி கழக அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரில் திறமை காட்டிய இளம் துடுப்பாட்டவீரர் லஹிரு உதார மற்றும் இளம் சுழல் பந்துவீச்சாளர் துவிந்து திலகரட்ன ஆகியோர் இலங்கை டெஸ்ட் அணியில் முதல் முறையாக வாய்ப்பினைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த வீரர்களில் லஹிரு உதார நடைபெற்று முடிந்த கழக அணிகள் இடையிலான கிரிக்கெட் தொடரில் 86.58 என்கிற சராசரியுடன் 1,039 ஓட்டங்களை குவித்திருந்ததோடு, துவிந்து திலகரட்ன 20 இற்கு குறைவான பந்துவீச்சு சராசரியுடன் 61 விக்கெட்டுக்களை சாய்த்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தவிர இலங்கை கனிஷ்ட கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரான சந்துஷ் குணத்திலக்க, இளம் சகலதுறைவீரர் கமிந்து மெண்டிஸ் மற்றும் வேகப் பந்துவீச்சாளர் அசித்த பெர்னாந்து ஆகியோரும் பங்களாதேஷுக்கு எதிராக பயிற்சி பெறவிருக்கும் இலங்கையின் டெஸ்ட் அணியில் இணைந்திருப்பதாக கூறப்படுகின்றது.

மறுமுனையில் சிறிய உபாதை ஒன்றினை எதிர்கொண்ட இலங்கை டெஸ்ட் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, குசல் ஜனித் பெரேரா ஆகியோரும் பயிற்சிகளுக்காக இலங்கை டெஸ்ட் அணியில் இணைவார்கள் என நம்பப்படுகின்றது.

பயிற்சிகளுக்கான இலங்கையின் டெஸ்ட் அணியில் சிரேஷ்ட வீரர்களான தினேஷ் சந்திமால், அஞ்செலோ மெதிவ்ஸ், தனஞ்சய டி சில்வா மற்றும் டில்ருவான் பெரேரா போன்றவர்களும் அடங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

SINCE 1978 42nd OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020

Recognizing talent, inspiring greatness.

Sri Lanka Telecom Mobitel

உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ...............................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ...............................

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ...............................

வாக்களித்தவர் பெயர் : ...............................

முகவரி : ...............................

மொபைல் இல. : ...............................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500

3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000


42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-09-05 இல. 26




# டெஸ்ட் போட்டிக்கு ஒரே மாதிரி பந்தை பயன்படுத்த வேண்டும்: வக்கார் யூனிஸ்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு ஒரே மாதிரி பந்தை பயன்படுத்தினால்தான் பந்து வீச்சாளர்களுக்கு கடினமாக இருக்காது என்று வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டுக்கான பந்து நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. இங்கிலாந்து, மேற்கிந்திய தீவு அயர்லாந்து போன்ற நாடுகள் டியூக்ஸ் வகை பந்தையும், இந்தியா எஸ்.ஜி. பந்தையும், அவுஸ்திரேலியா கூக்கப்புரா பந்தையும் பயன்படுத்துகின்றன.

இதனால் ஒருநாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு சென்று விளையாடும்போது, பந்து வீச்சாளர்கள் அந்த நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள சிரமப்படுகிறார்கள்.

இதனால் டெஸ்ட் கிரிக்கெட் என்றாலே ஒரே மாதிரி பந்துதான் என்பதை ஐசிசி உறுதிப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளரும், தலைசிறந்த வேகப்பந்து வீச்சு ஜாம்பவானும் ஆன வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வக்கார் யூனிஸ் கூறுகையில் ‘‘பல ஆண்டுகளாக நான் டியூக்ஸ் பந்திற்கு ஆதரவாக இருந்துள்ளேன். ஆனால், டெஸ்ட் கிரிக்கெட்டில் உலகம் முழுவதும் ஒரு மாதிரி பந்தை பயன்படுத்த வேண்டும் என நான் உணர்கிறேன். அது எந்த மாதிரி என்பது முக்கியமல்ல. ஆனால், ஐசிசி இந்த முடிவை கட்டாயம் எடுக்க வேண்டும். பந்து வீச்சாளர்கள் உலகின் பல்வேறு இடங்களில் விளையாடும்போது, மாறுபட்ட பந்துகளுக்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக் கொள்வது கஷ்டம்’’ என்றார்.

**றிஷாத் பதியுத்தீன் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி:**

# கால் இறுதிப் போட்டிகளில் ஒலிம்பிக், லக்கி ஸ்டார் அணிகள் வெற்றி





**கல்முனை சுழற்சி நிருபர்**

மருதமுனை யூனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் அம்பாரை மாவட்ட உதைபந்தாட்ட லீக் விலகல் அடிப்படையில் நடாத்தி வந்த றிஷாத் பதியுத்தீன் கிண்ண அழைப்பு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கொரோனா 19 காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்து கடந்த 28ம் திகதி வெள்ளிக்கிழமை மருதமுனை மசூர்மௌலானா விளையாட்டுத் தொகுதி மைதானத்தில் ஆரம்பமாகியது.

வெள்ளியன்று நடைபெற்ற முதலாவது கால் இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினர் தன்னை எதிர்கொண்ட மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகத்தினை பலத்த போட்டிக்கு மத்தியில் (03-01) கோல்கள் அடிப்படையில் வெற்றி கொண்டு முதலாவது அரையிறுதிக்குத் தெரிவாகினர்

சட்டத்தரணி றிப்கான் ஏ. கரீம் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மேற்படி போட்டியின் போது அம்பாறை மாவட்ட மத்தியஸ்த சங்கத்தினைச் சேர்ந்த ஏ. எம். சப்ரான் பிரதம நடுவராகக் கடமையாற்றினார்.

ஞாயிறு அன்று நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் கலந்துகொண்ட கல்முனை லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழகம் தன்னை எதிர்த்து ஆடிய ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினை சுவாரஸ்யமான போட்டிக்கு மத்தியில் (05-02) கோல்கள் அடிப்படையில் வெற்றிகொண்டு இரண்டாவது அரை இறுதிக்கு தெரிவாகின.

சட்டத்தரணி எம்.ஏ.எம். முபீத் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மேற்படி போட்டியின்போது அம்பாரை மாவட்ட மத்தியஸ்த சங்கத்தினைச் சேர்ந்த வை.எல். யஹ்யா அரபாத் பிரதம நடுவராகக் கடமையாற்றினார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை அம்பாரை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் செயலாளரும் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம். ஐ. எம். ஏ. மனாபுடன் இணைந்து யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் ஏ. எம். றஜீ ஆசிரியர் மேற்கொண்டிருந்தார்.

# ஐபிஎல் போட்டி அட்டவணை இன்று வெளியீடு: தொடக்க ஆட்டத்தில் மும்பையுடன் மோதுவது யார்?




ஐபிஎல் போட்டிக்கான அட்டவணை இன்று சனிக்கிழமை வெளியிடப்படும் நிலையில், மும்பை இந்தியன்ஸ் அணியுடன் முதல் ஆட்டத்தில் விளையாடுவது யார் என்பதில் குழப்பம் நிலவி வருகிறது.

ஐபிஎல் 13 சீசன் ஐக்கிய அரபு இராச்சியத்தில் வருகிற 19ந் திகதி தொடங்குகிறது. போட்டி தொடங்குவதற்கு மிகவும் முன்னதாகவே அட்டவணை வெளியிடப்படும். ஆனால் ஐக்கிய அரபு இராச்சியத்தில் துபாய், அபு தாபி, ஷார்ஜா ஆகிய இடங்களில் போட்டி நடைபெற இருப்பதால் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகள் இருக்கும் நிலையில் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு வீரர்கள் தங்குதடையின்றி சென்று வர அனுமதி வாங்க வேண்டியிருந்தது.

சில தினங்களுக்கு முன்புதான் அதற்கான அனுமதி கிடைத்தது. இதற்கிடையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியைச் சேர்ந்தவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கான போட்டியை எப்போது வைத்துக் கொள்வது என்ற நெருக்கடியும் ஏற்பட்டது.

இந்நிலையில் இன்று போட்டி அட்டவணை வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐபிஎல் விதிமுறைப்படி நடப்பு சம்பியனும், 2ம் இடம் பிடித்த அணியும் முதல் ஆட்டத்தில் விளையாட வேண்டும்.

ஒருவேளை சென்னை அணிக்கான போட்டிகள் ஒரு வாரம் கழித்து தொடங்கும் நிலையில் தயாரிக்கப்பட்டால் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் விளையாடும் அணி எது? என்பதை அறிய ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர். முதல் போட்டியிலேயே இரசிகர்களை ஆர்வத்தை சுண்டி இழுக்க ஒளிபரப்பு நிறுவனம் விரும்பும். இதனால் இரண்டு முன்னணி அணிகள் விளையாடவே வாய்ப்புள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 5ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.